# இலக்கு

GLOBAL TAMIL MEDIA CENTRE

வாராந்த மின்னிதழ்

Ilakku2009@gmail.com www.facebook.com/ilakkutamilnews https://twitter.com/Ilakku1

இதழ் 244 | சனி, ஜூலை 22, 2023 | 19 பக்கங்கள்


## கறுப்பு யூலை சிறப்பு இதழ்

# கறுப்பு யூலைக்கு 40 வயது..!



## இலங்கையிலும், சர்வதேசத்திலும் நீதி மறுக்கப்பட்ட தமிழினம் ..!

பா.அரியநேத்திரன்



## மணிப்பூர் எரிகிறது! குருதி கொதிக்கிறது

பேராசிரியர்.மு.நாகநாதன்



## டில்லியில் வெற்றி பெற்றது யாருடைய இராஜதந்திரம்?

அகிலன்

# 13வது திருத்தத்தை நடைமுறைப்படுத்தவேண்டும்



ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தனது இரு நாள் உத்தியோகபூர்வ பயணமாக இந்தியாவுக்கு சென்றுள்ளார்.

இந்த சூழலில், இலங்கை 13வது திருத்தத்தை நடை முறைப் படுத்தவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ள இந்திய பிரதமர் நரேந்திரமோடி தமிழ் மக்களிற்கு கௌரவமான வாழ்வை உறுதி செய்யவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இரு நாடுகளுக்கு இடையில் அதிகளவு தொடர்பினை ஏற்படுத்தக்கூடிய பல உட்கட்டமைப்பு திட்டங்களில் இலங்கையும் இந்தியாவும் கைச்சாத்திட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.


மலையக மக்களுக்கான அபிவிருத்தி உதவிதிட்ட மொன்றையும் இந்திய பிரதமர் அறிவித்துள்ளார். இலங்கை மாகாண சபை தேர்தலை நடத்தவேண்டும் என்ற வேண்டுகோளையும் இந்திய பிரதமர் விடுத்துள்ளார்.

சமத்துவம் நீதி மற்றும் சமாதானத்தை உறுதி செய்வதற்காக இலங்கை புனர்நிர்மாணப் பணிகளை முன்னெடுக்கும்

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

# பூமி வெப்பமாதலை தடுப்பதற்கு உலகம் தவறிவிட்டது

## பிரித்தானியா விஞ்ஞானி




பூமி வெப்பமாதலை தொழில்துறை வளர்ச்சிக்கு முற்பட்ட அளவில் இருந்து 1.5 பாகை செல்சியல் உயர்வுக்கு கட்டுப்படுத்துவது என்று 2015 ஆம் ஆண்டு பரீஸ் நகரத்தில் இடம்பெற்ற காலநிலை மாற்ற மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானத்தை நிறைவேற்ற உலக நாடுகள் தவறிவிட்டதாக ஐக்கிய நாடுகள் சபையின் காலநிலை மாற்றத்திற்கான அமைப்பின் முன்னாள் தலைவர் விஞ்ஞானி பொப் வற்சன் தெரிவித்துள்ளார்.

சீனா, அமெரிக்கா மற்றும் ஐரோப்பா ஆகிய நாடுகளில் கடுமையான வெப்பநிலை மாற்றம் ஏற்பட்டுள்ளது. இத்தாலியில் பல நகரங்களில் வெப்பகதிர் வீச்சு எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன. பல நாடுகளில்

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

# இலங்கை இந்தியா இடையே ஐந்து ஒப்பந்தங்கள் கையெழுத்து

அதிகாரபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இந்தியா சென்றுள்ள இலங்கை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கும், இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கும் இடையில் இரு தரப்பு பேச்சுவார்த்தை நடைபெற்றுள்ளது.

இலங்கை மற்றும் இந்தியா ஆகிய நாடுகளுக்கு இடையிலான உறவுகளின் எதிர்காலத்திற்கான அடித்தளத்தை அமைப்பதே இந்த விஜயத்தின் நோக்கம் என



ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், இந்தியா

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

# சுவீடனுடனான இராஜதந்திர உறவு முறிவடையும் ஈராக் எச்சரிக்கை

சுவீடனில் மீண்டும் முஸ்லீம்களின் புனித நூலான குரான் எரிக்கப் பட்டால் அதனுடனான இராஜதந்திர உறவுகளை முறித்துக் கொள்ளப்போவதாக ஈராக் எச்சரிக்கை விடுத்துள்ளது.

சுவீடனில் மீண்டும் குரானை எரிப்பது தொடர்பாக திட்டமிடப் பட்டதை தொடர்ந்து ஈராக்கில் உள்ள சுவீடன் தூதரகத்தின் மீது மக்கள் தாக்குதல் நடத்தியதுடன், அதற்கு தீவைத்திருந்தனர். இந்த தாக்குதல்களில் சுவீடன் தூதரகத்தின் அதிகாரிகள் யாரும் பாதிக் கப்படவில்லை என தெரிவித்த சுவீடனின் வெளி விவகார அமைச்சர் தாக்குதல்களை தடுப்பதற்கு ஈராக் தவறிவிட்டதாக குற்றம் சுமத்தியுள்ளார்.

தூதரகம் மீதான தாக்குதல்




களை தாம் வன்மையாக கண்டிப்பதாகவும், ஆனால் மீண்டும் முஸ்லீம் மக்களின் புனித நூலை எரித்தால் சுவீடனுடனான இராஜதந்திர உறவுகளை ஈராக் முற்றாக நிறுத்தும் எனவும் ஈராக்கின் பிரதமர் ஹியா அல் சுடானி தெரிவித்துள்ளார்.

ஷியா முஸ்லீம் மக்கள் கடந்த வியாழக்கிழமை (20) சுவீடன் தூதரகத்தை முற்றுகை

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

# தென்னாபிரிக்காவில் இடம்பெறும் பிறிக்ஸ் கூட்டமைப்பு மாநாட்டை தவிர்க்கும் பூட்டீன்





எதிர்வரும் மாதம் தென்னாபிரிக்காவில் இடம்பெறவுள்ள பிறிக்ஸ் கூட்டமைப்பு நாடுகளின் கூட்டத்தில் கலந்து கொள்வதை ரஸ்யாவின் அதிபர் விளமிடீர் பூட்டீன் தவிர்த்துள்ளதாக தென்னாபிரிக்காவின் அதிபர் சிறில் ராமபோசா தெரிவித்துள்ளார்.

உக்ரைனில் இடம்பெறும் போர் தொடர்பான மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பூட்டீன் மீது அனைத்துலக குற்றவியல் நீதி மன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது. தென்னாபிரிக்கா அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்தில் உறுப்பு நாடாக இருப்பதால் பூட்டீனை கைது செய்யுமாறு மேற்குலகம் அழுத்தம் கொடுத்து வருகின்றது.

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

# அமெரிக்க நிறுவனம் திட்டமிட்டு எமக்கு இழப்பை ஏற்படுத்தியது–அதானி



அமெரிக்காவை தளமாகக் கொண்ட ஹின்டன்போர்க் என்ற நிறுவனம் எமது குழுமத்தின் பங்கு சந்தையை வீழ்ச்சியடையச் செய்யும் நோக்கத்துடன் திட்டமிட்டு அறிக்கையை வெளியிட்டதாக இந்தியாவின் அதானி குழுமத்தின் தலைவர் கௌதம் அதானி தெரிவித்துள்ளார்.

இந்த வருடம் ஜனவரி மாதம் நிறுவனம் அதானி குழுமத்தின் நிதி முறைகேடு தொடர்பில் வெளியிட்ட அறிக்கையை தொடர்ந்து அதானி குழுமத்தின் பங்குச் சந்தை சரிந்ததுடன், பல பில்லியன் டொலர்களை அது இழந்திருந்தது. அதானி குழுமத்தின் பங்குகளை வீழ்ச்சியுற வைத்து பின்னர் அதனை கொள்முதல் செய்து இலாபம் பார்க்கும் நோக்கத்துடன் அந்த அறிக்கை வெளியிடப்பட்டதாக கடந்த செவ்வாய்க்கிழமை (18) அதானி குழுமத்தின் பொதுக்குழு கூட்டத்தில் பேசிய அதானி தெரிவித்துள்ளார்.

எம்மீது சுமத்தப்பட்ட பெரும்பாலான குற்றச்சாட்டுக்கள் 2004 - 2015 காலப்பகுதியை கொண்டவை. அவை எல்லாம் தீர்க்கப்பட்ட பிரச்சனைகள், அறிக்கையை சமூகவலைத் தளங்களில் பரப்பி இலாபம் ஈட்டியுள்ளனர்.


நிதிநிறுவனங்களை தரப்படுத்தும் நிறுவனங்கள் எமது தரத்தை இறக்கவில்லை, இந்திய முதலீட்டாளர்கள் எமக்கு ஆதரவுகளை வழங்கினார்கள். அதுவே எமக்கு மீண்டுவர உதவியது. இந்திய பங்குச்சந்தையை வீழ்த்தும் முயற்சி இது என அவர் மேலும் தெரிவித்திருந்தார்.

ஹின்டன்போர்க் நிறுவனத்தின் அறிக்கை அதானி குழுமத்தின் பங்கு சந்தை வர்த்தகத்தில் 145 பில்லியன் இழப்புக்களை ஏற்படுத்தியிருந்தது.

# 800 மில்லியன் பார்வையாளர்களை கைப்பற்றிய ரெலிகிறாம் சமூகவலைத்தளம்

டுபாயை தளமாகக் கொண்ட 2013 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ரெலிகிறாம் என்ற சமூக வலைத்தளம் நாள் ஒன்றிற்கு 2.5 மில்லியன் பார்வையாளர்களை பெற்று வருவதாக அதன் தலைவர் பாவல் டுரோவ் தெரிவித்துள்ளார்.

தகவல்களையும், செய்திகளையும் பரிமாற்றும் செய்யும் இந்த தளம் தற்போது மாதம் ஒன்றிற்கு 800 மில்லியன் பார்வையாளர்களை கொண்டுள்ளது. அதாவது நாள் ஒன்றிற்கு அதன் பார்வையாளர்களின் எண்ணிக்கை தற்போது 2.5 மில்லியனால் அதிகரித்து வருகின்றது.




நிதி வசதிகளை அதிகரிக்கும் நோக்கத்துடன் இந்த வாரம் ரெலிகிறாம் சமூக வலைத்தளம் 270 மில்லியன் டொலர்கள் பெறுமதியான பிணை முறிகளை வெளியிட்டுள்ளது. இந்த தளத்தில்

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

## சமாதானத்தினை ஏற்படுத்தும் நோக்கில்தான் குருந்தூரில் சைவ வழிபாடுகள் தடுக்கப்பட்டதாக காவல்துறையினர் தெரிவிப்பு

*சமாதானத்தினை ஏற்படுத்தும் நோக்கிலேதான் குருந்தூர்மலையில் கடந்த 14ஆம் திகதி சைவத் தமிழ் மக்களின் வழிபாடுகள் தடுக்கப்பட்டதாக முல்லைத்தீவு காவல்துறையினர் 20.07.2023இன்று நீதிமன்றில் தெரிவித்திருந்தனர்.*

*இந் நிலையில் தொல்லியல் திணைக்களத்தின் விளக்கத்தினைப் பெறுவதற்காக குறித்த வழக்கு எதிர்வரும் ஓகஸ்ட்மாதம் 08ஆம் திகதிக்கு வழக்கு தவணையிடப்பட்டுள்ளது.*

**இது தொடர்பில் மேலும் தெரியவருகையில்,**

*கடந்த 14ஆம் திகதி முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு, குருந்தூர்மலையில் பொங்கல் வழிபாடுகளை மேற் கொள்ளச்சென்ற போது சைவத் தமிழ் மக்களின் வழிபாட்டுரிமை மறுக்கப்பட்டிருந்தது.*



*குறிப்பாக கடந்த 13.07.2023அன்று, முல்லைத்தீவு காவல்துறையினரால் குருந்தூர்மலை தொடர்பான வழக்கு நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்றிலே எடுத்துக்கொள்ளப்பட்டு, மறுநாளான 14.07.2023 குருந்தூர்மலையில் இடம்பெற இருக்கின்ற சைவத் தமிழ் மக்களின் பொங்கல் வழிபாடுகளைத் தடுக்குமாறு நீதிமன்றினைக் கோரியிருந்தனர்.*

*இருப்பினும் காவல் துறையினரின் இக் கோரிக் கையினை நீதிமன்றம் நிராகரித்திருந்தது.*

*இந் நிலையில் கடந்த 14.07.2023ஆம் திகதி*

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

## நால்வர் விடுதலையை வலியுறுத்தி தமிழ் நாட்டில் போராட்டம்




*திருச்சி சிறப்பு சிறை முகாமில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் முருகன், சாந்தன், ராபர்ட் பயாஸ், ஜெயக்குமார் ஆகிய நால்வரையும் உடனே விடுவிக்கக் கோரி ஈரோடு வீரப்பன் சத்திரம் பேருந்து நிறுத்தம் முன்பு நான்கு தமிழர் விடுதலைக்கான கூட்டமைப்பு கோரிக்கை ஆர்ப்பாட்டம் நேற்று நடைப்பெற்றது.*

*குறித்த நால்வரும் தமிழக அரசிடம் தம்மை தம் குடும்பத்துடன் இணைக்குமாறு கோரிக்கைகள் விடுத்துள்ள நிலையிலும் எந்த வித நடவடிக்கைகளும் அரசு தரப்பில் இதுவரையில் எடுக்கப்படாததால் அவர்கள் தொடர்ந்து சிறையில் தடுத்து வைக்கப் பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.*

*இந்நிலையில், அவர்களின் விடுதலையை வலி யுறுத்தி தொடர்ந்து நான்கு தமிழர் விடுதலைக்கான கூட்டமைப்பு பல போராட்டங்களை நடத்தி வருகின் றமை சுட்டிக்காட்டத்தக்கது.*

இலக்கு

## இந்தோ சிறிலங்கா அதிகாரப் பகிர்வால் மேலும் ஒடுக்கப்படும் ஈழத்தமிழர் இறைமை

இந்திய அரசும் இலங்கை அரசும் தமது இறைமை அதிகாரங்களை வளர்ந்து வரும் புதிய உலக அரசியல் ஒழுங்குமுறைமையிலும் தமது நாடுகளின் பொருளாதாரக் கூட்டு முயற்சிகளிலும் பகிர்ந்து கொள்வதற்கான ஐந்து புதிய புரிந்துணர்வு உடன்படிக்கைகளில் இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி அவர்கள் சிறிலங்கா ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்காவை புதுடில்லிக்கு அழைத்து 21.07.23இல் கைச்சாத்திட வைத்துள்ளார்.

இந்த ஐந்து உடன்படிக்கைகளில் கால்நடைகளின் வளர்ச்சியை இந்தியா கிழக்கில் மேற்கொள்தல் என்ற உடன்படிக்கை மிக முக்கியமானது. இந்தியா ஈழத்தமிழர்களின் தாயகத்தின் பொருளாதார வளம் மிக்க தென்தமிழீழத்தில் தன்னை கால்நடைப் பண்ணைகள் வழி நிலைநிறுத்தி இஸ்லாமியப் பயங்கரவாதம் தென்னிந்தியக் கடல் எல்லைகள் வழி உள்நாட்டுக்குள் நுழையாது தடுப்பதற்கும் சிறிலங்கா அரசு இந்தியா அல்லாத வேறு எந்த நாட்டையும் பொருளாதார வளர்ச்சியென்ற பெயரில் திருகோணமலை முதல் கல்குடா வரையிலான இந்து மாக்கடல் பகுதிகளில் நிலைநிறுத்துவதைத் தடுப்பதற்கும் உதவுவதால் இந்தியாவின் தேசிய பாதுகாப்புக்கான தேவைக்கு இது அதி முக்கியமானதாக அமைகிறது. அத்துடன் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினர் யுவான் ஜியாஜூன் தலைமையில் சீனக்கம்யூனிஸ்ட் கட்சியின் உயர்மட்டக்குழுவினர் சிறிலங்காவின் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராசபக்சாவைச் சந்தித்து உரையாடிக் கொண்டிருக்கையில் சிறிலங்காவின் இன்றைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்காவுடனான இந்த முற்பாதுகாப்பு உடன்படிக்கைகள் இந்தியாவின் தேசிய பாதுகாப்புக்கு முக்கியத்துவம் வாய்ந்தன என்பது ஈழத்தமிழர்களுக்கும் தெரியும் என்பதால் இந்தியாவின் இந்த முயற்சிகளுக்கு அவர்கள் என்றுமே ஆதரவாகவே இருப்பர். இதனை இந்தியா உணர்ந்து ஈழத்தமிழர்களின் பாதுகாப்பான அமைதிக்கும் வளர்ச்சிக்கும் உதவுவதன் மூலம் ஈழத்தமிழர்களுடன் தன் நல்லுறவை வளர்ப்பது இந்த மாற்றப்படக் கூடிய உடன்படிக்கைகளை விட மாறாத பாதுகாப்பாக இந்தியாவுக்கு அமையும் என்பதையே உலகெங்கும் உள்ள ஈழத்தமிழர்கள் மட்டுமல்ல தமிழகத் தமிழர்களும் எடுத்துரைக்க வேண்டிய நேரமிது.

இந்தியாவின் அனைத்துலகப் பாதுகாப்புக்குச் சிறிலங்காவின் சீனச்சார்பு நிலையில் இருந்து அதனை வெளிக்கொணர அயலவர்களுக்கு முதலிடம் என்ற இந்திய வெளிவிவகாரக் கொள்கைக்கு கீழ் சிறிலங்காவை அரவணைக்க வேண்டிய நிலையில் இந்தியா இருப்பதைச் சிறிலங்கா பயன்படுத்தித் திருகோணமலை மாவட்டத்தில் பொருளாதார வளர்ச்சி என்ற பெயரில் இந்தியாவை நிலைப்படுத்தி இந்தியத் துணையுடன் உருவாக்கப்படவுள்ள அனைத்து பொருளாதார முயற்சிகளிலும் சிங்களவர்களை குடியமர்த்தி தமிழீழத்தின் தலைநகராக முன்மொழியப்பட்ட திருகோணமலையைச் சிங்களமயமாக்கம் செய்து ஈழத்தமிழர்களின் இறைமையை என்றுமே செயல்படுத்த இயலாத நிலைக்குக் கொண்டு வரும் தனது ஈழத் தமிழர் இறைமை ஒடுக்க அரசியல் திட்டத்தை நடைமுறைப்படுத்தத் திட்டமிட்டுள்ளது. இதுவே திருகோணமலையில் பொருளாதாரச் செயற்பாடுகளுக்கான இந்திய சிறிலங்கா உடன்படிக்கையாக இருநாடுகளுக்கும் இடையில் கைச்சாத்தாகியுள்ளது.

அடுத்து தற்போது இந்திய ரூபாவை அனைத்துலக வர்த்தகத்திற்கான டொலருக்கு மாற்று அனைத்துலக நிதியாக தரம் உயர்த்த இந்தியா எடுத்து வரும் அனைத்துலக முயற்சிகளில் சிறிலங்காவிலும் அதன் அனைத்துலக வர்த்தகத்திற்கான நாணய பரிமாற்றத்திற்கு இந்திய ரூபாவை நிலைப்படுத்தும் தனது முயற்சியில் ஐ.பி. எஸ், லங்கா பே ஆகிய நிறுவனங்களுக்கு இடையில் நெட்வேர்க் டு நெட்வேர்க் தொடர்புகளை வலுப்படுத்தும் உடன்படிக்கையான ஒன்றுபட்ட பணம்செலுத்துகை முறைமைக்கான உள்முக உடன்படிக்கை (Unified Payments Interface) சிறிலங்காவாலும் இந்தியாவாலும் கைச்சாத்திடப்பட்டது.

அடுத்த உடன்படிக்கை தென்னிந்தியாவில் இருந்து எண்ணெய் மற்றும் எரிவாயுக் குழாய்களை யாழ்ப்பாணத்துக்கு அமைக்கும் உடன்படிக்கை. இது ரணில் விக்கிரமசிங்கா இந்தியாவுக்குச் சிறிலங்காவில் இருந்து வந்த எண்ணெய் முற்றுரிமை விற்பனையை சீனா அமெரிக்க அவுஸ்திரேலிய எண்ணெய்க் கம்பெனிகளிடை பிரித்து முறியடித்தமைக்கான மாற்று செயற்பாடாக இந்தியாவால் சிறிலங்காவுடன் செய்யப்பட்டுள்ளது. தமிழகத்தில் இருந்து புதுப்பிக்கத்தக்க சக்திகளை சிறிலங்கா பெறுவதற்கான அடுத்த உடன்படிக்கையை இந்தியா செய்து சிறிலங்காவில் எண்ணெய் மின்சாரம் எரிவாயு போன்றவற்றுக்கு அருந்தல் நிலைகள் ஏற்பட்டு இலங்கைத் தீவில்; மக்கள் பாதிப்படைவதைக் குறைக்க உதவியுள்ளது. மேலும் தமிழகத்தில் அமெரிக்காவின் கடற்படைத் தளநிலைப்பாடும் கூட சீன வல்லாண்மை தென்னிந்தியக் கரைவழியாக இந்தியப் பாதுகாப்புக்கு பிரச்சினையாகிவிடாது இருப்பதற்கான அமெரிக்கத் துணை பெறும் முன்னேற்பாடு என்ற வகையில் தமிழகத்துக்கும் ஈழத்தமிழர் தாயகத்துக்குமான தொடர்புகளைப் பலப்படுத்தல் இந்தியாவின் தவிர்க்க இயலாத சமகாலத் தேவையாக உள்ளதென்பதையும் ஈழத்தமிழர்கள் நன்கறிவர். இந்த அடிப்படையில் தான் பலாலி சென்னை திருச்சி மதுரை விமானச்சேவைகளின் விரிவாக்கங்களும் காங்கேசன்துறை நாகபட்டினம் கப்பல் போக்குவரத்து இணைப்பும் மன்னாருக்கான பாம்பன் புயலால் பாதிப்புற்ற கடல் வழிப் புகையிரதப் பாலத்தை முன்னர் இருந்தது போல் திரும்பவும் மீளமைப்பதும் வடக்கின் சந்தை விரிவாக்கத்துக்கு உதவும் புகையிரதப்பாதைக்கு மூவாயிரம் கோடி இலங்கை ரூபா செலவழிப்பும் உள்ளன.

மக்களுடன் மக்கள் இணைப்புத் தொடர்பு என்னும் அரசியல் தந்திரோபாயமும் தொழில்நுட்ப அறிவியல் சந்தை இணைப்புத் தொடர்புகள் என்ற பொருளாதாரத் தந்திரோபாயமும் இந்தியாவின் அயலவர்களுக்கு முதலிடம் என்ற வெளிவிவகாரக் கொள்கையின் அடிப்படையில் இந்தியா தனது சமகாலத் தேவைகளைக் கருத்தில் கொண்டு நிறைவேற்றுகிறது. இதனைச் சில தமிழ் அரசியல் செயற்பாட்டாளர்கள் தங்களால் இந்தியக் கொள்கை வகுப்பாளர்கள் நெறிப்படுத்தப்பட்டதன் பலன் எனப் பரப்புரை செய்து தங்களின் அரசியல் அறியாமையை உலகுக்கு வெளிப்படுத்தவும் செய்துள்ளனர்.

அவ்வாறே 36 ஆண்டுகளாக நடைமுறைப்படுத்தப்படாது கிடப்பில் சிறிலங்காவின் ஆட்சியாளர்களால் வளர்த்தி வைக்கப்பட்டு செயற்பாட்டுக்கு கொண்டுவரப்படாத வகையில் சிறிலங்கா நீதிமன்றங்களால் முப்பது முறை அதற்கான பல்வேறு மதிப்புரைத் தீர்ப்புகள் பெற்று மகிந்த ஆட்சிக்காலத்தில் வடக்கு கிழக்கு ஒருங்கிணைக்கப்பட்ட மாகாணசபை என்ற கட்டமைப்பும் கலைக்கப்பட்டு உருக்குலைந்த நிலையில் உள்ள இந்திய இலங்கை உடன்படிக்கையின் அடிப்படையில் 13ம் திருத்தத்தை நடைமுறைப்படுத்தல் பொலிஸ் அதிகாரம் இல்லாத மாகாணசபைகளை ஏற்றல், தேர்தல் நடக்கும் வரை இடைக்கால சபையொன்றைப் பெறுதல் என்பதை ஈழத்தமிழர்களுக்கான அரசியல் தீர்வுக்கு உதவமென ஈழத்தமிழ் அரசியல்வாதிகள் இந்தியப் பிரதமரை அழுத்தங்கள் கொடுக்குமாறு கேட்ட நிலையில் அதற்குரிய அழுத்தங்கள் கூட இந்தியப் பிரதமரால் கொடுக்கப்படாது சிறிலங்கா கண்ணியமான வாழ்வை தமிழர்க்கு அளிக்கும் என்னும் நம்பிக்கையை மட்டுமே அவர் வெளிப்படுத்தியுள்ளார். சிறிலங்கா ஜனாதிபதி இந்த நம்பிக்கை குறித்துக் கூட எதுவுமே பதிலளிக்கவில்லை. இந்நிலையில் ஈழத்தமிழ் அரசியல்வாதிகளின் கையாலகாத்தனத்தால் இன்றைய இந்தோ சிறிலங்கா உடன்படிக்கைகளால் மேலும் ஒடுக்கப்படும் நிலையையே ஈழத்தமிழர் இறைமை அடைந்துள்ளது என்பதை இலக்கு எடுத்துரைத்து இனி ஈழத்தமிழ்மக்கள் தாயகத்திலும் புலத்திலும் ஒருங்கிணைந்து தமக்கான தீர்வுகளை உருவாக்கி இந்தியாவுக்கு மட்டுமல்ல உலக நாடுகள் அனைத்துக்கும் வெளிப்படுத்தியே தங்களுக்கான பாதுகாப்பான அமைதியையும் வளர்ச்சிகளையும் பெறலாமென்பதே இலக்கின் எண்ணமாக முன்வைக்கப்படுகிறது. ஈழமக்கள் சபைகள் மலரட்டும். ஈழமண்ணும் ஈழமக்களும் நலம்பெறட்டும்.

**ஆசிரியர்**



# டில்லியில் வெற்றி பெற்றது யாருடைய இராஜதந்திரம்?

அகிலன்

தமிழ் அரசியல் பரப்பில் மிகவும் பரபரப்பாக எதிர்பார்க்கப்பட்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் புதுடில்லி விஜயம் “சப்” என்று முடிவுக்கு வந்துள்ளது. வழமைபோலவே “அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்ப்படுத்தி, தமிழ் மக்கள் கண்ணியத்துடனும் மரியாதையுடன் வாழ்வதை இலங்கை உறுதி செய்ய வேண்டும்” என இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தினார். இதற்குப் பதிலளித்த ஜனாதிபதி ரணில், அதிகாரங்களைப் பகிர்தல் உள்ளிட்ட வடக்குக், கிழக்கின் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான யோசனை ஒன்றை இந்த வாரம் தான் முன்வைத்திருப்பதாகவும், அது குறித்து கட்சித் தலைவர்களுடன் பேசுவதாகவும் தெரிவித்து மோடியின் பாராட்டுக்களைப் பெற்றுக் கொண்டுள்ளார்.

ஆக மொத்தத்தில் மோடிக்கு கடிதம் எழுதிவிட்டு காத்திருந்த தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு ஏமாற்றம்தான் எஞ்சியுள்ளது. இது ஒன்றும் எதிர்பார்க்காததல்ல. இலங்கை-இந்திய அரசியலை உன்னிப்பாகஅவதானிப்பவர்களுக்கு இதற்கு மேல் ஒரு அங்குலம் கூட நகரப்போவதில்லை என்பது நன்கு தெரியும். தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு அவர்களுடைய உள்ளூர் அரசியலுக்கு, “மோடிக்கு கடிதம் எழுதுவது” தேவையாக இருந்திருக்கின்றது. உள்நாட்டு, பிராந்திய அரசியல் நிலைமைகளை நன்கு அவதானித்துள்ள ரணில், தனக்கு எந்தச் சேதமும் ஏற்படாத வகையில், நிதானமாகவும், விவேகமாகவும் காய்களை நகர்த்தியிருக்கின்றார்.

## ரணிலின் நகர்வுகள்

புதுடில்லிக்குப் புறப்படுவதற்கு முன்னதாக அவசரமாக தமிழ்க் கட்சிகளின் எம்.பி.க்களை சந்தித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடமிருந்து வரக்கூடிய கேள்விகளுக்கு கொழும்பில் வைத்தே பதிலளித்திருக்கின்றார். “13” ஐ வழங்கு வதற்குத் தயார். ஆனால், பொலிஸ் அதிகாரத்தை மட்டும் தரமுடியாது - என்பதுதான் ரணிலின் பிந்திய நிலைப்பாடு. 13 ஐ முழுமையாக நடைமுறைப் படுத்துவதானால், அனைத்துக் கட்சிகளின் ஆதரவு தேவை என்றும் ஜனாதிபதி தெரிவித்ததாக தகவல் வெளிவந்திருந்தது.

புதுடில்லியில் மோடியிடமும் ஜனாதிபதி இதனைத்தான் சொல்லியிருக்கின்றார். “தேசிய ஒருமைப்பாடை ஏற்படுத்திக்கொண்டு இந்த விடயத்தில் இணைந்து செயற்பட வேண்டுமென அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும் நான் அழைப்பு விடுத்திருக்கிறேன். இது தொடர்பில் பொருத்தமான சட்டத்தை அரசாங்கம் பாராளுமன்றத்தில் முன்வைக்கும். இது குறித்து இந்திய பிரதமருக்கு விரிவான விளக்கத்தை வழங்கியிருக்கிறேன்”

உண்மையில் ரணிலிடமிருந்து இதற்கு மேலாக எதிர்பார்க்க முடியாது. அதேவேளையில், இதற்குமேல் ரணிலுக்கு அழுத்தம் கொடுத்து அவரை சங்கடமான ஒரு நிலைக்குத் தள்ளுவதற்கும் மோடி விரும்பவில்லை என்பதும் புதுடில்லிப் பேச்சுக்களின் போது புலப்பட்டது. அதனைவிட, 13 க்கு மேலாக செல்லுமாறு வலியுறுத்துவதும் டில்லியின் நிகழ்ச்சி நிரலில் இல்லை. இன நெருக்கடி என்பதற்கு அப்பால், பரஸ்பர பொருளாதார நலன்களில்தான் இரு தரப்பினரது கவனமும் அதிகளவுக்கு குவிந்திருந்தது.



ரணில் டில்லியில் நின்ற வேளையில் கைச்சாத்திடப்பட்ட ஐந்து உடன்படிக்கைகள், வடக்கு - கிழக்கில் தன்னை நிலை நிறுத்துவதில் இந்தியா முக்கியமான மைல் கல்லை எட்டியிருக்கின்றது என்பதை வெளிப் படுத்துகின்றது. இந்தியாவுக்கு உண்மையில் தேவையாக இருந்ததும் அதுதான். அதற்காக 13 ஐ துரும்புச் சீட்டாக இந்தியா வைத்திருக்கின்றதா?

## உடன்படிக்கைகள்

இந்தியா - இலங்கை ஆகிய நாடுகளுக்கு இடையில் கால்நடை பராமரிப்புத் துறையில் கூட்டு நோக்கத்தின் பிரகடனம், இந்தியா மற்றும் இலங்கை இடையில் புதுப்பிக்கத்தக்க எரிசக்திக்கானபுரிந்துணர்வு உடன்படிக்கை, திருகோணமலை மாவட்ட திட்டங்களின் பொருளாதார அபிவிருத்திக்கான புரிந்துணர்வு உடன்படிக்கை, இலங்கைக்குள் யூ.பி.ஐ டிஜிட்டல் கொடுக்கல் வாங்கல் முறையை மேம்படுத்தல் மற்றும் சம்பூர் சூரிய மின்சக்தி திட்டத்திற்கான அனுமதி போன்ற உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டு கோவைகள் கைமாற்றப்பட்டுள்ளன.

ரணிலின் விஜயத்துக்கு முன்னோடியாக தமிழ்க் கட்சிகள் அனைத்துமே போட்டி போட்டுக்கொண்டு மோடிக்கு கடிதங்களை எழுதின. ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி 13 ஐ முழுமையாக நடைமுறைப்படுத்த ரணிலுக்கு அழுத்தம் கொடுங்கள் என்ற கோரிக்கையை முன்வைத்தது. விக்னேஸ்வரனும் அதில் இணைந்திருந்தார். தமிழரசுக் கட்சி இலங்கை - இந்திய உடன்படிக்கை முழுமையாக அமுல் செய்யப்பட வேண்டும். 13க்கு மேலாக செல்ல வேண்டும் எனக் கடிதம் எழுதியது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியோ 13 வேண்டாம். சமஷ்டிதான் வேண்டும் என்றது. தமிழ் சிவில் சமூகம் என்ற பெயரில் பிரமுகர்கள் சிலர் அனுப்பிய கடிதம் மாகாண சபைத் தேர்தல் உடன் வேண்டும் என வரியுறுத்தியது.

இந்தக் கடிதங்கள் அனைத்தும் மோடியின் கைகளுக்குச் சென்றடைவதற்கு முன்னதாகவே தமிழ்க் கட்சிகளை அழைத்த ஜனாதிபதி தனது நிலைப்பாட்டைத் தெளிவாக்கிவிட்டார். ஜனாதிபதி அனைத்து தமிழ்க் கட்சிகளையுமே பேச்சுக்கு அழைத்த போதிலும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வழமைபோல அதனைப் பகிஷ்கரித்தது. ஏனைய கட்சிகள் பேச்சுக்களில் பங்கேற்றன.

## ரணிலின் நிகழ்ச்சிநிரல்

இந்தக்கூட்டத்தில் பேசப்படுவதற்காக 15 விடயங்களை உள்டக்கிய நிகழ்ச்சி நிரல் ஒன்றை ஜனாதிபதி செயலகம் தயாரித்து வைத்திருந்தது. பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம், ஊழல் ஒழிப்புச் சட்டமூலம், உண்மையைக் கண்டறியும் பொறிமுறை குறித்த சட்டமூலம், தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கச் சட்டமூலம், இழப்பீட்டுக்கான அலுவகம், காணாமல் ஆக்கப் பட்டோர் அலுவலகம், அரசியல் கைதிகளுக்கான பொது மன்னிப்பு என பல விடயங்களை உள்ளடக்கியதாக இந்த நிகழ்ச்சி நிரல் அமைந்திருந்தது.

இவை குறித்து ஒவ்வொன்றாகப் பேசினால் நேரம் போய்விடும். இறுதியில் அதிகாரப் பகிர்வு - அரசியல் தீர்வு என்பதை எடுத்தால் அதற்கு அதிகநேரம் இருக்காது என ஜனாதிபதி திட்டமிட்டிருக்கலாம். அது இறுதியாக வரும் போது அதற்கு ஆதரவாக தமிழ் எம்.பி.க்களை தலையாட்டச் செய்துவிடலாம் எனபது ஜனாதிபதியின் கருத்தாக இருந்திருக்கலாம். நிகழ்ச்சி நிரலின்படி ஒவ்வொரு விடயமாக ஆராய்ந்துகொண்டிருந்த போது, திடீரென குறக்கிட்ட சம்பந்தன், அதெல்லாம் இருக்கட்டும் அதிகாரப் பரவலாக்கல் குறித்த உங்களுடைய திட்டத்தை வெளிப்படுத்துங்கள். அதற்காகத்தான் நாங்கள் வந்திருக்கின்றோம் என்று சீற்றத்துடன் தெரிவித்தார்.

“நிகழ்ச்சி நிரலின்படி செல்வோம்” என்றார் ரணில். “இல்லை முடியாது. நாம் வந்திருப்பது அரசியல் தீர்வு குறித்து பேச. அதற்கு முதலில் பதிலளியுங்கள்” என்றார் சம்பந்தன் விடாப்பபடியாக. இந்த இடத்தில் ரணிலுக்கு ஆதரவாக, அமைச்சர்களோ, வேறு நாடாளுமன்ற உறுப்பினர்களோ குரல் கொடுக்காததால் அதிகாரப் பகிர்வு குறித்த தன்னுடைய நிலைப் பாட்டை விளக்கத் தொடங்கினார் ரணில்.

## சம்பந்தனின் சீற்றம்?

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை நடை முறைப்படுத்த ஆளும் தரப்பு என்ன

தொடர்ச்சி 18 ஆம் பக்கம்



# கறுப்பு யூலை அரசியலில் ஏற்படுத்திய தாக்கம் என்ன?

கலாநிதி **க.சர்வேஸ்வரன்** செவ்வி

**இலங்கை அரசியலில் பாரிய திருப்பம் ஒன்றை ஏற்படுத்திய கறுப்பு யூலை என வர்ணிக்கப்படும் இனப்படுகொலை இடம்பெற்று இடம்பெற்று நாற்பது ஆண்டுகள் நினைவு கூரப்படுகின்றது. இந்த நாற்பது ஆண்டுகளில் ஜூலைப் படுகொலைகள் ஏற்படுத்திய தாக்கங்கள் குறித்து அரசறிவியல்துறை விரிவுரையாளரும் ஆய்வாளருமான கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன் அனைத்துலக உயிரோடைத் தமிழின் தாயகக்களம் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு தெரிவித்த கருத்துக்களை இலக்கின் வாசகர்களுக்காக இங்கே தருகின்றோம்.**

**தமிழர்களுடைய அரசியலை பொறுத்தவரையில் கறுப்பு யூலை எவ்வாறான ஒரு தாக்கத்தை அல்லது மாற்றத்தை ஏற்படுத்தியிருந்தது.**

*கறுப்பு யூலை என்பது 1983 ஆம் ஆண்டு இலங்கைத் தீவு அனைத்து தீவும் அடங்கிய அதாவது யாழ்ப்பாணம் முதல் தென்னிலங்கை வரை அடங்கிய மிகப் பெரிய தமிழர்களுக்கெதிரான இன அழிப்பு தாக்குதலை மையப்படுத்தியே நாங்கள் கறுப்பு யூலை தினத்தை ஆண்டாண்டு காலமாக நினைவு கூர்ந்துவருகிறோம். காரணம் அந்த கறுப்பு யூலை ஏற்படுத்திய தாக்கம் என்பது 1948 களிலிருந்து நடைபெற்ற இன ஒடுக்குமுறையினுடைய ஒரு உச்சபட்ச வடிவமாக இருந்தது. ஏறத்தாழ 3000 இற்கும் மேற்பட்ட மக்கள் நாடு முழுவதும் கொல்லப்பட்டார்கள் பல்லாயிரக்கணக்கான பேர் பல்வேறு காயங்களுக்கோ அல்லது தாக்குதல்களுக்குள்ளாகி வைத்தியசாலைகளில் இருந்தார்கள். பல பத்தாயிரம் பேர்கள் வந்து வடக்குக்கும் கிழக்குக்கு அனுப்பப்பட்டார்கள் அகதிகளாக அவர்களுடைய சொத்துக்கள், வர்த்தக நிலையங்கள் அனைத்தும் சூறையாடப்பட்டன. தமிழ் மக்கள் நிர்வாணப்படுத்தப்பட்டு அதனை சுற்றி சிங்களவர்கள் நடனமாடுகின்ற போன்ற விடயங்கள் அல்லது வர்த்தக நிலையங்கள், வீடுகள் எரிக்கப்பட்டதை கொழுந்துவிட்டெரிகின்ற காட்சி எல்லாம் சர்வதேச தொலைக்காட்சிகளிலும் ஏனைய ஊடகங்களிலும் வெளி வந்து இலங்கையிலேயே சிங்களவர்கள் ஒரு கொடியவர்கள் ஒரு அநாகரிகமானவர்கள் என்று சொல்லக்கூடிய ஆதி வாசிகள் ஆதி மக்கள் போன்ற ஒரு படம் உலகம் முழுவதும் வந்தது.*

*அதாவது அரசியல் ரீதியாக இரண்டு விடயங்கள் ஒன்று தமிழ் மக்களுக்கெதிரான இன அழிப்புத் தாக்கலுடைய ஒரு உச்சபட்ச நிகழ்ச்சியாகவும் அதே வேளை இந்த இலங்கையிலே சிங்கள பௌத்த மேலாதிக்கவாதிகள் தமிழருக்கெதிராக தொடர்ச்சியாக செய்து வரும் ஒடுக்குமுறைகள் வந்து உலகறிய செய்யப்பட்ட ஒரு நிகழ்வாக உள்ளது. மூன்றாவதாக ஆங்காங்கே சிறிது சிறிதாக நடைபெற்ற அரசுக்கெதிரன அரசினுடைய ஒடுக்குமுறைக்கு கெதிராக நடைபெற்ற ஒரு சில வன்முறைப் போராட்டங்கள் என்பது தொடர்ச்சியான அரசுக்கெதிரான ஒரு போராக பரிணாம வளர்ச்சியடைகின்ற ஆரம்பமாகவும் அது இருந்தது. இண்டைக்கு அது 40ஆவது ஆண்டை எட்டியிருக்கிறது.*

*இந்த திருப்பு முனை என்பது இரண்டு விடயம் நாம் சொல்லக்கூடியது தமிழ் மக்களினுடைய இன அழிப்பு விடயம் ஒரு உச்சபட்சமாகி ஒரு யுத்தம் இரு தரப்பிற்கும் இடையிலான ஒரு யுத்தமாகப் பரிணமித்தது என்பதையும் இலங்கை தமிழ் மக்களுக்கெதிரான இன ஒடுக்குமுறை அடக்கு முறை என்பது உலகறிய செய்யப்பட்டதாகவும் இருந்தது. அந்த வகையிலே இந்த கறுப்பு யூலை என்பது இலங்கை அரசியல் வரலாற்றில் முக்கியத்துவம் பெறுகிறது.*

**ஆம் கறுப்பு யூலை இடம்பெற்று 40 வருடங்கள் கடந்திருக்கின. இன்றைய நிலைமையில் சிங்கள மக்கள் மற்றும் சிங்கள தலைவர்களின் அணுகுமுறையில் ஏதாவது மாற்றம் ஏற்பட்டிருப்பதை காணக்கூடியதாக இருக்கின்றதா?**

*சிங்கள மக்களின் மனதில் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அந்த மாற்றம் வந்து சாதாரண மாற்றம் அல்ல. காரணம் இந்த 30 ஆண்டுக் கால யுத்தம் என்பது ஒரு புறம் சர்வதேச மயப்படுத்தி இலங்கையினுடைய இன ஒடுக்குமுறையை சர்வதேச மயப்படுத்தி சர்வதேச தலையீடுகள் ஆங்காங்கே சில சில தலையீடுகளுக்கோ அல்லது தலையீடுகளுக்கான முயற்சிகளுக்கோ வழிவகுத்ததாயினும் கூட சிங்களவர்களுக்கு தமிழர்களை அழித்தொழிக்க வேண்டுமென்ற ஒரு வெறியை இன்னொரு பக்கம் ஏற்படுத்தி இருக்கின்றது. தமிழர்கள் எண்ணிக்கையில் குறைவாக இருந்த போதும் இலங்கை ஒரு சிங்கள பௌத்த நாடாக மாற்றுகின்ற தங்களுடைய திட்டத்திற்கு தமிழர்கள் தடையாக இருக்கிறார்கள். ஆகவே தமிழர்களை அழத்தொழிக்க வேண்டும் என்கின்ற மனோபாவம் வந்து சிங்கள மக்கள் மத்தியிலே குறிப்பிடத்தக்க அளவிற்கு அதாவது நான் சொல்லுகிறேன் சிங்கள மக்கள் எல்லோரும் அப்பிடி நிற்கிறார்கள்.*

*சிங்கள மக்கள் மத்தியில் சிங்கள பெரும் தேசிய வாதம் என்கிறதைவிட சிங்கள மேலாதிக்கவாதிகள் மத்தியிலே அது மிக அதிகமாக ஊறியிருக்கிறது. காரணம் இந்த 30 ஆண்டு கால யுத்தத்திலே இரண்டு தரப்பினருக்கும் மிக பெரிய அழிவுகளை ஏற்படுத்தியிருக்கின்றன. அதுவும் தமிழ் மக்களுக்கு மிக மிக அதிகமான அழிவுகள், உயிரிழப்புக்களும் சொத்திழப்புக்களும் பல இலட்சம் பேர் நாட்டை விட்டு ஓடினர் என்பதும் ஏற்பட்டிருக்கிறது. இருந்தபோதும் இலங்கையை ஆட்சி செய்கின்ற கோட்பாடு என்பது இலங்கை ஒரு சிங்கள பௌத்த நாடு என்பதும் இலங்கையில் இருக்கின்ற என்றும் பிழையான பொய்யான போலியான ஒரு கருத்துருவாக்கத்திலிருந்து வந்திருப்பது என்பதும் அதற்கு தமிழ் மக்களுடைய உரிமைப்*

தொடர்ச்சி 19 ஆம் பக்கம்

# கறுப்பு யூலைக்கு




# நீதி மறுக்கப்பட்ட தமிழினம் ..!

பா.அரியநேத்திரன்

அன்று 1983, யூலை,23,ல் இலங்கை தலைநகர் கொழும்பில் நடந்த தமிழினப்படுகொலை இடம்பெற்று 2023, யூலை,23, இன்று 40, வருடங்கள் நிறைவுறுகிறது.



இலங்கை சுதந்திரம் அடைந்ததன் பின்னர் தமிழ் மக்கள் மீது பல தடவைகள் தாக்குதல் நடத்தப்பட்ட போதிலும், 1983ஆம் ஆண்டு நடத்தப்பட்ட தாக்குதல் தமிழர்களுக்கு பாரிய விளைவுகளை ஏற்படுத்தியிருந்தது. கறுப்பு யூலை ஏற்படுவதற்கான காரணம்.

யாழ்ப்பாணம் திருநெல்வேலி பகுதியில் இராணுவத்தினர் பயணித்த வாகனமொன்றின் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் 1983,யூலை 23ஆம் தேதி இரவு 11.30 மணியளவில் தாக்குதல் நடத்தியிருந்தனர்.

இந்த தாக்குதல் சம்பவத்தில் 13 ராணுவ சிப்பாய்கள் உயிரிழந்திருந்ததாக கூறப்பட்டது.

உள்நாட்டு யுத்தம் ஆரம்பிக்கப்பட்ட காலப் பகுதியில் இந்த தாக்குதல் சம்பவம் தென் பகுதியிலுள்ள சிங்கள மக்களை பெரும் அதிர்ச்சிக்கு உள்ளாகியிருந்தது.

கண்ணி வெடித் தாக்குதல் நடத்தப்பட்ட பின்னர், முற்றுகைத் தாக்குதலும் நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த தாக்குதல் சம்பவத்தில் 13 ராணுவத்தினர் முதலில் உயிரிழந்திருந்தனர், அதன் பின்னர் காயமடைந்த இரண்டு ராணுவத்தினர் உயிரிழந்ததை அடுத்து, எண்ணிக்கை 15ஆக அதிகரித்திருந்தது.

இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பிலான தகவல்கள் மறுநாள் வெளியாகிய நிலையில், தென் பகுதியில் வாழ்ந்த தமிழ் மக்கள் மீது சிங்களவர்கள் தாக்குதல்களை நடத்த ஆரம்பித்திருந்தார்கள்.

யாழ்ப்பாணத்தில் உயிரிழந்த ராணுவ சிப்பாய்களின் சடலங்களை கொழும்பு பொரள்ளை மயாகத்தில் நல்லடக்கம் செய்ய அரசாங்கம் தீர்மானித்த நிலையில், பொரள்ளை பகுதிக்கு உயிரிழந்தவர்களின் உறவினர்கள் வருகைத் தந்திருந்தனர்.

இந்த நிலையில், தமிழீழ விடுதலைப் புலிகள் கொழும்பில் தாக்குதல் நடத்த வருகை தந்துள்ளதாக பொய் கருத்துக்கள் வெளியாகிய நிலையில், சிறியளவில் ஏற்பட்ட வன்முறை நாடு தழுவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டது.

கொழும்பு மாத்திரமன்றி மலையகத்தில் வாழ்கின்ற தமிழ் மக்கள் மீதும் வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன.

இந்த வன்முறை சம்பவத்தினால் பல தமிழர்கள் வெட்டி கொலைசெய்யப்பட்டதாகவும், பலர் துடிக்க துடிக்க எரியூட்டி கொலை செய்யப் பட்டதாகவும் கூறப்படுகின்றது.

யூலை 23 தொடங்கி ஒரு கிழமை நீடித்த இனப்படுகொலையில் தமிழ் மக்கள் 3,000 பேர் வரை உயிரிழந்திருக்கக் கூடும் என அப்போது தெரிவிக்கப்பட்டது முதியவர்கள், பெண்கள், குழந்தைகள் என்ற வேறுபாடின்றி அனைவரும் தாக்கப்பட்டனர்.

பத்தாயிரத்துக்கு மேற்பட்ட தமிழர் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. அது ஓர் இனப்படுகொலை. தமிழர்களைக் காக்க அரசு முற்படவே இல்லை. இந்த நேரம் தமிழர்களைப் பற்றிக் கவலைப்படுவதற்கில்லை என்று அதிபர் ஜெயவர்த்தனா வெளிப்படையாகவே பேட்டியளித்தார். சில இடங்களில் சிங்களக் காடையர்களோடு அரசப் படையினரும் சேர்ந்து கொண்டு தமிழர்களைத் தாக்கினர். அடக்குமுறை அரசப் பயங்கரவாதமாக உருக்கொண்டது. தமிழ் மக்கள் செய்வதறியாது தவித்தார்கள். ஏராளமானவர்கள் ஏதிலிகளாக தமிழர் தாயகப் பகுதிகளுக்குப் பயணமானார்கள்.

தமிழர்களுக்கான பாதுகாப்பு வடக்கு கிழக்கு தமிழர் தாயகம் மட்டுமே என்பதை யூலை கலவரம் அன்று உறுதி செய்தது.

யூலைப் படுகொலை தற்செயலாக நடந்த ஒன்றன்று. அது சிங்களப் பேரினவாதத்தால் நன்கு திட்டமிட்டு நடத்தப்பட்டது என்பதை வரலாற்று ஆய்வாளர்கள் உறுதி செய்துள்ளனர். உயர் பாதுகாப்பு நிறைந்த .கொழும்பு வெலிக்கடைச்

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

# கறுப்பு யூலை
## இனப்படுகொலையும் அதனை சுற்றி இடம்பெற்ற
# பூகோள அரசியலும்

— வேல்ஸ் இல் இருந்து **அருஸ்**

முள்ளிவாய்க்கால் இன அழிப்பு இடம்பெறும்வரை கறுப்பு ஜூலை இனப்படுகொலை என்பது காலம் காலமாக இலங்கை அரசு தமிழ் இனத்தின் மீது மேற் கொண்டுவந்த இன அழிப்பின் மிகப்பெரும் வடிவமாக பார்க்கப்பட்டு வந்தது. ஆனால் முள்ளிவாய்க்கால் இனஅழிப்பு என்பது இலங்கை அரசு தனித்தே மேற்கொள்ளவில்லை என்பது தான் யதார்த்தமானது.

கறுப்பு ஜூலை இனப்படுகொலையை உலக நாடுகள் தமது நலனை முன்நிறுத்தி இராஜ தந்திர ரீதியில் அணுகியிருந்தன. அதாவது பாதிக் கப்பட்ட தமிழ் மக்களுக்கு பாதுகாப்பையும், அரசியல் உரிமைகளையும் வழங்கவோ இல்லை குற்றமிழைத்தவர்களை தண்டிக்கவோ அவர்கள் முற்படவில்லை.



இனப்படுகொலை இடம்பெற்று ஒரு மாதத்திற்குள் அமெரிக்காவின் படைத்துறை விமானம் மிகவும் இரகசியமாக கொழும்பில் தரையிறங்கியது. அந்த விமானத்தில் இரகசியமாக இலங்கைக்குள் நுழைந்தவர் அமெரிக்காவின் பாதுகாப்புத்துறை செயலாளர் கஸ்பர் வெயின் பேர்கர். அவர் அன்றைய இலங்கையின் அரச தலைவர் ஜே.ஆர் ஜெயவர்த்தனாவுடன் தேநீர் அருந்தி, தமது நலன்களை இலங்கையில் விஸ் தரிக்கும் திட்டத்தை வகுத்து சென்றிருந்தார்.

எரிபொருள் நிரப்புவதற்காகவே அமெரிக் காவின் படைத்துறை விமானம் தரையிறங்கியதாக கூறப்பட்டாலும், அதில் அமெரிக்க படை அதிகாரிகள் வந்தது என்பது தனது பாதுகாப்புக்கு மிகப்பெரும் அச்சுறுத்தலாகவே இந்தியா மட்டு மல்லாது சோவியத்து ஒன்றியமும் கருதியிருந்தன.

1983 ஆம் ஆண்டு இடம்பெற்ற இனப்படு கொலையால் பாதிப்படைந்த இலங்கையின் பொருளாதாரத்தை சீர் செய்யும் முகமாக இலங் கைக்கு பொருளாதார உதவிகளை வழங்கி அதற்கு மாற்றீடாக அமெரிக்காவின் கடற்படை தளம் ஒன்றை திருமலையில் அமைப்பதற்காகவே அவர் வந்து சென்றதாக இந்திய ஊடகங்கள் தெரிவித்தன.

அதேசமயம், இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலையை பிரித்தானியா, ஐரோப்பிய நாடுகள் உட்பட பல நாடுகள் கண்டித்ததால் அதனை ஜே.வி.பியே மேற்கொண்டதாக காண்பிப் பதற்கு ஜே.ஆர் முற்பட்டிருந்தார். ஜே.வி.பி அமைப்பு சோவியத்து ஒன்றியத்தின் கே.ஜி.பி என்ற உளவு அமைப்பினால் வழிநடத்தப்படுவதாக அன்று நம்பப்பட்டது.

மறுவளமாக இலங்கை அரச தலைவரை



ஆகஸ்ட் 5 ஆம் நாள் 1983 ஆம் ஆண்டு தொலைபேசியில் தொடர்புகொண்ட இந்திய பிரதமர் இந்திராகாந்தி இலங்கை ஒரு பூகோள ஆடுகளமாக உள்ளதாகவும், அதில் இந்தியாவின் முக்கியத்துவத்தை உணர்ந்துகொள்ள வேண்டும் என கேட்டுக்கொண்டதுடன், தமிழ் மக்களின் இனப்பிரச்சனை தீர்வில் இந்தியா ஒரு முக்கிய தரப்பாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் எனவும் வலுயுறுத்தியிருந்தார்.

தமிழ் மக்களுக்கான நியாயமான அரசியல் தீர்விலும், இலங்கையில் அரசியல் உறுதித்தன் மையிலும் தான் இந்தியாவின் பாதுகாப்பு தங்கியுள்ளது என்பதையும் அவர் ஜே.ஆர் ஜெயவர்த்தனாவுக்கு உரைக்க தவறவில்லை. அன்றைய இந்தியாவின் வெளிவிவகார அமைச்சர் நரசிம்மராவை ஏற்க மறுத்த ஜெயவர்த்தனாவை முடிவை மாற்றவைத்து அவருடன் பேசவும் வைத் திருந்தார் காந்தி.

ஆகஸ்ட்டு 15 ஆம் நாள் செங்கோட்டையில் இடம்பெற்ற இந்தியாவின் சுதந்திரதின விழாவிற்கு தமிழர் விடுதலைக் கூட்டணியை சேர்ந்த அமிர்தலிங்கத்தை சிறப்பு விருந்தினராக அழைத்த இந்திராகாந்தி இலங்கையில் இடம்பெற்ற இனக் கலவரம் ஒரு இனப்படுகொலை என தனது உரையில் குறிப்பிட்டதுடன், தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளுக்கும், பாதுகாப்புக்கும் இந்தியா துணைநிற்கும் எனவும் எடுத்துரைத்திருந்தார்.

ஆனால் பாகிஸ்தானுக்குள் ஊடுருவி பங்களாதேசத்தை உருவாக்கியது போல இலங்கைக்குள் இந்திய படையினர் நுளைந்து தமிழீழத்தை உருவாக்கும் இந்திரா காந்தியின் திட்டத்தை தடுத்தது என்ன?



இந்தியா இலங்கைக்குள் சென்று தமிழீழம் அமைத்தால் இலங்கை அரசு நிரந்தரமாக இந்தியா வுக்கு எதிரான நிலைப்பாட்டை எடுக்கும் எனவும் அதன் மூலம் இந்தியாவுக்கு எதிரான சக்திகளுக்கு இலங்கை ஆதரவு அளிக்கும் எனவும் இந்தியாவின் பாதுகாப்புத் துறை ஆலோசகர்கள் இந்திரா காந்திக்கு ஆலோசனை வழங்கியிருந்தனர். அதுவே காந்தியின் மனமாற்றத்திற்கு காரணம் என கூறப்படுகின்றது.

அதன் பின்னர் தமிழ் மக்களுக்கான தீர்வு தொடர்பில் இந்தியாவின் 3 அம்ச திட்டத்தை இந்திராகாந்தி முன்வைத்திருந்தார். இந்தியா பிரிவினையை எதிர்க்கும். தனிநாட்டுக் கொள் கைக்கு இந்தியா ஆதரவு அளிக்காது, மற்றும் பிரிக்கப்படாத இலங்கைக்குள் சுயாட்சி அதிகாரத் திற்கு (Autonomous region within a united Sri Lanka) இந்தியா ஆதரவு வழங்கும் என்பதே அந்த 3 அம்ச திட்டமாகும்.

ஆனால் இந்தியா தமிழீழம் அமைக் காமலே இலங்கை அரசின் சார்ப்புநிலை இந்தியா வுக்கு எதிராக மாறியது. இஸ்ரேலுக்கும் இலங்கைக் குமான உறவுகள் 1956 ஆம் ஆண்டு உருவாகிய போதும் அது பின்னர் பலஸ்தீன பிரச்சினை காரணமாக முறிவடைந்திருந்தது. ஆனால் 1980களில் அதனை ஜெயவர்த்தனா மீண்டும் புதுப்பித்தார். தமிழீழ விடுதலைப்புலிகளை முறியடிப்பதற்கு இஸ்ரேலின் புலனாய்வுத் துறையின் உதவி நாடப்பட்டது. அமெரிக்கா, பிரித்தானியா, மேற்கு ஜேர்மனி ஆகிய நாடுகள் இலங்கை படையினருக்கு பயிற்சியும், புலனாய்வு தொழில்நுட்பத்தையும், உதவிகளையும் வழங்கி னார்கள்.



1984 ஆம் ஆண்டு ஜுன் மாதத்தில் இருந்து கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகத்தின் பாதுகாப்புடன் இஸ்ரேல் இலங்கையில் கால் பதித்தது. கடல் ஏவுகணைகள், 155மி.மீ உந்து கணைகள் என பல நவீன ஆயுதங்களை வழங்கிய இஸ்ரேல், இலங்கையை மேற்குலகத்திற்கான களமாக மாற்றியது.



தொடர்ச்சி 16ஆம் பக்கம்

# யூலை இனவழிப்பு : சாபக்கேடு

பிள்ளைதாசன்

இலங்கையின் வரலாற்றில் 1983 ஜூலை கலவரம் கறைபடிந்த அத்தியாயத்தை ஏற்படுத்தி இருந்தது. இதனால் ஏற்பட்ட தழும்புகள் இன்னும் மறையவில்லை. இக்கலவரத்தின் பின்னணியில் அரசியல் மற்றும் மதம் என்பன செல்வாக்கு செலுத்தி இருந்தமை தொடர்பில் கருத்து வெளிப்பாடுகள் பலவும் இருந்து வருகின்றன. எனினும் இது போன்ற சம்பவங்கள் இலங்கையில் அவ்வப்போது இன்னும் அரங்கேறிக் கொண்டுதான் இருக்கின்றன.



இலங்கைக்கு இனவாதம் புதியதல்ல. இனவாதத்தால் ஏற்பட்ட ரணங்கள் இலங்கை தேசத்தின் தேகத்தில் ஆழமாகவே பதிந்துள்ளன. இலங்கை 1948 ம் ஆண்டு சுதந்திரம் பெறுவதற்கு முன்னரும் அதன் பின்னரும் இனவாத முன்னெடுப்புகளால் பல்வேறு விபரீத விளைவுகள் மேலெழுந்துள்ளன. சுதந்திரத்திற்கு முன்னர் இலங்கை தமிழர்கள், இந்தியத் தமிழர்கள், முஸ்லீம்கள் என்ற சிறுபான்மை இனத்தவர்கள் அனைவரும் நெருக்கீடுகள் பலவற்றையும் எதிர்கொண்டமை தெரிந்த விடயமாகும். இந்நெருக்கீடுகள் சுதந்திரம் பெற்ற பின்னரும் தொடர்ந்து கொண்டே இருந்தன. சுதந்திரம் பெற்ற கையோடு இந்திய வம்சாவளி மக்களின் வாக்குரிமை மற்றும் பிரசாவுரிமை என்பவற்றை இலங்கையின் பெரும்பான்மைக் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி பறித்தெடுத்தது. 1947 ம் ஆண்டு பொதுத்தேர்தலில் இந்திய வம்சாவளியினரின் கை மேலோங்கிக் காணப்பட்டமை ஐக்கிய தேசியக் கட்சியின் இப்பிற்போக்கு நடவடிக்கைக்கும், எரிச்சலுக்கும் பிரதான காரணமாகும். 1956 ம் ஆண்டு தனிச்சிங்கள சட்டம் முன்வைக்கப்பட்டு தமிழ் மக்களின் மொழியுரிமைக்கு ஆப்பு வைக்கப்பட்டது. 1989 ம் ஆண்டு இந்தியாவின் உதவியுடன் 13 ஆவது திருத்தம் முன்வைக்கப்பட்டது. இதன் ஊடாகவே தமிழ் மொழிக்கு அரசகரும அந்தஸ்து வழங்கப்பட்டது. தனிச்சிங்கள சட்டம் அரசதொழில் வாய்ப்புக்களில் கணிசமான சரிவு ஏற்படுவதற்கு உந்துசக்தியாக இருந்த நிலையில் இது குறித்த இனவாதிகளின் எண்ணமும் கைகூடியது.



மேலும் பல ஒப்பந்தங்கள் முன்வைக்கப்பட்டு சிறுபான்மையினரின் எழுச்சி மழுங்கடிக்கப்பட்டது. அவர்களின் உரிமைகள் பலவும் மறுக்கப்பட்டன. தமிழர்கள் மொழியுரிமை உள்ளிட்ட பல்வேறு உரிமைகளைக் கோரிய போதும் அவையெல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்காகிப்போனதே மிச்சமாக இருந்தது என்பதை மறுப்பதற்கில்லை. அவ்வப்போது தமிழ் மக்களுக்கு எதிரான வன்செயல்கள் ஏவிவிடப்பட்ட நிலையில் 1983 ம் ஆண்டு வன்செயல் உச்சத்தை தொட்டிருந்தது. "இலங்கை சிங்கள பௌத்தர்களுக்கு மட்டுமே சொந்தமான நாடு. ஏனைய சிறுபான்மையினர் அவர்களுடன் வாழத் தெரிந்து கொள்ள வேண்டும்" என்று ஜெனரல் சரத் பொன்சேகா ஒரு சமயம் தெரிவித்திருந்தார். மேலும் "இலங்கை நாடானது 75 வீத மக்களான சிங்களவர்களுக்கே சொந்தமானதாகும். சிறுபான்மையினர் எங்களுடன் இலங்கையில் வாழலாம். ஆனால் அவர்கள் சிறுபான்மையினரின் உரிமைகள் என்ற அடிப்படையில் சாத்தியமற்ற எதனையும் கோரிக்கையாக முன்வைக்க முடியாது.

விடுதலைப் புலிகள் அழித்து ஒழிக்கப்பட்டால் நெடுமாறன், வை.கோ போன்ற தமிழ் நாட்டின் அரசியல் கோமாளிகளும் விடுதலைப் புலிகளிடம் இருந்து பணம் பெற்றுக் கொண்டு அவர்களுக்கு அனுதாபிகளாய் இருக்கும் ஏனையவர்களும் அவர்களின் வருமானத்தை இழந்து விடுவார்கள்" என்றும் சர்ச்சைக்குரிய கருத்துகளை ஜெனரல் சரத் பொன்சேகா அப்போது தெரிவித்திருந்தார். இவையெல்லாம் இனவாதத்தின் வெளிப்பாடுகளாகவே அமைந்திருந்தன. ஐக்கியம் மிக்க இலங்கையை கட்டியெழுப்புவதற்கு இத்தகைய கருத்துகள் சவாலாக அமைந்து விளங்குவதாகவும் அப்போது பேச்சுக்கள் அடிபட்டன.

### இனவாதமும் மதவாதமும்

இலங்கையின் அரசியல் அமைப்பு மற்றும் வன்செயல்கள் என்பவற்றின் பின்னணியில் மதம் மற்றும் இனவாத அரசியல் என்பன அதீத ஆதிக்கம் செலுத்துவதாக ஒரு குற்றச்சாட்டு இருந்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும். 1970ம் ஆண்டு அப்போதைய பிரதமர் திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான அரசாங்கம் அரசியலமைப்பை உருவாக்குவதற்கு கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா பிரதான சூத்திரதாரியாக விளங்கினார். இந்நிலையில் சிரிமா வின் அரசாங்கத்தில் முக்கிய அமைச்சராக இருந்த கே.எம்.பி.இராஜரட்ண மகா சங்கத்தினர் தமது கருத்துக்களை கூறும் உரிமை உள்ளதென்றும் அவர்களின் கருத்தை அறியும்படியும் அரசுக்கு அழுத்தம் கொடுத்தார். இவ்வாறாக அரசியலமைப்பில் மதம் உள்ளீர்க்கப்பட்டது. இந்தியா போன்ற மிகப்பெரிய நாடுகள் மதச்சார்பற்ற அரசியலமைப்பை முன்வைத்த நிலையில் இலங்கை இதற்கு விதிவிலக்காக இருந்தமை விசனத்திற்குரிய ஒரு விடயமேயாகும். இனவாதம், மதம் என்பன இலங்கையின் அரசியலமைப்பை ஆக்கிரமித்த நிலையில் ஐக்கியம் என்பது கேள்விக்குறியானது. இந்நிலையில் நாட்டின் ஒருமைப்பாட்டிற்கு குந்தகமான முறையில் அவ்வப்போது இடம்பெற்ற வன்செயல்களிலும் இனவாதமும் மதமும் இணைந்து செயற்பட்டதாக விமர்சனங்கள் இருந்து வருகின்றன. இனவாதத்தின் வெளிப்பாடுகள் இன்னும் இலங்கையை விட்டுப் போகாத நிலையில் மென்மேலும் அதிகரித்து வருகின்ற ஒரு போக்கினையே அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா 1978 ம் ஆண்டு பதவியேற்ற நிலையில் இரண்டாவது குடியரசு அரசியலமைப்பைக் கொண்டு வந்தபோதும் பௌத்தத்திற்கு யாப்பின் மூலம் கொடுக்கப்பட்ட அந்தஸ்தில் கைவைக்கத் துணியவில்லை. அப்படியே பேணுவதுதான் தனது ஆட்சிக்கு பாதுகாப்பானது என்று நம்பினார். அதேவேளை பௌத்தத்தை இலங்கை அரசின் உத்தியோகபூர்வமாக ஆக்கும்படி நிர்ப்பந்தங்கள் எழுந்தன. அப்படி செய்தால் அரசு மேற்கொள்ளும் மதம் தொடர்பான நடவடிக்கைகளின்போது அநாவசிய தலையீட்டுக்கு வழிவகுத்துவிடும் என்று ஜே.ஆர். கருதியதாகவும் புத்திஜீவிகள் சுட்டிக்காட்டியுள்ளமையும் இங்கு நோக்கத்தக்கதாகும்.



இலங்கையில் இடம்பெற்ற வன்செயல்களில் உச்சத்தை தொட்ட வன்செயலாக 1983 ம் ஆண்டு தமிழ் மக்களுக்கு எதிராக இடம்பெற்ற வன்செயல் அமைந்து விளங்குகின்றது. இதனால் தமிழ் மக்களின் உயிர் மற்றும் உடைமைகளுக்கு பாரிய இழப்பு ஏற்பட்டது. தமிழர்களின் வர்த்தக நிலையங்கள் பலவும் தீக்கிரையாகிய நிலையில் திட்டமிட்ட பொருளாதார முடக்க நிலைக்கு அவர்கள் உள்ளானார்கள். இது இனவாதிகளின் எதிர்பார்ப்பிற்கு கிடைத்த ஒரு வெற்றியாக அமைந்தது.

வன்செயல்களால் தமிழ் மக்கள் இடம்பெயரவும் நேரிட்டது. இதனடிப்படையில் சிலர் இந்தியாவில் சென்று குடியேறிய நிலையில் இன்னும் சிலர் உள்ளூரிலேயே இடப்பெயர்வினை மேற்கொண்டனர். குறிப்பாக மலையகத்தைச் சேர்ந்த இந்திய வம்சாவளி தமிழ் மக்கள் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் சென்று குடியேறினர். இவர்கள் வவுனியா மற்றும் கிளிநொச்சி போன்ற பகுதிகளில் அதிகமாக சென்று குடியேறியதாக தகவல்கள் வலியுறுத்துகின்றன. இத்தகையோர் காலப்போக்கில் தங்களின் மலையக அடையாளம் மற்றும் கலாசாரங்களைக் கைவிட்டு உள்ளூர் வாசிகளுடன் கலந்து அவர்களின் கலை, கலாசார, பண்பாட்டு, விழுமியங்களை வரித்துக் கொண்டமையும் குறிப்பிடத்தக்க விடயமாக உள்ளது. எனவே கலாசார திரிபுகள் ஏற்படுவதற்கும் 1983 ம் ஆண்டின் ஜூலைக் கலவரம் வித்திட்டது என்றால் மிகையாகாது. இக்கலவரமானது நாட்டில் உள்ள மூளைசாலிகளின் வெளியேற்றத்திற்கும் வித்திடுவதாக அமைந்தது. நாட்டின் சூழ்நிலைகள் கண்ணியமாக தொழிலை மேற்கொள்வதற்கு இடையூறாக அப்போது அமைந்திருந்த நிலையில் இதனாலேயே மூளைசாலிகளின் வெளியேற்றம் அதிகமாகக் காணப்பட்டது. இக்கலவரத்தினால் சிலர் வலது குறைந்த நிலைக்கு உள்ளானமையும் புதிய விடயமல்ல. உள ரீதியான சிக்கல்களுக்கும் இன்னும் சிலர் உள்ளானதாகவும் அறிய முடிகின்றது.

### அர்த்தமுள்ள பிரதிநிதித்துவம்

இந்நிலையில் 1983 ம் ஆண்டு இனக்கலவரத்தின் பின்னணியில் இனவாதத்தைப் போன்றே மதத்தின் ஆதிக்கமும் அதிகமாக இருந்ததனை அறியக் கூடியதாக உள்ளது. இந்த நிலை இன்னும் ஓய்ந்ததா? என்று வினவவேண்டிய தேவையும் மேலெழுந்து காணப்படுகின்றது.

ஒவ்வொரு சமூகத்தினதும் அர்த்தமுள்ள அரசியல் பிரதிநிதித்துவம் என்பது அச்சமூகத்தின் பல்வேறு அபிவிருத்திக்கும் அடிப்படையாக அமைந்திருக்கின்றது. அர்த்தமுள்ள அரசியல் பிரதிநிதித்துவத்தின் ஊடாக பல பின்தங்கிய சமூகங்கள் முன்னிலைக்கு வந்திருக்கின்றன. எனினும் வெறுமனே நாற்காலிகளைச் சூடேற்றும் பிரதிநிதித்துவங்கள் இதற்கு எதிர்மாறாகவே

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

## 18.07.2023 அனைத்துலக நெல்சன் மண்டேலா நினைவு நாள்



# நெல்சன் மண்டேலாவின் நல்லிணக்கக் குழுவின் பெயரை உச்சரிக்கத் தகுதியற்ற சிறிலங்கா உலகை ஏமாற்றுகிறது

மூத்த அரசியல் ஆய்வாளர் சூ.யோ. பற்றிமாகரன்

"உடைப்பதும் அழிப்பதும் இலகு. அமைதியை உருவாக்குபவர்களும் கட்டியெழுப்புபவர்களுமே சாதனையாளர்கள" என நெல்சன் மண்டேலா அவர்கள் 12.07. 2008 இல் கூறிய அற்புதமான வார்த்தைகளை அனைத்துலக நெல்சன் மண்டேலா நினைவேந்தலை ஐக்கிய நாடுகள் சபை இவ்வாண்டு 2023 யூலை 18இல் கொண்டாடிய போது மீள்நினைவாக்கம் செய்தது. இது ஈழத்தமிழர்கள் உட்பட உலகில் விடுதலைக்காகப் பயணிக்கும் மக்களும் செயற்பாட்டாளர்களும் அமைப்புகளும் மன திருத்த வேண்டிய முக்கியமான சிந்தனையாக இன்று அமைகிறது.

அமைதி என்பது முரண்பாடுகளற்ற ஏற்ற தாழ்வுகளற்ற சூழ்நிலையல்ல. உலகிலும் தாங்கள் வாழும் நாட்டிலும் காணப்படும் இந்த முரண்பாடுகள் வேறுபாடுகள் ஏற்றத்தாழ்வுகள் கவலைகள் துன்பங்கள் நோய்கள் வறுமைகள் என்பன தங்கள் மனதைப் பாதிக்காதவாறு அதனை எதிர்த்து நம்பிக்கையுடன் வாழ்ந்து அவற்றை மாற்றுவதற்கான உளஉடல் சமுதாய ஆற்றல்களை உருவாக்கி வாழ்வதற்கான ஆற்றலை, சத்தியை கொண்டு வாழ்வதே அமைதி. இனங்காணக் கூடிய அச்சத்தை அடக்குமுறையாளர்களும் ஒடுக்குமுறையாளர்களும் தோற்றுவித்து மக்களிடை விடுதலை முயற்சிகள் மீது நம்பிக்கையீனத்தை வெறுப்பை உருவாக்குகையில் அதனை எதிர்த்து நிற்பதற்கான மாபெரும் ஆற்றலே அமைதி இதனைச் சரியாக விளங்கிக் கொண்டால் இலட்சியத்தின் தோல்வி, பின்னடைவு என்ற எண்ணமே அமைதிக்காகப் போராடுபவர்கள் மனதில் தோன்றி அவர்களின் போராட்ட உணர்வை மழுங்கடிக்க மாட்டாது. போராடு பவர்களிடையே பாழ்செய்யும் உட்பகைகளை உருவாக்கும் பல்குழுக்கள் தோன்ற இட மளிக்காது. இவ்வாறு இழப்புகள் எல்லாமே எழுச்சிக்கான ஏணிப்படிகள் என்ற உண்மையின் அடிப்படையில ஒன்றுபட்டு நின்று உழைக்கும் உள்ள உறுதி கொண்டவர்களே அமைதிக்காகப் போராடுபவர்கள்.

இதனை உறுதிப்படுத்தக் கூடிய வகையில் நெல்சன் மண்டேலா அவர்கள் இந்தியாவில் புதுடில்லிக்கு 2004 ம் ஆண்டு சனவரி மாதம் 31ம் நாள் காந்தி நினைவேந்தலுக்குச் சென்ற பொழுது " அமைதி என்பது முரண்பாடுகள் இல்லாத நிலையல்ல. நிற இன மொழி மத பிரதேச சாதி உட்பட்ட அனைத்து ஏற்றத் தாழ்வுகளும் புறக் கணிப்புக்களும் இவற்றால் விளைவிக்கப்படும் பிரிவினைகளும் வன்முறைகளும் இல்லாது மக்கள் மனிதநேயத்துடன் வாழ்வதற்கான சூழ்நிலையை உருவாக் குவதே அமைதி. இதனை அடைய முடியாது இருப்பதற்கு நாங்கள் எங்கள் மனிதநேயத்தை உணராமலும் உணர்த்தாமலும் வாழ்வதே காரணம்" எனக் கூறினார்.

இவ்வகையில் இந்தியத்துணைக்கண்டத்தில் மட்டுமல்ல உலகிலும் மனிதநேயத்தை உறுதிப்படுத்த மனிதாயத்தைச் சிதைக்கும் அடக்குமுறைகள் ஒடுக்குமுறைகளிலிருந்து மனிதாயத்தை மீட்டெடுக்க உறுதி பூண்டு மனித விடுதலைக்காக எழுபவர்கள் அவர்களின் இறுதி மூச்சு உள்ளவரை எந்த அச்சுறுத்தல்களையும் அடக்குமுறைகளையும் தாண்டி போராடும் உள்ள உறுதியுடன் வாழ்வார்கள் என்பதற்கு நெல்சன் மண்டேலாவே தலைசிறந்த உதாரணமாகவும் உள்ளார். நெல்சன் மண்டேலா அவர்கள், சிறையில் இருந்து வெளியே வந்த 11.02.1990 அன்று நிகழ்த்திய உரையில் "எங்களுடைய சுதந்திரத்திற்கான பயணம் மீளப் பெறப்படக்கூடிய ஒன்றல்ல. அச்சம் எங்கள் பாதையில் நிலைபெற அனுமதிக்க மாட்டோம்" எனப் போராளி உள்ளத்தின் உறுதியை உலகுக்குத் தெளிவுபடுத்தினார். இன்று சுதந்திரத்திற்காகப் போராடப்புறப்பட்ட ஈழத்தமிழர்களும் நெல்சன் மண்டேலாவின் அரசியல் மொழியிலேயே தங்களின் இன்றைய உள்ள உறுதியையும் உலகுக்குத் தெளிவாக்கி நிற்கின்றனர்.

சிறிலங்கா ஈழத்தமிழர்களின் நடைமுறையரசை 17.05. 2009 இல் தங்களின் படைபலம் கொண்டு 146000 ஈழத்தமிழர்களை இனப்படுகொலை செய்த இனஅழிப்பின் மூலம் ஆக்கிரமித்தது முதல் இன்று வரை ஈழத்தமிழர்கள் மேலான பண்பாட்டு இனஅழிப்பின் மூலம் அவர்களின் தாயக தேசிய தன்னாட்சி உரிமைகளை மீள நிறுவ இயலாத வகையில் செயற்பட்டு வருகின்றது. இந்நிலையில் நெல்சன் மண்டேலாவின்நல்லிணக்கக் குழு என்ற சொல்லை உச்சரிக்கக் கூடத் தகுதியற்ற சிறிலங்காவின் அரசத்தலைவர் ரணில் விக்கிரமசிங்கா நெல்சன் மண்டேலாவின் தென்னாபிரிக்க பாணியிலான நல்லிணக்கக் குழுவொன்றை தாங்கள் நிறுவப்போவதாக உலகுக்கு நாடகமாடி சிறிலங்காவில் தேசிய இனப்பிரச்சினை தீர்க்கப்பட்டு அது முதலீடுகளை பெறத்தக்க உறுதியான நாடாக வளர்ச்சி பெற்று வருவதாகக் காட்டிச் சிறிலங்காவின் இன்றைய பொருளாதார வங்குரோத்து நிலையில் நின்று மீட்சி பெற முயற்சிக்கின்றார்.

இவ்வாண்டுக்கான நெல்சன் மண்டேலா அனைத்துலக நாள் ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் அவர்களின் பின்வரும் செய்தி, நெல்சன் மண்டேலாவின் நல்லிணக்கக் குழு எந்த உயர்ந்த மனிதநேய நோக்கில் அமைக்கப்பட்டது என்பதை உலகுக்கு மீளவும் தெளிவாக்கியுள்ளது. " நெல்சன் மண்டேலா துணிவினதும் மரபுரிமையினைப் பேணுவதினதும் பேருருவம். அளப்பரிய சாதனைகளதும் அசாதாரண மனிதாயத்தினதும் தலைமையாளர். எங்கள் காலத்தின் பெரும் ஆற்றலாளரான அவருடைய புகழ் மரபினை நாம் பின்பற்றுவதன் மூலம் கொண்டாட வேண்டும். இனவெறி, ஒதுக்கும் செயல்கள், வெறுப்பு என்னும் நஞ்சுகள் நீக்கப்பட வேண்டும். காலனித்துவம் ஒழிக்கப்பட வேண்டும். சமத்துவம், மனித உரிமைகள் எல்லாற்றுக்கும் மேலாக நீதி என்பன முன்னெடுக்கப்பட வேண்டும். இன்று வறுமையும், பட்டினியும் சமத்துவமின்மையும் அதிகரித்துக் கொண்டு செல்கிறது. நாடுகள் கடனில் மூழ்கிக் கொண்டிருக்கின்றன. காலநிலை அழிவுகள் அதனை உருவாக்கியவர்களின் வாழ்வையே அழித்துக் கொண்டிருக்கிறது. எங்களுடைய நியாயமற்ற காலவதியான உலக நிதிமுறைமைகள் உலகத் தொடர்பு வலையைப் பாதுகாப்பாகப் பேணுவதற்கான செயற்பாடுகளைச் செய்ய இயலாதவையாக உள்ளன. நாங்கள் எங்களுடைய ஆற்றலிலேயே இந்தச் சிக்கல்களை விடுவிக்க வேண்டியுள்ளது. எனவே நெல்சன் மண்டேலாவின் வாழ்வியல் உதாரணமாகவும் ஆன்மபலமாகவும் அமைந்த மனிதநேயம், கண்ணியம், நீதி என்பவற்றை அவரின் நினைவாக நடைமுறைப்படுத்தத் தொடங்க வேண்டும். எங்கும்நாங்கள்பெண்களுடனும்சிறுமிகளுடனும், மாற்றங்களை உருவாக்குபவர்களுடனும் சேர்ந்து எழுவோம். அதன் வழி நல்லதோர் உலகம் செய்வோம்" என்பதாக அமைந்துள்ளது. தென்னா பிரிக்கா ஆங்கிலேய காலனித்துவத்தில் இருந்து சுதந்திரமடைந்த பின்னர் எத்தகைய உயர்ந்த தன்மையுள்ளதாக நெல்சன் மண்டேலா அவர்களால் கட்டியெழுப்பப் பட்டது என்பதை ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் அவர்களின் இந்தச் செய்தி மிகத் தெளிவாக எடுத்துரைக்கிறது. இந்த மனிதநேயம், கண்ணியம் , நீதி என்பவற்றை எல்லா மக்களும் சமமாக அனுபவிக்க உருவாக்கப் பட்டதே தென்னாபிரிக்க நல்லிணக்கக் குழு.

ஆனால் இன்று தென்னாபிரிக்க நல்லிணக்கக் குழு மாதிரியிலான நல்லிணக்கக் குழுவை இலங்கையின் ஈழத்தமிழர்களின் தேசிய பிரச்சினைக்கு அமைக்கப் போவதாக உலகினை மயக்க முயலும் சிறிலங்காவின் அரசத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா எந்த அளவுக்கு ஒவ்வொருவரினதும் " மனிதநேயம், கண்ணியம், நீதி" என்பவற்றை நடைமுறையில்

தொடர்ச்சி 18ஆம் பக்கம்

# கிழக்கு மாகாணத்தில் மூன்று இனங்களும் வாழ்கின்றனர், ஆனால்...

மட்டு.நகரான்

மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மைக் காலமாக நடைபெற்றுவரும் சம்பவங்கள் என்பது தமிழ் மக்களிடையே பல்வேறு அச்சங்களை ஏற்படுத்திவருகின்றது.

இந்த நாட்டில் தொடர்ச்சியாக தமிழ் இனங்கள் அனுபவித்த வலிகளும் வேதனைகளும் என்பது கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்கள் அனுபவித்த வலிகள் வேதனைகள் என்பது அதிகமாக இருக்கின்றது.

இனங்களிடையே சகவாழ்வும் நல்லெண்ணங்களும் ஏற்பட்டுவரும் காலத்தில் எல்லாம் தமது அரசியல் சுயநலன்களுக்காக இனங்களிடையே மோதல்களை ஏற்படுத்தல்,அல்லது ஒரு இனத்தினை துன்பத்திற்குள் கொண்டுசென்று தமது அரசியல் இருப்புகளை தக்கவைப்பதற்காக பெரும்பான்மையினத்தவர்கள் முன்னெடுக்கும் செயற்பாடுகள் என்பது தொடர்ச்சியாகவே முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

எந்த அரசாங்கம் மாறினாலும் எந்த நாடு தலையிட்டு தமிழர்களுக்கு சார்பான நிலைப்பாடுகளை வெளிப்படுத்தினாலும் தமிழர்களுக்கு இந்த நாட்டில் தொடர்ச்சியான அநியாயங்களும் துன்புறுத்தல்களும் பல்வேறு வழிகளிலும் மேற்கொள்ளப்பட்டே வருகின்றது.

இது காலத்துக்கு காலம் பல்வேறு வழிவகையிலும் அச்சுறுத்தல்கள் என்பது இருந்து கொண்டே இருக்கின்றது.

இன்று கிழக்கு மாகாணத்தினைப்பொறுத்த வரையில் தமிழ் மக்கள் பல்வேறு காலங்களிலும் பல்வேறு நெருக்கடிகளுக்கு உள்ளாகிவருகின்றனர். தற்போது இந்த நாட்டில் மொட்டு,யானை கூட்டணி ஆட்சி நடைபெற்றுவரும் நிலையில் மொட்டு கூட்டணியில் உள்ளோர் இனவாதத்தினை பயன்படுத்தி மீண்டும் ஆட்சியை பிடிக்கலாம் என்ற கனவுடன் செயற்பட்டுவருகின்றனர். இவர்களின் செயற்பாடுகள் என்பது இனங்களிடையே மோதல் நிலைகளையும் ஒரு இனத்தை இன்னுமொரு இனம் சந்தேகம் கொண்டு பார்க்கும் நிலைமையினையுமே ஏற்படுத்திவருகின்றது.

யுத்த காலத்தில் கிழக்கில் தமிழர்களின் பலத்தை சிதைப்பதற்கு எவ்வாறு தொடர்ச்சியான இனவாத செயற்பாடுகளும் இனமோதல்களும் ஏற்பட்டதோ அதேபோன்றதான செயற்பாடுகளை வேறு வடிவங்களில் முன்னெடுக்கப்பட்டு வருவதை காணமுடிகின்றது.

கிழக்கு மாகாணத்தினைப்பொறுத்த வரையில் மூன்று இனங்களும் வாழும் நிலையிருந்தாலும் மட்டக்களப்பு மாவட்டத்தினைப்பொறுத்த வரையில் பெரும்பாலும் தமிழர்கள் வாழும் பகுதியாக காணப்படுகின்றது. இதன்காரணமாக கிழக்கு மாகாணத்தினை தொடர்ச்சியாக குறிவைத்து பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.கடந்த கட்டுரையில் கிழக்கில் வெளிநாட்டு சக்திகளின் செயற்பாடுகள் பற்றி ஆராய்ந்தோம் இந்த பத்தியில் இன்று முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் குறித்து ஆராய்கின்றோம்.

கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் முஸ்லிம்களும் சிங்களவர்களும் அதிகளவில் வாழும் நிலைமை ஏற்படுத்தப்பட்டுள்ளதன் காரணமாக அங்கு குறைவான நிலையிலேயே இலக்குகள் நிர்ணயிக்கப்படுகின்றன.பெரும்பாலான இலக்குகள் மட்டக்களப்பு நோக்கி லேயே வைக்கப்படுகின்றன.இவ்வாறான நிலையில் இவ்வாறான இலக்குகளை தமிழ் தேசிய சக்திகள் எவ்வாறு எதிர்கொண்டு தமிழர்களை பாதுகாக்கப்போகின்றது என்பதை பொறுத்திருந்தே பார்க்கவேண்டியுள்ளது.ஏனென்றால் கிழக்கில் தமிழ் தேசிய சக்திகள் பல்வேறு வழியில் பிரிந்துசெயற்படுகின்ற காரணத்தினால் இவ்வாறான பிரச்சினைகளை எவ்வாறு எதிர்கொள்ளப்போகின்றனர் என்பது கேள்வியாகவே உள்ளது.



மட்டக்களப்பு மாவட்டத்தில் பத்துக்கும் மேற்பட்ட மதுபானசாலைகளை திறப்பதற்கு முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் அமைச்சர் ஹாபீஸ் நசீர் அகமட் முன்னெடுத்துவரும் இனவாத ரீதியான செயற்பாடுகள் என்பது பல்வேறு கேள்வியை எழுப்பிவருகின்றது. அதேபோன்று அரசாங்கத்திற்கு சார்பான தமிழ் இராஜாங்க அமைச்சர்கள் முன்னெடுத்துவரும் செயற்பாடுகளும் பல்வேறு சந்தேகங்களை தமிழர் இனத்திற்கு மத்தியில் ஏற்பட்டுவருகின்றது.

தமிழர்களைப்பொறுத்த வரையில் வடகிழக்கு இணைந்த தமிழர் தாயகப்பகுதியில் சுயநிர்ணய உரிமையுடன் தங்களை தாங்களே ஆளும் தீர்வுத்திட்டத்தினை வலியுறுத்தி வரும் நிலையில் இலங்கையானது 13வது திருத்தம் என்னும் சட்டம் ஊடாக மாகாண சபை அதிகாரங்களை முழுமையாக வழங்கப் போகின்றோம் என்று இந்தியாவிற்கு அறிவித்து சர்வதேச ரீதியிலும் பிராந்திய ரீதியிலும் பொருளாதார ரீதியான வலுப்பெறுவதற்கான செயற்பாடுகளை முன்னெடுக்கின்றது.

இந்த நிலையில் 13வது திருத்தம் என்னும் சட்டம் முழுமையாக அமுல்படுத்தப் படுமானால் காணி,பொலிஸ்,நிதி அதிகாரங்களை மாகாணசபைகளுக்கு வழங்கவேண்டும், வடகிழக்கு இணைக்கவேண்டும்.இவ்வாறான நிலைமையேற்பட்டால் பெரும்பான்மையினம் கொந்தளிக்கும் நிலைமையேற்படும் என்பதுடன் அவற்றினைக்கொண்டு பேரினவாதிகள்தங்களுக்கு சார்பாக மாற்றும் நிலைமையும் காணக்கின்ற நிலையில் இந்தியா போன்ற நாடுகளை தாங்கள் தீர்வு வழங்குவதாக காட்டுவதற்கான நாடகங்களை ஒருபுறம் அரங்கேற்றி மறுபுறம் இனங்களிடையே பிரச்சினைகளை ஏற்படுத்தி தீர்வு விடயத்தின் காலத்தினை இழுத்தடிப்பதற்கான சூழ்நிலைகளை அரசாங்கம் முன்னெடுத்துவருவதை காணமுடிகின்றது.

அதற்காகவே தமிழ் தேசிய கூட்டமைப்பினை உடைத்தும் தமிழ் தேசிய கட்சிகளை உடைத்தும் தமிழ் சமூகம் சார்ந்து செயற்படும் சிவில் செயற்பாட்டாளர்களை உடைத்தும் வலிந்து காணாமல்ஆக்கப்பட்டோர் அமைப்புகளை உடைத்தும் தமிழர்களின் குரலை இல்லாமல் செய்யும் செயற்பாட்டை இலங்கை அரசாங்கம் மிகவும் திட்டமிட்டு முன்னெடுத்து வருகின்றது.

இவ்வாறான நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் குழப்ப நிலைமைகளை ஏற்படுத்தி இனங்களிடையே சந்தேகங்களை ஏற்படுத்தி வடகிழக்கு இணைந்த மாகாணசபையினை தமிழர்களுக்கு வழங்குவதற்கு எதிர்ப்பு இருக்கின்றது, அல்லது மாகாணசபை அதிகாரங்களை முழுமையாக பகிரமுடியாத சூழ்நிலை நிலவுகின்றது என்பதை காட்டுவதற்கான முயற்சிகளை இன்று அரசாங்கம் முன்னெடுக்கின்றதா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

தமிழர்கள் மாகாணசபைக்கு அப்பால் சமஸ்டி தீர்வுத்திட்டம் ஒன்றை கோரிய நிலையில் அதற்கு இணங்காத அரசாங்கம் 13வது திருத்தத்தினை முழுமையாக அமுல்படுத்துவோம் என்ற உறுதிமொழியை வழங்கினாலும் அதனையும் செய்யுமா என்ற சந்தேகம் இருக்கின்றது. இந்த நிலையிலேயே இந்தியா உட்பட சர்வதேச நாடுகள் தொடர் அழுத்தங்களை இலங்கைக்கு வழங்கிவருகின்றது.இவ்வாறான அழுத்தங்களை எதிர்கொள்வதற்காகவே தமிழ் கட்சிகளின் தலைவர்களையும் இந்திய அரசியல் தலைவர்களையும் சந்திக்கும் வாய்ப்புகளை இலங்கை பேரினவாத அரசுகள் முன்னெடுத்துவருகின்றது.மாறாக தமிழர்களுக்கான தீர்வினைவழங்கவேண்டும்என்றஇதயசுத்தியுடன் அவர்கள் செயற்படவில்லையென்பதே இன்று கிழக்கில் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் வெளிப்படுத்தி நிற்கின்றது.

கிழக்கில் இன்று பல்வேறு நடவடிக்கைகள் இலங்கை அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படுகின்றன.குறிப்பாக விவசாயிகளின் அறுவடைகள் ஆரம்பித்துள்ள நிலையில் இலங்கையில் அனைத்து மாவட்டங்களிலும் நெல் சந்தைப்படுத்தல்சபை ஊடக நியாயமான விலையில் நெல்லை கொள்வனவு செய்துள்ள அரசாங்கம் மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும் இதுவரையில் நெல் கொள்வனவு செயற்பாட்டை முன்னெடுக்கவில்லை.மட்டக்களப்பில் உற்பத்திசெய்யப்படும் நெல் குறைந்த விலையுடையதாக தெரிவித்தே இந்த நெல் கொள்வனவு நடைபெறாமல் செய்யப்பட்டுள்ளது.மாவட்ட விவசாய மீளாய்வுக்கூட்டம் நடாத்தப்பட்டு அந்த கூட்டத்தின் பரிந்துரைகளின் அடிப்படையிலேயே விவசாயிகள் நெல் உற்பத்திகளை முன்னெடுத்த நிலையில் நெல் கொள்வனவினை செய்வதை அரசாங்கம் தவிர்த்திருப்பதானது அரசுக்குள் ஏற்பட்டுள்ள முரண்பாடுகளினால் விவசாயிகளை பயன்படுத்த நினைக்கும் அரசாங்கத்திற்குள் இருக்கும் சக்திகளின் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதை காணமுடிகின்றது.இதன்மூலம் கிழக்கில் எதிர்காலத்தில் போராட்டங்களை முன்னெடுப்பதற்கான சாத்தியங்களும் அதன் மூலம் இனங்களிடையே குழப்பங்களை ஏற்படுத்துவதற்கான சாத்தியங்களும் காணப்படுகின்றன.

இவ்வாறான நிலையில் தமிழ் தேசிய சக்திகளும் தமிழர்களுக்கு ஏதாவது தீர்வொன்றை இனப்பிரச்சினைக்கு பெற்றுக்கொடுக்கவேண்டும் என்று செயற்படுகின்ற சர்வதேச நாடுகளும் என்ன செய்யப்போகின்றன என்பதை பொறுத்திருந்தே பார்க்கின்றன.இவ்வாறான அரசியல் விளையாட்டுக்களினால் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள தமிழ் சமூகம் பல்வேறு வழிகளிலும் பாதிக்கப்படும் நிலைமையும் காணப்படுகின்றது.கடந்த காலத்தில் திட்டமிட்டு ஓரங்கட்டப்பட்டுவரும் உண்மையான தமிழ் தேசிய

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# அபிவிருத்தியும் ஆணைக்குழுவும்

துரைசாமி நடராஜா

மலையக சமூகத்தின் கட்டமைப்புகள் மாறி வருகின்றன.பெருந்தோட்ட தேயிலை தொழிற்றுறையில் இருந்தும் விலகிச் சென்றுள்ள பல தொழிலாளர்கள் மாற்றுத் தொழில்களை நாடிச் சென்றுள்ளனர். என்ற போதிலும் தோட்டங்களில் பதிவுசெய்து தொழில் புரியும் தொழிலாளர்கள் பல்வேறு துன்ப துயரங்களையும் சந்தித்து வருகின்றனர். அடிப்படை வசதிகள் கூட பூர்த்தி செய்யப்படாத நிலையில் இம்மக்கள் ஜீவனோபாயம் நடத்தி வருவதாக விசனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.இந்நிலையில் பெருந்தோட்ட மக்களின் பிரச்சினைகளை ஆராய்வதற்கு ஆணைக்குழுவொன்று ஏற்படுத்தப்பட வேண்டுமென்று பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்திருக்கின்றார்.

மலையக மக்கள் இந்நாட்டிற்கு வருகை தந்து 200 வருடங்களாகியுள்ள நிலையில் இம்மக்களின் பல்துறைசார் அபிவிருத்தியும் உரிய இலக்கினை அடையாதுள்ளமை தெரிந்த விடயமாகும்.'சாண் ஏறினால் முழம் சறுக்கும்' நிலையில் இம்மக்களின் வாழ்க்கை நிலைமைகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.இம்மக்கள் பெருந்தோட்ட தேயிலைத் தொழிலை மட்டுமே நம்பி வாழ்ந்த காலம் ஒன்றிருந்தது.எனினும் தேயிலைத் தொழிற்றுறை அம்மக்களின் துயர்துடைத்து, செழுமையான வாழ்க்கைக்கு இட்டுச்செல்ல எந்தளவு கை கொடுத்தது என்பது கேள்விக்குரிய ஒரு விடயமாகும். இந்நிலையில் தேயிலைத் தொழிற்றுறையின் மீது இம்மக்கள் தொடர்ச்சியான அதிருப்தியினையே வெளிப்படுத்தி வந்தனர்.இதனால் தோட்டங்களில் தொழிலாளர்களின் எண்ணிக்கை படிப்படியாக வீழ்ச்சியுற்றது.

இதனடிப்படையில் நோக்குகையில் 1980 இல் 541,971தொழிலாளர்கள் பெருந்தோட்டங்களில் பதிவு செய்துகொண்டிருந்தனர்.இது1985 இல்458,617 ஆகவும்,1995 இல்302,743 ஆகவும்,2005 இல்246,478 ஆகவும்,2010 இல்212,826 ஆகவும்,2015 இல் 158,322 ஆகவும் வீழ்ச்சியடைந்தது. ஊதியப்பற்றாக்குறை தொழிலாளர்களின் எண்ணிக்கை வீழ்ச்சியில் கணிசமான பங்களிப்பைச் செய்திருந்தது என்பதையும் மறுப்பதற்கில்லை. இதேவேளை பெருந்தோட்ட மக்களின் கட்டமைப்பில் ஏற்பட்ட சில மாற்றங்களும் இதில் செல்வாக்கு செலுத்தின. பெருந்தோட்ட தொழிலாளர்களின் பரம்பலானது பின்வருமாறு மூன்று பிரிவினராகக் கொண்ட சமூகமாக மாற்றம் பெற்றுள்ளதாக பேராசிரியர் ஏ.எஸ். சந்திரபோஷ் சுட்டிக்காட்டுகின்றார்.இதற்கேற்ப பெருந்தோட்டங்களிலேயே இன்று வரை பதிவுசெய்து கொண்டு வேதனம் என்று வருமானத்தை பெற்றுக் கொள்ளும் தொழிலாளர்கள். பெருந்தோட்ட வேலைகளில் இருந்து விடுபட்டு பெருந்தோட்டம் அல்லாத வேறுதொழில் புரிபவர்கள். ஆனால் தோட்டங்களிலேயே நிரந்தரமாக வசிப்பவர்கள்.

பெருந்தோட்ட சமூகக் கட்டமைப்பில் இருந்து வெளியேறி ஆசிரியர் போன்ற அரசாங்க தொழில்களிலும், வியாபாரம் போன்ற சுயதொழில்களிலும், மலையக பிரதேசங்களில் காணப்படும் நகரங்களிலும் உபநகரங்களிலும் வாழ்கின்றவர்கள் என்ற மூன்று பிரிவினரும் இதில் உள்ளடங்குகின்றனர்.1992ன் பின்னர் பெருந்தோட்டங்கள் தனியார் மயப்படுத்தப்பட்ட நிலையில் இங்குள்ள தொழிலாளர்கள் சிலர் தோட்ட வேலையை விட்டு வெளிவேலைக்கு செல்வதில் ஆர்வம் காட்டினர். தனியார் மயப்படுத்திய பெருந்தோட்ட கம்பனிகள் பிரித்தானியரைப் போல பெருமளவு தொழிலாளர்களை வழிநடத்தி பெருந்தோட்டங்களை முகாமைப்படுத்தும் ஆற்றலைக் கொண்டிருக்கவில்லை.தொழிலாளர்களுக்கு வழங்கும் உழைப்பிற்கான ஊதியத்தை வழங்குவதும், தொழிற்சங்க சட்டத்தின்படி வழங்க வேண்டிய உரிமைகளை வழங்கி அவர்களையும் சாதாரணமான மனித அபிலாஷைகள் உள்ள சமூகமாக மதிப்பதற்கு தனியார் கம்பனிகள் விரும்பவில்லை.எனவே தொழிலாளர்களின் அதிருப்திக்கு இதுபோன்ற நடவடிக்கைகளும் வலுசேர்த்ததாக சுட்டிக்காட்டப்படுகின்றது.



எவ்வாறெனினும் பெருந்தோட்டத் தேயிலை தொழிற்றுறையை நம்பி இன்றும் சுமார் ஒன்றரை இலட்சம் தொழிலாளர்கள் நேரடி உழைப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.இவர்களைத்தவிர மறைமுகமாகவும் பல தொழிலாளர்கள் தேயிலைத் தொழிற்றுறையில் தங்கி வாழ்வதும் யாவரும் அறிந்த விடயமாகும். இது இவ்வாறிருக்க பெருந்தோட்டங்களிலுள்ள தொழிலாளர்கள் மீதான நெருக்கீடுகள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு செல்கின்றன. அடிப்படைத் தேவைகள் கூட இன்னும் பூர்த்தி செய்யப்படாத நிலையில் இவர்களின் வாழ்க்கை நிலைமைகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. இருப்பிட மற்றும் மலசலகூட வசதிகள் எனப்பலவும் இதில் உள்ளடங்கும்.பெருந்தோட்டங்களை பொறுப்பேற்ற கம்பனியினர் தொழிலாளர்களின் நலனோம்பு செயற்பாடுகளில் அவ்வளவாக கரிசனை காட்டுவதில்லை என்ற கண்டனங்களுக்கும் குறைவிருப்பதாகத் தெரியவில்லை.தோட்டத் தொழிலாளர்களின் லயன் குடியிருப்புக்களும் உரியவாறு சீர்செய்யப்படாத ஒரு நிலையே காணப்படுகின்றது. இவ்வாறாக தொழிலாளர்கள் எதிர்நோக்கும் சவால்கள் நாளுக்கு நாள் அதிகரித்து செல்லும் நிலையில் இவற்றை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும் நடவடிக்கைகளும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.எனினும் இவற்றுக்கான தீர்வுகள் உரியவாறு பெற்றுக் கொடுக்கப்படாத நிலையில் இவையெல்லாம் வெறும் கண்துடைப்பு நடவடிக்கைகளே என்றும் கருத்து வெளிப்பாடுகள் இருந்து வருகின்றன.

## ஆரோக்கிய நிலைமைகள்

பெருந்தோட்டத் தொழிலாளர்கள பல்வேறு துறைகளிலும் எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பாக ஆய்வு செய்யும் நடவடிக்கைகள் காலம்காலமாக இடம்பெற்று வருகின்றன. தேசிய மற்றும் சர்வதேச ஆய்வுகள் பலவும் இதில் உள்ளடங்கும்.இதனடிப்படையில் கல்வி, பொருளாதாரம், அரசியல், போஷாக்கு, மருத்துவ, சுகாதார நிலைமைகள், குடியிருப்பு வசதிகள், தொழில்வாய்ப்பு, சிசு மற்றும் தாய்மார் மரண வீதம் எனப்பல்வேறு விடயங்களும் ஆய்விற்கு உட்படுத்தப்பட்டன.அத்தோடு பெருந்தோட்டப் பகுதிகளில் தொழில் புரியும் பெண்களின் ஆரோக்கிய நிலைமைகள் தொடர்பாகவும் கடந்த காலங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.1988 இல் மேற்கொள்ளப்பட்ட இத்தகைய ஒரு ஆய்வில் பல்வேறு விடயங்களை அறியக்கூடியதாக இருந்தது. ஈரக்கால நிலையில் நாள் முழுவதும் வேலை செய்யும் பெண்கள் தடிமன், இருமல் போன்ற நோய்களால் துன்புறுகின்றனர். இரும்புச் சத்துக் குறைவு, இரத்த அழுத்தம், பிரசவம் தொடர்பான உடற் கோளாறுகள் போன்றவற்றிற்கு அதிகமான பெண்கள் ஆளாகியுள்ளனர். பெருவிரல் மற்றும் ஆட்காட்டி விரல்கள் புண்ணாதல், தோள் பட்டை, முதுகெலும்பு வலி, காலில் ஆணி ஏற்படல் போன்றவற்றால் தொழில்புரியும் பெருந்தோட்டப் பெண்கள் துன்புறுவதாகவும் ஆய்வுகளின் மூலமாக அறியக்கூடியதாக இருந்தது.

இதேவேளை பெருந்தோட்ட மக்கள் எதிர்கொள்ளும் சமூக, பொருளாதார நிலை குறித்து ஆராய்வதற்கென 1992 இல் ஜனாதிபதி ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டது. இக்குழு தனது அறிக்கையில் கீழ்காணும் விடயங்களில் அம்மக்கள் பின்தங்கிய வெளிப்பாடுகளைக் கொண்டிருப்பதாக ஆய்வின் முடிவில் வலியுறுத்தி இருந்தது.இதற்கேற்ப குடியுரிமை, தொழில்வாய்ப்புகள், கல்வி, தொழிற்பயிற்சி, வீட்டு வசதியும் சுகாதாரமும், சமூகநலன் பேணல், மின்சார வசதி, தொடர்பாடல் வசதிகள், சமூக கலாசார மேம்பாடு, விளையாட்டு பொழுதுபோக்கு போன்றவற்றிற்கான வசதிகள், பிரதான தேசிய நீரோட்டத்தில் இணைந்து கொள்வதற்கான வாய்ப்புகள் போன்ற பலவற்றிலும் பெருந்தோட்ட மக்கள் பின்தங்கியுள்ளதாக ஆணைக்குழு கருத்துக்களை முன்வைத்திருந்தது.

இதேவேளை பெருந்தோட்ட மக்களின் அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு ஐந்தாண்டு மற்றும் பத்தாண்டு திட்டங்க ளும் முன்வைக்கப்பட்டன.எனினும் இவற்றின் மூலமான சாதக விளைவுகள் குறிப்பிடத்தக்கனவாக இல்லை என்பதும் வருந்தத்தக்கதாகும். ஆட்சியாளர்கள் தொடர்ச்சியாக மலையக மக்கள் மீது மாற்றாந்தாய் மனப்பான்மையே வெளிப்படுத்தி வந்தனர்.இந்நிலையில் பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை

தொடர்ச்சி 17ஆம் பக்கம்




முனைவர் **ஆரு**–சென்னை

## பாகம் 1

இந்திய ஒன்றியத்தின் ஏழு சகோதரிகள் (அருணாசல பிரதேசம், மிசோரம், நாகலாந்து, அசாம், திரிபுரா, மேகலயா, மணிப்பூர்) என்றும், வடகிழக்கு மாநிலங்கள் என்றும் அழைக்கப்படும் மாநிலங்களில் ஒன்றுதான் மணிப்பூர். மணிப்பூர் என்றால் சமசுகிருத மொழியில் (மணி என்றால் தங்கம் அல்லது நகை, பூர்(புரா) என்றால் நிலம்) தங்கத்தின் நிலம் அல்லது நகைகள் நிறைந்த நிலம் என்று பொருள்படும். இங்கு சம வெளியும், பள்ளத்தாக்குகளும், மலைக ளும், அடர்த்தியான காடுகளும் உள்ளன. இங்கு மன்னராட்சி நடைபெற்றது. 21. 09. 1949 அன்று கடைசி மன்னரான மகாராசா போதசந்ரா பழங்குடி மக்களின் விருப்பத்திற்கு எதிராக மணிப்பூர் பேரரசை இந்திய ஒன்றியத் தோடு இணைக்க கையெழுத் திட்டார். 1956ல் ஒன்றிய பகுதியாகவும் (யூனியன் பிரதேசம்), 1972ல் தனி மாநிலமாகவும் மணிப்பூர் மாற்றப் பட்டது.

சமவெளியில் 57. 2 விழுக் காடு மெய் தேய் (Meitei) (மெய்டி அல்லது மைதேயி) என்ற இதர பிற் படுத்தப் பட்டோர் அரசியல், பொருளாதார பலமும், பெரும்பான்மையும் பெற்று, பெரும்பாலும் இந்துக்களாக வாழ்கின்றனர். மெய்தேய் மக்கள் மாநிலத் தின் மொத்த நிலப்பரப்பில் 10 விழுக்காடு நிலங்களில் வாழ்கின்றனர். மலைகளில் அல்லது அடர் ந்த மலைக் காடுகளில் 42. 8 விழுக்காடு பழங்குடி மக்கள் அரசியல், பொருளாதார பலமின்றி வாழ்கின்றனர். இந்தப் பழங்குடியினர் 34 இனக் குழுக்களாக உள்ளனர். ஆனால் இந்தக் குழுக்களில் அதிக எண்ணிக்கையில் நாகா (24 விழுக்காடு), குகி அல்லது ஜோமி (16 விழுக்காடு) போன்ற இனக் குழுக்கள் வாழ்கின்றன. பழங்குடியினர் 90 விழுக்காடு நிலங்களில் பெரும்பாலும் கிறித்தவர்களாக வாழ்கின்றனர். சிலர் பழங்குடி சமயத்தைச் சார்ந்தவர்களாக வாழ் கின்றனர்.

### போராட்ட வரலாறு

இந்திய ஒன்றியத்தோடு ஒருபோதும் மணிப்பூர் பழங்குடியினர் சேர விரும்பவில்லை. 1972 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை, ஏறக்குறைய 50 ஆண்டுகளாக இந்திய ஒன்றியத்திலிருந்து பிரிந்து தனிநாடாக செயல்பட பழங்குடி மக்கள் போராடி வருகின்றனர்.



அதனால் 1980 முதல் 2004 வரை தங்களது விடுதலைக்காக போராடுகின்றவர்களை கிளர்ச்சியாளர்கள் என்றும், பழங்குடி மக்களை தீவிரவாதிகள் என்றும், அந்த மாநிலத்தை பதட்டமான, கிளர்ச்சியான, தேசவிரோதமான இடமாக ஒன்றிய அரசு அறிவித்து, அளவில்லாத இராணுவத்தை இறக்கி, இராணுவ ஆட்சி செய்து வருகிறது. அதற்காக ஆயுதப்படை சட்டத்தை(சிறப்பு அதிகாரம்) கொண்டு வந்து, மண்ணின் மக்களாகிய, தொல்குடிகளாகிய பழங்குடி மக்களை அடக்குமுறையால் ஒடுக்கிகொண்டிருக்கின்றனர். இந்த இராணுவச் சிறப்புச் சட்டம் பின்வரும் அதிகாரத்தை இராணுவத்திற்கு தருகிறது: ஒன்று. தனி இடத்தையும் பொது இடத்தையும் ஒன்றாக கருதுதல். இரண்டு. தனிநபரை 24 மணி நேரமும், அதை கணக்கில்லாமல் புதுப்பிப்பதின் வழியாக பல நாட்கள் தடுப்புக்காவலில் வைக்கலாம். மூன்று. நயன்மன்ற ஆணையில்லாமல் ஒருவரை, சட்டத்தை மீறினார் என்றும், ஆயுதம் வைத்திருந்தார் என்றும், 4 நபர்களுக்கு மேல் குழுவாக கூடினார் என்றும், இராணுவத்திற்கு தடையாக இருந்தார் என்றும் கருதி தேடலாம், சுடலாம், கொலை செய்யலாம். இந்தச் சட்டத்தால் பல்லாயிரக்கணக்கான பழங்குடி இளைஞர்கள் கொலைசெய்யப்பட்டனர். வலிந்து காணாமல் ஆக்கப்பட்டனர். பல ஆண்டுகளாக விசாரணையின்றி சிறையில் வாடுகின்றனர். இந்தச் சட்டத்தை எதிர்த்தும், மண்ணையும் மக்களையும் பாதுகாக்கவும் மணிப்பூர் மங்கை, மண்ணின் போராளி இரோம் சானு சர்மிளா ஏறக்குறைய 15 ஆண்டுகளாக (500 வாரங்களுக்கு மேலாக) உணவின்றி, நீரின்றி போராடினாள்.



2004 ஆம் ஆண்டு அசாம் இராணுவ முகாம் வீரர்கள் தங்கசம் மனோராமா தேவி என்ற பழங்குடிப் பெண்ணை பாலியல் வல்லுறவு செய்து கொலை செய்தனர். இந்திய ஒன்றிய இராணுவ பாலியல் வன்கொடுமையை எதிர்த்து "மெய்ரா பைபிசு" என்ற பழங்குடி பெண்கள் அமைப்பினர் இந்திய ஒன்றிய இராணுவ முகாமிற்கு முன் ஆடையின்றி (நிர்வாணமாக) "இந்திய இராணுவமே! எங்களை கற்பழி" என்ற முழக்கத்துடன் தங்களது உடலையே விடுதலைக் குறியீடாக வைத்து போராடினர்.

மாநிலத்தின் மக்கள்தொகையில் 53 விழுக்காடு உள்ள மெய்தேய் என்ற இதர பிற்படுத்தப்பட்ட மக்கள், பழங்குடியினர் வாழும் பகுதிகளில் நிலங்களை வாங்கவும், பழங்குடியினரின் இடஒதுக்கீடு போன்ற சலுகை களை பெறவும், இந்திய ஒன்றிய அரசமைப்புச் சட்டம் தரும் பாதுகாப்பை அனுபவிக்கவும், தங்களை பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று நீண்ட நாட்களாக கோரிக்கை வைத்து வருகின்றனர்.

அதனால் மண்டல் குழு அறிக்கையை இங்கு செயல்படுத்தி, மெய்தேய் மக்களை இதர பிற்படுத்தப்பட்டோர் என்ற பிரிவில் சேர்க்கப்பட்டு 17 விழுக்காடு இடஒதுக்கீடு கொடுத்தனர். ஆனால் மெய்தேய் மக்கள் இந்த இடஒதுக்கீட்டில் நிறைவடையாமல் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்கவேண்டும் என்று மீண்டும் போராடுகின்றனர்.

இந்த தன்னலமுள்ள, சுரண்டும் கோரிக்கைகளை பழங்குடி மக்கள் கடுமையாக எதிர்க்கின்றனர். இந்தக் கோரிக்கையை அரசு ஏற்றால் பழங்குடியினரின் வாழ்வாதாரம் கொள்ளையடிக்கப்படும். இயற்கை அழகு அழிந்து போய்விடும். வாழ்வுரிமைகள் பறிக்கப்படும். இந்திய ஒன்றிய அரசமைப்புச்சட்டம், குறிப்பாக பழங்குடி பாது காப்புச் சட்டம் செயலிழந்துவிடும் என்று கருதி மெய்தேய் மக்களின் கோரிக்கைகளைநாகா, குகி போன்ற பழங்குடியினர் எதிர்க்கின்றனர்.

2008 ல் தன்னாட்சி கேட்டு போராடும் குகி போராளி குழுக்களை ஊரடங்கில் வைத்துவிட்டு, 2017 ஆம் ஆண்டு தேர்தலில் வெற்றிபெற 'மெய்தேய் மக்களை பழங்குடிகளாக மாற்றுவோம்' என்று தேர்தல் வாக்குறுதியாக கொடுத்து, ஆட்சியை கைப்பற்றி, பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க கடுமையாக பாசக அரசு உழைக்கின்றது.

### திசைமாற்றிய தீர்ப்பு

மெய்தேய் மக்கள் தங்களை பழங்குடியினர் பட்டியலில் சேர்க்கவேண்டுமென்று மணிப்பூர் உயர்நீதிமன்றத்தில் வழக்கு போட்டனர். அது பல ஆண்டுகளாக நிலுவையில் இருந்து வந்தது. சென்னை உயர் நீதிமன்றத்திலிருந்து மணிப்பூர் உயர்நீதி மன்றத்திற்கு மாற்றம் பெற்றுச் சென்ற நீதிபதி முரளிதரன் தலைமை நீதிபதியாக(பொறுப்பு) இருக்கிறார். நிலுவையில் கிடந்த இந்த ரிட் மனுவை விசாரித்து, மெய்தேய் மக்களை பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க மாநில அரசு நான்கு வாரங்களுக்குள் இந்திய ஒன்றிய அரசுக்கு பரிந் துரைக்கவேண்டும் என்று 27. 03. 2023 அன்று உத் தரவை வழங்கினார்.

இந்த உத்தரவை எதிர்த்து பாசக சட்டமன்ற உறுப்பினரும் மலைப்பகுதிகளின் குழுத் தலைவருமான தின்காங்லுங் காங் மேய் பழங்குடி மக்களாக இல்லாதவர்களை பழங்குடியினராக மாற்றுவது இந்திய ஒன்றிய அரசமைப்புச் சட்டத்திற்கு எதிரானது என்று கடுமையாக விமர்சனம் செய்து எதிர்த்தார். இந்திய ஒன்றிய அரசமைப்பு உருவாக்கிய மலைப் பகுதிகளின் குழுவின் ஒப்புதல் பெறாமல் பழங்குடி பட்டியலில் சேர்க்க உத்தரவிட்டது சட்டத்திற்கு எதிரானது. அதுபோல பழங்குடி மாணவர் அமைப்புகளும், பழங்குடி மக்களும் இந்த தீர்ப்பை எதிர்த்தனர். அதனால் நீதிபதி முரளிதரன் "இவர்கள் நீதிமன்றத்தை அவமதித்துவிட்டனர். அதனால் அவர்களை கைதுசெய்து நீதிமன்றத்திற்குமுன் நிறுத்தவேண்டுமென்று" மாநில காவல்துறை தலைமை இயக்குனருக்கு (டிஜிபிக்கு) உத்தரவிட்டார்.

திருமிகு தின்காங்லுங் காங்மேய் பழங்குடி பட்டியலில் சேர்க்கும் உத்தரவையும், தன்னை கைதுசெய்ய வழங்கப்பட்ட உத்தரவையும் எதிர்த்தும், கிறித்தவ கோவில்களுக்கும் வழி

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# மணிப்பூர் எரிகிறது!

# குருதி கொதிக்கிறது

பேராசிரியர்.மு.நாகநாதன்

வடகிழக்கு மாநிலங்களிலிருந்துசென்னைப் பல்கலைக்கழகப் பொருளாதாரத் துறையில் 50க்கும் மேற்பட்ட மாணவ- மாணவிகள் முதுகலை பட்டபடிப்பினை மேற்கொண்டார்கள்.



1986-2006ஆம் ஆண்டுகளில் நான் பேராசிரியராக-துறைத் தலைவராகப் பணியாற்றிய போது அஸ்ஸாம், மிசோரம், திரிபுரா, மணிப்பூர், நாகலாந்து ஆகிய பகுதிகளிலிருந்து மாணவர்கள் வருவதை ஊக்குவித்தேன்.

மிகவும் பண்பாகவும், அன்பைச் செலுத்தி ஆசிரியர்களை மதிக்கும் தகைமையை அம்மாணவர்கள் பெற்றிருந்தனர். மணிப்பூர் மாநிலத்தின் குக்கி-மெய்தி இன மாணவ மாணவிகள் ஒற்றுமையோடு கல்வி பயின்றார்கள்.

ஒன்றிய அரசின் கீழ் இயங்கி வந்த இந்தியன் வானூர்தியில் விடுமுறையில் செல்வதற்குக் கட்டணச் சலுகையைப் பெறுவதற்கு விண்ணப்பத்தில் கையொப்பம் பெறுவதற்கு வரும் மாணவர்கள் எங்கள் நாட்டிற்குச் சென்று இந்தியா திரும்புவதற்கு உதவியதற்கு நன்றி என்று தான் குறிப்பிடுவார்கள்.

எனக்கு இத்தகைய சொல்லாடல் அதிர்ச்சி தரும் வியப்பாக இருந்தது. எனக்கு இதற்கான பதில் 2000 ஆம் ஆண்டு புதுதில்லி பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டத்திற்கான ஆய்வுக் கட்டுரையில் கிடைத்தது.

வரலாற்றுத் துறையில் ஆய்வினை முடித்து, முனைவர் பட்டம் பெற்று, தனது ஆய்வுக் கட்டுரையை மாலேம் நிங்தோஜா Freedom from India -A History of Manipur Nationalism 1947-2000 (Malem Ningthouja) என்ற தலைப்பில் புத்தகமாக வெளியிட்டார். இந்நூலைப் புதுதில்லி அலைக் கற்றை பதிப்பகம் வெளியிட்டுள்ளது . நான் பெற்ற செல்வம் என்பது எனது மாணவர்கள் காட்டும் பேரன்பு தான். புதுதில்லியில் உயர் அலுவலராகப் பணியாற்றும் அன்பு மாணவர் பழனியப்பன் (#M. Palaniappan )உடனடியாக நான் கேட்டவுடன் நூலை வாங்கி அனுப்பினார். இன்றும் பல நூல்களை அனுப்புகிறார்.

அந்த நூலைப் படித்தவுடன் மறைந்த ஐயா ஆனைமுத்து ஆசிரியராக இருந்த சிந்தனையாளன் ஏட்டில் **“மணிப்பூர் ஒரு மாநிலமா? அல்லது நாடா?”** என்ற தலைப்பில் ஒரு கட்டுரையை 13 ஆண்டுகளுக்கு முன்பு எழுதினேன்.

அக்கட்டுரையில் ஆய்வாளர் மாலேம் நிங்தோஜா குறிப்பிட்ட சில முதன்மையான கருத்துக்களை இணைத்திருந்தேன்.''தொடர்ந்து மணிப்பூரில் தங்களின் உரிமைகளுக்காகக் களம் அமைத்து மக்கள் போராடி வருகின்றனர்.''

“1891- ஆம் ஆண்டு பிரித்தானிய பேராதிக்க அரசு மணிப்பூரை ஆட்சி செய்த இளவரசர் கோயர்ங்கிடம் தங்களின் உலக ஆதிக்கத்தைக் காட்டி அடிபணிய வலியுறுத்தியது. இராணுவத்தைக் கொண்டு தாக்கியது. அரசர் மாளிகையை முற்றுகையிடப்பட்டது. மணிப்பூர் வீரர்கள் பிரித்தானிய இராணுவத்தைப் படுதோல்வி அடைய செய்தனர். 5 பிரித்தானிய இராணுவத்தினர் மரணம் அடைந்தார்கள். பிரித்தானிய உயர் அலுவலர்களைக்குற்றவாளி என அறிவித்தது.

மணிப்பூர் நீதிமன்றம் மரண தண்டனையை விதித்தது. உயர் அலுவலர்கள் தூக்கிலிடப் பட்டார்கள். இதற்குப் பிறகு தான் பிரித்தானிய அரசு தங்களின் இராணுவ வலிமையால் பொம்மை அரசுகளை உருவாக்கி அம்மண்ணின் வளங்களைச் சூறையாடினர்.

1947 ஆம் ஆண்டு இந்தியா விடுதலைப் பெற்ற பிறகும் காலனி ஆதிக்க கொள்கையே ஒன்றிய அரசு பின்பற்றியது. மணிப்பூரின் கபோ பள்ளத்தாக்கை பர்மாவுடன் இணைப்பதற்கு பிரித்தானிய அரசு முயன்றது. மணிப்பூர் மன்னனின் ஒப்புதல் இல்லாமலேயே இந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இதை அறிந்த மன்னர் கம்பீர் அதிர்ச்சி உற்று மாரடைப்பால் இறந்தார்.

மணிப்பூர் மக்கள் களம் கண்டனர். பர்மா அரசு பணிந்தது. கபோ பள்ளத்தாக்கு பகுதிக்கான உரிமைத் தொகையை பர்மா மணிப்பூர் அரசிற்கு 1949 ஆம் ஆண்டு வரை செலுத்தியது. ஆனால் இந்திய ஒன்றிய அரசு உரிமைத் தொகைக்கூட பெறாமல் கச்சத்தீவை இலங்கைக்குத் தாரை வார்த்ததைப்போல பர்மாவிற்கு கபோ பள்ளத் தாக்கை விட்டுக் கொடுத்து விட்டது.

மணிப்பூரின் முதல் கம்யூனிஸ்டு தலைவரான இராபட் பெண்கள் படையை உருவாக்கி களம் அமைத்தார். பன்முக ஆளுமையான இராபட் மார்க்ஸ், லெனின் ஆகியோரின் புரட்சிக் கருத்துக்களை மக்களிடம் பரப்பினார்.

பிரித்தானிய அரசு போன்றே முதலாளிகள் நலனிற்காகவே ஒன்றிய அரசு துணை நிற்கிறது. மார்வாடி, டாடா, மும்பாய், குஜராத் முதலாளிகளை மணிப்பூர் வளங்களைச் சுரண்டல் செய்ய ஒன்றிய அரசு முற்படுகிறது.

மணிப்பூர் மக்களின் வாழ்வாதாரங்களைப் பறிக்கிறது. உரிமைகளை ஒடுக்குகிறது என்று முழக்கம் செய்தார் தோழர் என்று மணிப்பூர் மக்களால் அன்புடன் போற்றப்பட்ட இராபட். மணிப்பூர் மக்கள் விழிப்புணர்வு பெற்று தங்களின் மொழி, பண்பாட்டு அடையாளங்களை மீட்டெடுக்க முற்பட்டனர். தாய் மொழிக் கல்வி ஊக்குவிக்கப்பட்டது. இந்தி மொழி அகற்றப்பட்டது.

சமஸ்கிருத மொழி அடையாளங்கள் அகற்றப் பட்டன. மணிப்பூர் மொழியிலேயே பிறந்த குழந்தைகளுக்குப் பெயர்கள் சூட்டப்பட்டன.

ஆனால் விடுதலைப் பெற்ற இந்தியாவிலும் மணிப்பூர் மக்கள் மீது இராணுவ அடக்குமுறை பின்பற்றப்படுகிறது.பெண்கள் கற்பழிக்கப்பட்டார்கள்.

இதனால் மாநில சுயாட்சி முறையைக் கூட மணிப்பூர் மக்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். எனவே மணிப்பூர் முழு உரிமையை ஒன்றிய அரசு வழங்கவேண்டும் என்று மாலேம் நிங்தோஜா குறிப்பிட்டுள்ளார்.மேலும் மாலேம் நிங்தோஜா மூன்று கருத்துக்களைத் தனது நூலில் அழுத்தமாகப் பதிவிட்டுள்ளார்.இன்றைய சூழலில் இந்திய நாடு என்பது நிரந்தரமாக இருக்குமா என்று நான் ஐயுறுகிறேன்.

காலப்போக்கில் அதனுடைய உட்கூறுகள் பிரிந்து நாட்டினுடைய அமைப்புத் தன்மை படிப்படியாக அழிந்து விடும். ( I doubt that a nation that exists today is a permanent entity. It may lose number of its components and become gradually extinct. Page -283.)”இந்தியா ஒரு போராடும் களமாக இருக்கிறது.பலர் நினைப்பது போன்றோ, இந்திய அரசு உரிமை கொண்டாடுகிற தன்மையிலோ இந்தியா ஒரு நாடன்று.காரணம், நாடு என்கிற உருவாவதற்கான இயற்கையான காரணங்கள் இங்கு இல்லை.இந்தியா என்ற ஒரு புவி அமைப்பு கருத்தொற்றுமையிலும்,படை பலத்தாலும் அரசால் உருவாக்கப்பட்ட து.”

“எனவே இந்தியாவில் பின்பற்றப்படுகிற ஒருமைப்பாடு, தேசியம் என்பதெல்லாம் அதிகார வர்க்கம் மக்களை ஒடுக்கித் திணிக்கப்பட்ட தேசியம் (Official Nationalism) என்று ஆய்வாளர் மாலேம் நிங்தோஜா எச்சரிக்கை விடுத்திருந்தார்.

எவ்வளவு எச்சரிக்கையோடு எவ்வளவு கவனத்தோடு எவ்வளவு பொறுப்புணர்வோடு எதிர்கொள்ள வேண்டும் என்று 20 ஆண்டுகளுக்கு முன்பே ஓர் ஆய்வாளரால் அக்கறையோடு எழுதப்பட்ட கருத்துக்களை முற்றிலுமாக இன்றைய பாஜக ஆட்சியாளர்கள் புறந்தள்ளி, எரிகிற தீயில் இந்துத்துவா எண்ணெயை

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

# “ஒன்றில் ஐரோப்பாவைச் சென்றடைகிறோம் அல்லது சாவைத் தழுவுகிறோம்”



பாகம் 1

# ஆபத்துநிறைந்த கடலைக் கடக்க முயலும் பதின்மவயது இளையோர்கள்

தமிழில்: ஜெயந்திரன்

பரந்து விரிந்து கிடக்கும் மத்தியதரைக் கடலில், சிவப்பு, வெள்ளை நிறத்திலான பிரமாண்டமான மீட்புக்கப்பல் சென்று கொண்டிருக்கும் அதே நேரத்தில், அடிவானத்தில் கடும் நீல நிறத்திலான காற்றினால் நிரப்பப்பட்ட படகு ஒன்று திடீரெனத் தோன்றுகின்றது. தூரத்திலேயென்றாலும் அந்தப் படகினுள் பலர் இருப்பதை அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது.




எஸ்ஓஎஸ் மெடிற்றரானே (SOS Meditarranee) என்ற அறக்கட்டளையைச் சார்நத மீட்புப்பணியாளர்கள் தலைக்கவசங்களையும் உயிர்காப்புக்கவசங்களையும் அவசரஅவசரமாக அணிந்துகொண்டு, அந்த இடத்துக்கு வேகமாகச் செல்லக்கூடிய படகுகளில்விரைந்துசெல்கின்றனர். அங்கு ஒவ்வொருவராக அவர்களைத் தங்களது படகினுள் விரைந்து ஏற்றுகின்றனர். இவ்வாறு ஏற்றும் போது அவர்களை எண்ணவும் அவர்கள் தவறவில்லை.



காம்பியா (The Gambia) நாட்டைச்சேர்ந்த சிறுவர்களும் இளைஞர்களும் திரிப்பொலிக்கு (Tripoli) அருகில் உள்ள காஸ்ரல் வேர்தே (Castelverde) என்ற நகரத்திலிருந்து, 54 கடல்மைல்கள் பயணமானதுடன், 15 மணித்தியாலங்களைக் கடலிலே கழித்திருக்கின்றனர். அவர்கள் அனைவரும் மனஉளைச்சலுடன் இருப்பதை அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது.

மீட்புப்பணியாளர்கள் அங்கு வந்து சேருவதற்கு முன்னர், அளவுக்கதிகமாக ஏற்றப்பட்டிருந்த அந்தப் பயணிகளுக்கிடையே சண்டை ஏற்படக்கூடிய வாய்ப்பு இருந்தது என்று அதிலிருந்து சிலர் பின்னர் என்னிடம் தெரிவித்திருந்தனர். அவர்களுள் ஒரு சிலர் தமது முயற்சியைக் கைவிடாது தொடர்ந்து பயணிக்க வேண்டும் என்ற மனநிலையில் இருக்க, மற்றவர்களோ மீண்டும் தாம் புறப்பட்ட இடத்துக்குத் திரும்பி, பின்னர் மீண்டும் முயற்சிக்கலாம் என்றனர். இந்தக் குழப்பத்தினுள் ஒருவர் தனது அலைபேசியை கடலுக்குள் போட்டு விட்டார். ஒருவர் மான் செஸ்ரர் நகர உதைபந்தாட்டக்குழுவின் மெல்லிய நீல நிற ஆடையை அணிந்திருந்தார். மற்றவர்களோ ஐபோன்களை கையிலே வைத்திருந்தனர். அவர்களுள் மிகச்சிலரே குடிப்பதற்குத் தேவையான தண்ணீரை எடுத்துவந்திருந்தனர். அவர்களில் பலருக்கு நீந்தத் தெரியாது. வாகனங்களின் ரயர்களுக்கு உள்ளே உள்ள ரியூப்களை கடலில் தமது பாதுகாப்புக்காக அவர்கள் எடுத்துவந்திருந்தனர்.

இந்தக் குடியேறிகளில் சிலர் இந்த மத்தியதரைக்கடலைக் கடப்பதற்கு ஏற்கனவே பல தடவைகள் முயற்சி செய்திருக்கின்றனர். மீட்புப்பணி நடந்து கொண்டிருக்கும் போது, அடிவானத்திலே லிபியக் கடற்கரையோரக் காவல்படையினரின் படகு தென்பட, அவர்களிடையே பயம் தொற்றிக் கொள்கிறது. இந்த லிபிய கடற்கரையோரக் காவலர் களால் இதிலுள்ள பலர் முன்னர் லிபியாவுக்கு மீண்டும் கொண்டுசெல்லப் பட்டிருக்கின்றனர். ஐரோப்பிய ஒன்றியம் லிபியாவின் இந்தக்காவலர்களுக்கு வேண்டிய கப்பல்கள், பயிற்சிகள், நிதி என்பவற்றை வழங்கியிருக்கிறது.

மீட்புக்கான வேகப்படகினுள் அமர்ந்திருப்பவர்களில் சிலரின் முகத்தில் இப்போது சிரிப்பை அவதானிக்கக்கூடியதாகவிருக்கிறது. அவர்களுள் ஒருவர் தனது அலைபேசியைப் பயன்படுத்தி ஒரு செல்பி எடுப்பதையும் பார்க்கக் கூடியதாகவிருக்கிறது.

மீட்புப்பணியாளர்களில் ஒருவரின் கரங்களைத் தான் பற்றிப் பிடித்தபோது “ஐரோப்பாவினுள் தான் காலடி எடுத்துவைத்துவிட்டேன்” என உணர்ந்ததாக ஒருவர் பின்னர் என்னிடம் தெரிவித்தார். மீட்கப்பட்டவர்கள் எஸ்ஓஎஸ் மெடிற்றறானேக்குச் சொந்தமான ஓஷன் வைக்கிங் (Ocean Viking) என்ற கப்பலில் ஏற்றப்படுகின்றனர். இந்தக் கப்பலில் அவர்களுக்கான மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதுடன், அவர்களுக்கு புதிய ஆடைகளும் பற்களைத் தீட்டுவதற்கான தூரிகைகள் போன்ற அத்தியாவசியப் பொருட்களும் வழங்கப்படுகின்றன.

குறிப்பிட்ட அறக்கட்டளையைச் சேர்ந்த அதிகாரிகள் இப்போது இத்தாலிய அதிகாரி களுக்குத் தகவல் தெரிவிக்கின்றனர். காலதாமதமின்றி இத்தாலியின் தென்புறத்தில் இருக்கும் பாறி (Bari) நகரத்திற்கு அவர்களை அழைத்துவருமாறு இத்தாலிய அதிகாரிகள் அவர்களிடம் தெரிவிக்கின்றனர்.

குடியேறிகளை ஏற்றியவுடன், இத்தாலிய நகரம் ஒன்றுக்கு உடனடியாக அவர்களைக் கொண்டுவரும்படி அண்மையில் இயற்றப்பட்ட ஒரு புதிய சட்டம் கூறுகிறது. இங்கிருந்து பாறியைச் (Bari) சென்றடைய மூன்று நாட்கள் தேவை.




பாறியை நோக்கி பயணம் தொடரவும் கப்பலின் மேல் தளத்தில் மருத்துவ வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள அறைகளில் நாங்கள் அவர்களுள் சிலருடன் பேச்சுக்கொடுக்கிறோம். அவர்களுள் பொரும்பாலானோர் ஆங்கில மொழியைப் பேசக்கூடியவர்களாக இருக்கிறார்கள். அவர்களது பெயர்கள் அனைத்தும் மாற்றப்பட்டு இருக்கின்றன.

தாம் மேற்கொள்ளுகின்ற பயணத்தில், தாம் சந்திக்கக்கூடிய ஆபத்துகள் தொடர்பாக தாம் ஏற்கனவே நன்கு அறிந்திருக்கிறார்கள்

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

## ஒன்றில் ஐரோப் ... தொடர்ச்சி ...

என்று அவர்கள் தெரிவிக்கிறார்கள். ஐரோப்பாவை அடைவதற்கு, தாங்கள் இதற்கு முன்னரும் பல தடவைகள் முயன்றிப்பதாகச் சிலர் தெரிவிக்கின்றனர். சிலர் கடற் கரையோர காவல்படையினரால் (Coastguard) காப்பாற்றப்பட்டதால் மயிரிழையில் உயிர் தப்பியிருக்கின்றனர். ஏழு தடவைகள் தான் முயற்சித்ததாக 17 வயது நிரம்பிய ஒருவர் கூறினார்.

நான் பேசிய குடியேறிகள் ஒவ்வொருவரதும் நண்பர்கள் இவ்வாறான முயற்சிகளின் போது கடலில் உயிரிழந்திருக்கின்றனர். குடியேறிகள் தொடர்பாக கிரேக்க நாட்டில் நடந்த பாரிய விபத்து பற்றிச் சமூகவலைத்தளங்களின் ஊடாக தாம் அறிந்ததாக அவர்களுள் சிலர் கூறினார்கள். குடியேறிகளுக்கு நடந்த விபத்தில் இதுவே மிகவும் அதிகமான எண்ணிக்கையானோர் இறந்த நிகழ்வாகும். 750 குடியேறிகள் வரை இந்த விபத்தில் இறந்ததாக அறியப்படுகிறது. இரண்டு வாரங்களுக்கு முன்னர் தான் அந்த விபத்து நடைபெற்றிருந்தது. இறந்த அந்த குடியேறிகளும் லிபியாவிலிருந்து தான் புறப்பட்டிருந்தனர். "அந்த விபத்தினால் நான் எனது முயற்சியைக் கைவிடவில்லை. ஏனென்றால் எங்களது மனநிலையில் தான் அவர்களும் இருந்திருப்பார்கள். ஒன்றில் நாங்கள் ஐரோப்பாவில் கால் வைக்கிறோம். அல்லது சாவைத் தழுவுகிறோம்" "இந்த இரண்டு தெரிவுகளும் மட்டும் தான் எமக்கு இருக்கின்றன" என்று ஒரு பதின்ம வயது இளைஞன் என்னிடம் கூறினார்.

இறப்பால் செய்யப்பட்ட இந்தப் படகு பற்றிய செய்தியை அபாய அறிவுப்புக்கான தொலைபேசியிலிருந்து எஸ்ஓஎஸ் மெடிற்றானே பெற்றிருந்தது. கடலில் தத்தளிக்கும் குடியேறிகளுக்கென உருவாக்கப்பட்ட நெருக்கடிகால உதவிக்குரிய தொலைபேசி மூலமும் ஐரோப்பிய எல்லைக்காவல் அமைப்பான புறொன்ரெக்ஸ் (Frontex) இடமிருந்தும் இதுபற்றிய செய்தி கிடைத்திருந்தது. இந்தப்படகில்பயணம்செய்தவர்களில்80 வீதமானோர் 18 வயதுக்குக் கீழ்ப்பட்ட சிறுவர்கள். பணம் சம்பாதித்து, தமது குடும்பங்களுக்கு அனுப்புவதை நோக்காகக் கொண்டு, இவர்களில் பலர், பல வருடங்களுக்கு முன்னரேயே தமது வீடுகளை விட்டுப் புறப்பட்டிருந்தனர்.

இவர்களில் பலர் தாம் தமது பெற்றோர்களில் ஒருவரையோ அல்லது இருவரையோ இழந்திருப்பதாகவும், குடும்பத்தில் தாம் மூத்த பிள்ளைகள் என்றும் தமது உறவுகளைப் பராமரிக்கும் பொறுப்பு தமக்கு இருக்கிறது என்றும் தெரிவித்தனர்.

இவர்களில் பெரும்பாலானோர் லிபிய நாட்டுக்கு தென்மேற்கே 2000 மைல்கள் தொலைவில் உள்ள காம்பியா என்ற நாட்டைச் சேர்ந்தவர்கள். காம்பியா உலகின் மிகவும் வறிய நாடுகளில் ஒன்று என்பதுடன், அண்மைக்காலங்களில் ஏனைய ஆபிரிக்க நாடுகளுடன் ஒப்பிடும் போது, அந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் மிகவும் அதிகமாக ஏனைய நாடுகளுக்குக் குடிபெயர்ந்திருக்கிறார்கள் என்று குடியேற்றத்துக்குப் பொறுப்பான பன்னாட்டு நிறுவனமான ஐஓஎம் (IOM) நிறுவனம் தெரிவித்தது. "ஒழுங்கற்ற குடியேற்றத்தின்" ஊடாக காம்பிய நாட்டைச் சேர்ந்த 30,000 பேர் 2015ம் ஆண்டுக்கும் 2020ம் ஆண்டுக்கும் இடையே ஐரோப்பாவை வந்தடைந்ததாக அந்த அமைப்பு தெரிவிக்கிறது. கிட்டத்தட்ட அதே எண்ணிக்கையானோர் 2020 – 2022ம் ஆண்டுகளுக்கிடையில் வந்துசேர்ந்திருக்கிறார்கள்.

மத்தியதரைக்கடலின் மத்திய பகுதிக் கூடாகவே ஐரோப்பிய ஒன்றியத்துக்குள் பொதுவாகக் குடியேறிகள் பயணிக்கிறார்கள். 2022ம் ஆண்டுடன் ஒப்பிடும் (50,318) போது, இந்த வருடத்தின் முதல் ஐந்து மாதங்களில் கண்டுபிடிக்கப்பட்ட பயணங்கள் மூலமாக குடியேறியவர்களின் எண்ணிக்கை இரண்டு மடங்குக்கு மேலாக இருக்கிறது என்று புறொன்ரெக்ஸ் அமைப்பு தெரிவித்திருக்கிறது. 2017ம் ஆண்டுக்குப் பின்னர் பதிவுசெய்யப்பட்ட மிக அதிகமான எண்ணிக்கை இதுவாகும்.

எமது படகில் ஏறி, ஐரோப்பாவை நோக்கித் தாம் பயணிக்கிறோம் என்பதில் இளகிய உணர்வை அனுபவித்த இந்த இளைஞர்கள் தமது பயணத்தை தாம் எப்படி ஆரம்பித்தார்கள் என்பதை எனக்குச் சொல்லத் தொடங்கினார்கள்.

மனிதர்களைக் கடத்துபவர்களின் வலைப்பின்னல்களைப் பயன்படுத்தி, ஆபிரிக்காவின் மேற்குப் பகுதியிலிருந்து, லிபியாவையும் வடக்குக் கரையோரத்தையும் வந்தடைய வெவ்வேறு பாதைகளை இவர்கள் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

தங்களது அயல்நாடான மாலியில் (Mali) உள்ள ஏஜன்டுடன் தொடர்புகிடைத்திலிருந்து தனது பயணம் ஆரம்பமானதாக, 18 வயது நிரம் பிய சூமா (Suma) கூறுகிறார். இந்த ஏஜன்டின் உதவியுடனேயே அல்ஜீரிய ஊடாக லிபியாவுக்கான தனது பயணத்தைத் தான் திட்டமிட்டதாகச் சொன்னார் சூமா. தான் வருகின்ற வழியில் மனிதக் கடத்தல்காரர்களால் கட்டிவைக்கப்பட்டு துன்புறுத்தப்பட்டதாகவும், தனக்கு உணவு தர அவர்கள் மறுத்ததாகவும் தெரிவித்தார்.

லிபியாவுக்கு அவருடன் சேர்ந்த பயணித்த யாருமே அந்தக் குழுவில் இருக்கவில்லை. இதன் காரணமாக சூமா கூறிய விடயங்களை உறுதிப்படுத்தும் வாய்ப்பு இருக்கவில்லை. ஆனால் வேறு பலரும் இவ்வாறான கதைகளைக் கூறினார்கள்.

தரையை அடைவதற்கு நீண்ட நேரம் எடுப்பதால், கப்பலில் இந்தக் குடியேறிகள் இப்போது இயல்பு நிலைக்குத் திரும்புகிறார்கள். உதைபந்தாட்டம், கெணெக்ற் போர் (Connect Four) போன்ற விளையாட்டுகளையும் அவர்கள் விளையாடுவது மட்டுமன்றி, ஒலிபெருக்கிகளில் ஒலிபரப்பப்படும் இசைக்கு நடனமாடவும் அவர்கள் தவறவில்லை.

அவர்கள் பயணம் செய்யப் பயன்படுத்திய உடுப்புகள் அவர்கள் திரும்பவும் கொடுக்கப்படும் போது அவர்களிடையே சற்றுப்பரபரப்பு ஏற்படுகின்றது. பெரிய குவியல்களுக்குள் தமது உடுப்புகளை அவர்கள் தேடி எடுத்து, வாளிகளில் நீர் நிறைத்து சவர்க்காரம் போட்டு தமது உடுப்புகளைக் கழுவிக் காயவிட்டுக்கொண்டிருந்தார்கள்.

பலருக்கு இந்த ஆடைகள் தான் அவர்களிடம் இருந்த ஒரே ஒரு சொத்து. மற்றையவை அனைத்தையும் அவர்கள் தங்கள் வீடுகளிலோ அல்லது லிபியாவிலோ விட்டுவிட்டு வந்திருந்தார்கள்.

பயணத்தைத் தொடங்க முன்னர் அவர்கள் எப்படி வாழ்ந்தார்கள் என்று எனக்கு அவர்கள் சொன்னதுக்கும் கப்பலில் அவர்கள் வாழத் தொடங்கிய வாழ்க்கைக்கும் இடையே ஒரு பெரிய வேறுபாட்டை என்னால் பார்க்கக் கூடியதாகவிருந்தது.

லிபியாவில் மனிதக் கடத்தல்காரர்களின் காணிகளில் தாம் தமது நாட்களைச் செலவிட்டதுடன், அக்காலப் பகுதியில், மத்திய தரைக்கடலைக் கடப்பதற்கு தமக்கு தேவைப்படும் பணத்தைத் திரட்ட அந்த நாட்களைச் செலவிட்டதாகவும் தெரிவித்தார்கள். அந்தப் பயணத்துக்குத் தமக்கு 3500 லிபிய டினார்கள் தேவைப்பட்டதாகக் கூறினார்கள். இந்தத் தொகை 570 பிரித்தானிய பவுண்டுகளுக்குச் சமமானதாகும்.

சூமாவின் வளர்ப்புத் தந்தை அவருக்குத் தேவையான பணத்தில் ஒருபகுதியைக் கொடுத்திருந்தார். தமது குடும்பத்தினர் தமது வியாபாரத்தை அடகுவைத்து கடன் எடுத்துத் தனக்குத் தேவையான பணத்தைக் கொடுத்ததாக இன்னொரு இளைஞன் கூறினார்.

சிலர் தாங்கள் கடத்தல்காரர்களுக்கு வேலை செய்ததாகச் சொன்னார்கள்.

இந்தப் பயணத்துக்கு நான் பணம் செலுத்தவில்லை. எனவே நான்ஒரு அதிட்டக்காரன் என்று ஒருவர் தெரிவித்தார். "அந்த மனிதனுடன் இணைந்து நான் வேலைசெய்துகொண்டிருந்தேன். விடயங்களை ஒழுங்குபடுத்த அவருக்கு நான் உதவிசெய்தேன்."

மத்தியதரைக் கடலைக் கடக்க தாங்கள் முன்னர் எடுத்த முயற்சியின் போது லிபியக் கடற்கரைக் காவல் படையினரால் தாம் பிடிக்கப்பட்டு, தடுப்புக்காவல் நிலையங்களில் பல மாதங்களைத் தாங்கள் செலவிட்டதாகப் பல பதின்ம வயது இளைஞர்கள் தெரிவித்தார்கள். அங்கு தாங்கள் சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டதாகவும், மிகவும் சொற்பமான உணவையே தாங்கள் உண்டதாகவும் அவர்கள் தெரிவித்தார்கள். அவர்களில் பலர் சிரங்கு நோய்க்கும் உள்ளாகியிருந்தார்கள்.

**தொடரும்**

## மாண்பழித்த ... தொடர்ச்சி ...

பாட்டு தலங்களுக்கும் பாதுகாப்பு வழங்க வேண்டு மென்றும் உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்திருக்கிறார்.

இந்த மேல்முறையீட்டு வழக்குகளை விசாரித்த உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி டி. ஒய். சந்திர சூட் "எந்த மாநில அரசுக்கும் அல்லது எந்த நீதிமன்றத்திற்கும் எவர் எவரை பழங்குடி மக்கள் என்று சேர்ப்பது தொடர்பான உத்தரவை அளிப்பதற்கு அதிகாரம் இல்லை" என்று உச்ச நீதிமன்றத்தின் அரசமைப்பு அமர்வு ஏற்கனவே தீர்ப்பு வழங்கியதைச் சுட்டிக்காட்டி, "மணிப்பூர் உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பு தவறானது" என்று கூறியிருக்கிறார்.

### தோழமைப் பயணம்

சுரசந்த்பூர் அல்லது இலம்கா மாவட்டத்தில் இராணுவம் காவல்துறையினர் கைது செய்யப்பட்ட பழங்குடித் தலைவர்களின் விடுதலைக்காக 28. 04. 2023 அன்று போராட்டம் நடத்த தொல் (மண்ணின்) பழங்குடி தலைவர்கள் அமைப்பு (ITLF) அழைத்தது. அதுபோல அனைத்து பழங்குடி மாணவர்சங்கம், மணிப்பூர்(ATSUM) என்றஅமைப்பு 03. 05. 2023 புதன்கிழமை அறிவன்கிழமை அன்று இந்த தீர்ப்புக்கு எதிராக, அமைதிப் பேரணியை அல்லது தோழமைப் பயணத்தை நடத்த சேனாபதி, உக்ருல், காங்போக்கபி, தமெங்லாங், சுராசந்த்பூர், சண்டேல், தெங்னௌபல், இம்பால், பிசுணுபூர், மோரே ஆகிய 10 மலைமாவட்டங்களில் அழைப்பு விடுத்தது.

மாநிலத்தின் தலைநகரான இம்பாலில் நடைபெற்ற பழங்குடியினரின் தோழமைப் பயணத்திற்கு எதிராக மெய்தேய் இனக்குழு மக்கள் பேரணி நடத்தி, பழங்குடியினர்மீது ஆயுத தாக்குதல் நடத்தினர். வெடிகுண்டு வீசினர். துப்பாக்கி சூடு நடத்தினர். கிறித்தவ வழிபாட்டு தலங்கள், வீடுகள், வாகனங்கள் திட்டமிட்டு தீ வைக்கப்பட்டு எரித்தனர்.

**தொடரும்**

## கிழக்கு மாகாண ... தொடர்ச்சி ...

பற்றாளர்களை ஒருங்கிணைத்து தமிழ் மக்கள் மீது முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளை தடுத்து நிறுத்த அனைவரும் ஒன்றிணையவேண்டும் என்பது எமது எதிர்பார்ப்பாகவுள்ளது. இவற்றினை நிறைவேற்றும்போதே எதிர்காலத்தில் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையும் சரி, தமிழ் தேசிய விடுதலையும் சரி அல்லது குறைந்தபட்சம் முழுமையான மாகாணசபை முறையும்சரி பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புகளை பெற்றுக்கொள்ள முடியும்.

• • •

## கறுப்பு யூலை... தொடர்ச்சி ...

சிறையில் தமிழ்க் கைதிகள் மீது நடத்தபட்ட கொடிய தாக்குதலே இதற்குப் போதிய சான்று.

சிங்களக் கைதிகளும் காவலர்களும் சேர்ந்து நடத்திய கொடுந்தாக்குதலில் 53 பேர் வரைக்குமான தமிழ் அரசியல் கைதிகள் கொடிய முறையில் துன்புறுத்திக் கொலை செய்யப்பட்டார்கள். குட்டிமணி, தங்கதுரை போன்ற விடுதலைப் போராளிகளின் விழிகளைத் தோண்டியெடுத்துக் கீழே போட்டு மிதித்து அவர்களைச் சொல்லொண்ணா வகையில் துன் புறுத்திக் கொன்றார்கள்.

காந்தியத்தில் நம்பிக்கை கொண்ட அகிம்சைப் போராளிகளையும் ஈவிரக்கமின்றிக் கொலை செய்தனர்.

இத்தனைக்கும் நடுவில் உளச்சான்றுக்கு உண்மையாகவும் மனித நேயத்தோடும் செயல் பட்டுத் தங்கள் வீடுகளில் தமிழர்களுக்குத் தஞ்சமளித்த சிங்களக் குடும்பங்கள் சில வற்றின் உதவியினால்தான் பல உயிர்கள் காப் பாற்றப்பட்டன.

யூலைப் படுகொலைகளுக்கு எதிராக இந்தியாவில் தமிழ்நாட்டு மக்கள் அப்போதும் இந்மியா மௌனம் காத்தது.

1965 இந்தி எதிர்ப்புப் போராட்டத்துக்குப் பின் தமிழ்நாட்டின் மிகப் பெரிய தேசிய எழுச்சியாக இது மாறியது. தமிழர் கொந்தளிப் பின் எதிரொலியாகத்தான் இந்திய நாடாளு மன்றத்திலேயே தலைமையமைச்சர் இந்திரா காந்தி யூலைக் கலவரத்தை இனப்படுகொலை என்று வண்ணித்து இலங்கையைக் கண்டனம் செய்தார். அயலுறவு அமைச்சர் நரசிம்ம ராவை கொழும்புக்கு நேரில் அனுப்பினார். அவர் அதிபர் ஜெயவர்த்தனாவைப் பார்த்து "கலவரத்தை நீங்கள் நிறுத்துகின்றீர்களா? நாங்கள் நிறுத்த வேண்டுமா?" என்று கேட்டாராம். அத்துடன் தமிழர்களுக்கு எதிரான வன்முறையும் முடிவுக்கு வந்தது.

யூலைப் படுகொலை பல வகையிலும்



வரலாற்றில் ஒரு திருப்பமாக அமைந்தது. முதலா வதாக, ஒன்றுபட்ட இலங்கைக்குள் சிங்கள இனத்துடன் சேர்ந்து வாழும் நம்பிக்கையை அது அடியோடு அழித்து விட்டது. தமிழர்கள் 1976 வட்டுக்கோட்டையில் எடுத்த தீர்மானத்தையும் 1977 பொதுத் தேர்தலில் தந்த ஆணையையும் செயலாக்குவது தவிர வேறு வழியில்லை என்பதை அறுதியாகவும் உறுதியாகவும் நிறுவியது. 1948ஆம் ஆண்டு தொடங்கிய இன ஒடுக்குமுறை 50களின் பிற்பகுதியில் இனவதையாக முற்றி 1983 யூலையில் அரசத் திகிலியமாகத் தீவிரமடைந்த நிலையில் தமிழ் மக்களின் உயிரும் மானமும் காக்க ஆயுதப் போராட்டம் தவிர வேறு வழியில்லை என்ற நிலை தோன்றியது.

எழுபதுகளின் தொடக்கத்தில் நிறுவப் பெற்ற விடுதலைப் புலிகள் உள்ளிட்ட போராளிக் குழுக்கள் அரசியல் பொருத்தப்பாடுடையவை ஆனது யூலைப் படுகொலையிலிருந்துதான்.

இறுதியாக ஒன்று: 1983 யூலைப் படுகொ லைக்காக அன்றைய இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தனா உள்ளிட்ட எந்த்த் தலைவரும் தமிழ் மக்களிடம் வருத்தம் தெரிவிக்கவில்லை. கலவரத்தில் குற்றம் புரிந்தவர்கள் யார், என்ன இனம், என்ன அரசியல் சார்பு என்றெல்லாம் கருதாமல் சட்டப்படி நடவடிக்கை எடுப்போம் என்று ஐநா அமைப்புக்கு அளித்த உறுதியை ஜெயவர்த்தனா காப்பாற்றவே இல்லை.

யூலைப் படுகொலைக்கான பொறுப்புக் கூறல், நீதி எதுவும் இன்று 40, வருடம் வரை மெய்ப்படவில்லை, அந்தக் கணக்கு இன்னும் முடியவில்லை. அதனால்தான் தமிழர்களுக்கு எதிராக என்ன குற்றம் செய்தாலும் தண்டனை பற்றி அஞ்சத் தேவையில்லாத குற்றவிலக்கு சிறிலங்காவில் நிலைபெற்று கால் நூற்றாண்டு கழித்து முள்ளிவாய்க்காலில் முழுவடிவம் பெற்றது. முள்ளிவாய்க்கால் இனவழிப்புக்கு நாம் போராடிப் பெறும் நீதிதான் 83 யூலைப் படு கொலைக்கான நீதியாகவும் அமையப் போகிறது.

1948,ல் இருந்து 2023, வரை தமிழினப் படுகொலைகள் காலத்துக்காலம் தொடர்சியாக நடைபெற்றுக்கொண்டிருந்தாலும் இதற்கான நீதியை கேட்டு சர்வதேச சமூகத்திடம் தமிழ்தேசிய தலைவர்ரகள் புலம் பெயர் அமைப்புகள் தொடர்ச்சியாக அழுத்தங் களை பிரயோகித்தபோதும் இதுவரை ஈழத்தமிழர களுக்கான நீதி இலங்கையிலும், சர்வதேசத்திலும் மறுக்கப்பட்ட இனமாகவே தமிழினம் வாழ்கிறது என்பது மட்டுமே உண்மை.

• • •

## சமாதானத்தினை ... தொடர்ச்சி ...

குருந்தூர்மலையில், சைவத் தமிழ் மக்களின் பொங்கல் வழிபாடுகள், பொலிசாராலும் அங்கு குழுமியிருந்த பௌத்த தேரர்களாலும், பெரும்பான்மையின மக்களா லும் தடுக்கப்பட்டது.

இவ்வாறு சைவ வழிபாட்டுரிமை மறுக்கப் பட்டமை தொடர்பில் கடந்த 14.07.2023 அன்று முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், சமூகசெயற்பாட்டாளர்களான இரத்தினம் ஜெகதீசன், அன்ரனி ஜெயநாதன் பீற்றர் இளஞ்செழியன் ஆகியோரால் முறைப் பாடுசெய்யப்பட்டிருந்தது.

அதனைத் தொடர்ந்து கடந்த 17.07.2023 அன்று சைவவழிபாட்டுரிமை மறுக்கப்பட்டமை தொடர்பில் மனித உரிமை ஆணைக்குழுவிலும் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டது.

இந் நிலையில் இன்றைய தினம் முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றிலே AR673/18 என்ற குருந்தூர்மலை வழக்கு நகர்த்தல் பத்திரம் அணைத்து நீதி மன்றிலே விசாரணைக்காகவும் எடுத்துக்கொள்ளப்பட்டது.

குறித்த வழக்கிலே ஆலய அடியவர்கள் சார்பாக முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், சமூகசெயற் பாட்டாளர்களான இரத்தினம் ஜெகதீசன், அன்ரனிஜெயநாதன் பீற்றர் இளஞ்செழியன் ஆகியோர் மன்றில் தோன்றியிருந்தனர்.

அந்தவகையில் சைவத் தமிழ் மக்களின் பொங்கல் வழிபாடுகள் தடைசெய்யப்பட்டமை தொடர்பிலான புகைப்படங்கள், மனித உரிமை ஆணைக்குழு மற்று, காவல் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகள் என்பவற்றை நீதிமன்றில் சமர்ப்பித்து, குருந்தூர் மலை ஆதிசிவன் ஐயனார் ஆலய அடியவர்கள் சார்பில் மன்றில் தோன்றிய சட்டத்தரணிகள் மன்றில் தமது சமர்ப்பணங்களை முன்வைத் திருந்தனர்.

இந் நிலையில் இது தொடர்பில் விளங் கமளிப் பதற்காக நீதிமன்றிலே தோன்றியிருந்த காவல் துறையினர் தாம் சமாதானப் படுத்தும் நோக்கிலேதான் பொங்கல் வழிபாட்டினைத் தடுத்ததாக கூறியிருந்தார் கள்.

இது தொடர்பான மேலதிக விசார ணைகளை, மேலதிக தகவல்களைத் தொல் லியல் திணைக்களத் திடமிருந்தும் பெற வேண்டியதொரு தேவையிருப்பதால், குறித்த நாளில் குருந்தூர் மலையில் இடம்பெற்ற விடயம் தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு தொல்லியல் திணைக் களத்திற்குத் தகவல் வழங்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் தொல்லியல் திணைக் களத்தின் அறிக்கைக்காக எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 08ஆம் திகதிக்கு குறித்த வழக்குத் தவணை யிடப்பட்டுள்ளமை குறிப்பிடப்பட்டுள்ளது.

• • •

## இலங்கை ... தொடர்ச்சி...

மற்றும் இலங்கை ஆகிய நாடுகளுக்கு இடையில் ஐந்து புரிந்துணர்வு உடன்படிக்கைகளும் கைச் சாத்திடப்பட்டுள்ளன.

இந்தியா - இலங்கை ஆகிய நாடுகளுக்கு இடையில் கால்நடை பராமரிப்புத்துறையில் கூட்டு நோக்கத்தின் பிரகடனம், இந்தியா மற்றும் இலங்கை இடையில் புதுப்பிக்கத்தக்க எரிசக்திக்கான புரிந்துணர்வு உடன்படிக்கை, திருகோணமலை மாவட்ட திட்டங்களின் பொருளாதார அபிவிருத்திக்கான புரிந்துணர்வு உடன்படிக்கை, இலங்கைக்குள் யூ.பி.ஐ டிஜிட்டல் கொடுக்கல் வாங்கல் முறையை மேம்படுத்தல் மற்றும் சம்பூர் சூரிய மின்சக்தி திட்டத்திற்கான எரிசக்தி அனுமதிப் பத்திரம் இலங்கையிடம் கையளிப்பு போன்ற உடன்படிக் கைகள் கைமாற்றப்பட்டுள்ளன.

## கறுப்பு யூலை ... தொடர்ச்சி ...

மேற்குலகத்தின் இந்த பலப்படுத்தல் களுடன்பலமானஇலங்கைஇராணுவம்விடுதலை நடவடிக்கை என்ற படை நடவடிக்கையை 1987 ஆம் ஆண்டு ஆரம்பித்தது. இந்த நிலையில் தான் இந்தியா தனது படை தலையீட்டை மேற் கொண்டது. இந்தியா தனது பாதுகாப்புக்காக மேற்கொண்ட இந்த நடவடிக்கை பாகிஸ்தானில் மேற்கொள்ளப்பட்டது போல வெற்றியளிக்காது போனதற்கான காரணம் என்ன?

தமிழீழத்தின் உருவாக்கத்தில் தான் இந்தியாவின் பாதுகாப்பு தங்கியுள்ளது என்ற தமிழ் மக்களின் கருத்துக்களை மதிக்காது விட்டது மட்டுமல்லாது தமிழ் மக்களுக்கான சுயாட்சியில் தான் இந்தியாவின் பாதுகாப்பு தங்கியுள்ளது என்ற இந்திராகாந்தியின் கொள்கையை கைவிட்டதுமே அதற்கான காரணம்

தமிழ் மக்களுக்கான நீதியை வழங்க தவறிய இந்தியாவின் படை நடவடிக்கை தோல்வி கண்டது. சிங்கள தேசம் மேலும் இந்திய எதிர்ப்பு தேசமாக மாறியது. தமிழ் இனத்தின் மீதான தனது விரோதக் கொள்கையால் இந்தியா சிங்களத்தின் மீதான பிடியை இழந்தது. மேற்குலகத்தின் வலைக்குள் வீழ்ந்த இந்தியா தமிழ் மக்களின் அழிவுக்கு காரணமாகியதுடன், தமிழ் பிரதேசத்தின் அரசியல் உறுதித்தன்மை மற்றும் பலவீனம் இந்தியாவின் பாதுகாப்புக்கு கடும் அச்சுறுத்தலாக மாறியுள்ளது.

தமிழீழத்தை அமைத்துக் கொடுத்தால் சிங்கள தேசம் இந்திய எதிர்ப்பு நாடுகளின் கூடாரமாகிவிடும் என இந்தியாவின் பாதுகாப்பு ஆலோசகர்கள் 1983 ஆம் ஆண்டு தெரிவித்த கருத் துக்கள் இன்று பொய்த்துப் போயுள்ளன. தமிழீழ நடைமுறை அரசின் அழிவின் பின்னர் தான் தென்னிலங்கை, சீனா, அமெரிக்கா என்ற இந்திய எதிர்ப்பு நாடுகளின் கூடாரமாக மாறியுள்ளது.

இன்று வடக்கு கிழக்காவது தனக்கு எஞ்சுமா என்ற ஏக்கத்தில் இருக்கிறது இந்தியா. ஆனால் தமிழர் தாயகத்தை இந்தியா நிர்வகிக்காது தமிழர்களிடம் ஒப்படைப்பதே இந்தியாவின் முன்னைய தவறுகளை திருத்த உதவும் என்பதை இந்தியா உணராதவரை இந்தியாவின் அழிவுக்கு அதுவே காரணம் என்பதை காலம் எடுத்துரைக்கும்.

• • •

## அபிவிருத்தியும் ... தொடர்ச்சி ...

பெருந்தோட்ட மக்களின் பிரச்சினைகளை ஆராய ஆணைக்குழுவை அமைக்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்தி இருக்கின்றார்.200 ஆண்டுகளுக்கு முன்னர் தோட்டத் தொழிலாளர்கள் அடிமைகள் போன்று கொண்டு வரப்பட்டு முறையான சம்பளம், வீடு என்பன வழங்காமல் அடிமை வாழ்க்கை வாழவேண்டும் என்ற போக்கை வெள்ளையர்கள் அமைத்திருந்தனர்.இதனையே பெருந்தோட்டக் கம்பனிகளும் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றன.இதனால் இந்த மக்கள் பெரும் அழுத்தத்திற்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர்.

சில சந்தர்ப்பங்களில் வீதிகளை சற்று புனரமைத்துக் கொடுப்பதாலும், பகுதியளவில் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதாலும் மாத்திரம் அவர்களுக்கான தேவைகள் கிடைத்துவிட்டது என்று கருதிவிட முடியாது.முதலில் அவர்கள் மனிதர்களாக மதிக்கப்பட வேண்டும்.சிறைக்கைதிகளும் மனிதர்களே என்று வாசகம் எழுதப்பட்டுள்ளது. இந்தத் தொழிலாளர்களும் மனிதர்கள்தான். அவர்களுக்கான உரிமை பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும்.200 ஆண்டுகளாகின்ற மலையக மக்களுக்கு ஆத்ம கௌரவத்தை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். என்று பேராயர் வலியுறுத்தி இருக்கின்றார்.பெருந்தோட்ட மக்களின் பிரச்சினைகளை ஆராய ஆணைக்குழுவின் அவசியத்தை கேசரியும் தொடர்ச்சியாகவே வலியுறுத்தி வந்துள்ளமையும் இங்கு நோக்கத்தக்கதாகும்.

இந்நிலையில் பேராயரின் கருத்தினை முக்கியத்துவம் மிக்கதாகக் கருதி மலையக அரசியல்வாதிகள் அரசாங்கத்தை வலியுறுத்தி இதனை சாதகமாக்கிக் கொள்ள முற்படுதல் வேண்டும்.அத்தோடு ஆணைக்குழுவால் அடையாளப்படுத்தப்பட்ட மலையக மக்களின் பிரச்சினைகளைக்கு அரசாங்கத்தின் ஊடாக உரிய தீர்வினையும் பெற்றுக் கொடுக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். இதைவிடுத்து வெறுமனே மலையக மக்கள் இலங்கைக்கு வருகைதந்த 200 ஆவது ஆண்டு கொண்டாட்டம் என்று பூச்சாண்டி காட்டிக்கொண்டு தொடர்ந்தும் அம்மக்களை ஏமாற்றி வயிறு வளர்க்க முற்படுதல் கூடாது.மலையக மக்களை ஏமாற்றினால் அவர்களின் சாபம் சும்மா விடாது என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும்.

• • •

## யூலை இனவழிப்பு ... தொடர்ச்சி ...

இருந்து வருகின்றமையும் தெரிந்ததாகும். இந்நிலையில் இலங்கையில் சிலரின் அரசியல் பிரதிநிதித்துவம் சமூக அபிவிருத்திக்கு வாய்ப்பளிக்காது சிறுபான்மை இனங்களை வேரறுப்பதற்கும், அவர்களை சகல துறைகளிலும் நிர்வாணப்படுத்துவதற்கும் பயன்படுத்தப்பட்டு வருகின்றமை வெட்கப்பட வேண்டிய ஒரு விடயமாகும்.இந்நிலையில் இனவாத, பிற்போக்கு அரசியல்வாதிகள் தமது பிழைகளை திருத்திக் கொண்டு முன்செல்ல வேண்டிய தேவை காணப்படுகின்றது.இது சாத்தியமாகும் இடத்தே நாட்டில் ஐக்கியம் வலுப்பெறுவதோடு அபிவிருத்தியும் துரிதப்படுத்தப்படும்.

“இலங்கையர்” என்றவாறு ஒரே குடையின் கீழ் நாட்டு மக்கள் ஒன்றிணைவதற்கு இனவாதமும் மதத்தின் ஆதிக்கமும் தடையாக உள்ளது.இவ்விரண்டின் ஆதிக்கமும் வேரறுக்கப்படுமிடத்து சாதக விளைவுகள் பலவற்றையும் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும். இலங்கையின் வரலாறுகள் மிகவும் கசப்பானவையாகும்.இதனை நோக்குகையில் இலங்கைக்கு இது ஒரு சாபக்கேடோ என்று கூட எண்ணத் தோன்றுகின்றது.



இலங்கை இதிலிருந்து மீண்டெழுதல் வேண்டும்.இந்நாட்டில் பல்லின மக்களும் வாழுகின்ற நிலையில் அவர்களின் உரிமைகள் உரியவாறு உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும். சிறுபான்மையினர் இலங்கையில் கிள்ளுக் கீரைகள் அல்லர்.அவர்கள் தன்மானம் மிக்கவர்கள். இந்நிலையில் அவர்களுக்கான வாய்ப்புக்கள் விரிவு படுத்தப்பட்டு அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படுதல் வேண்டும்.

“ஒரு கண்ணுக்கு மருந்தும் மறு கண்ணுக்கு சுண்ணாம்பும்” இடும் நிலை தவிர்க்கப்படுதல் வேண்டும்.சகலரையும் சமமாக மதிப்பதற்கு அரசாங்கம் கற்றுக்கொள்ள வேண்டும்.1983 ஜூலைக் கலவரம் நாட்டுக்கு பல பாடங்களையும் கற்றுக் கொடுத்தது.எனினும் இப்பாடங்களைக் கொண்டு இனவாதிகள் இன்னும் திருந்துவதாக இல்லை.இனியும் இவர்கள் திருந்தாமல் இனவாதத்திலும் சிங்கள மேலாதிக்கத்திலும் மூழ்கித் திளைப்பார்களானால் அதனால் ஏற்படும் விளைவுகள் மோசமானதாக அமையலாம் என்பதனை நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

• • •

## பூமி வெப்ப ... தொடர்ச்சி ...

காட்டுத் தீயினால் பெருமளவான காடுகள் அழிந்துள்ளன இந்த நிலையில் வற்சன் இந்த எச்சரிக்கையை விடுத்தள்ளார்.

எரிபொருள் பாவனையை குறைந்து பூமி வெப்பமாவதை தடுப்பதில் இருந்து நாடுகள் தவறி வருகின்றன. அவர்களால் 1.5 பாகை திட்டத்தை எட்டமுடியாது. அதனை பல விஞ்ஞானிகளும் எற்றுக்கொண்டுள்ளனர். பூமி 2.5 பாகை உயர்வை காணும்.

1.5 பாகை வெப்பநிலை உயர்வை பேணி 2.0 பாகை வெப்பநிலை உயர்வை தடுத்தால், 10 மில்லியன் மக்கள் வீடுகளை இழப்பதை தடுக்கலாம், குடிநீர் இல்லாமல் நெருக்கடிக்கு உள்ளாகும் மக்களின் எண்ணிக்கையை 50 விகிதமாக குறைக்கலாம், பவளப்பாறைகளின் அழிவை 99 விகிதத்தில் இருந்து 70 விகிதமாக குறைக்கலாம்.

அவ்வாறு செய்வதற்கு எரிபொருள் பாவனையை எதிர்வரும் 2030 ஆம் ஆண்டு 50 விகிதமாக குறைக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவத்துள்ளார்.

## 13வது திருத்த ... தொடர்ச்சி ...

எனவும் அவர் நம்பிக்கை வெளியிட் டுள்ளார்.

இந்நிலையில்,மறுசீரமைப்பு, அதிகாரப் பகிர்வு, அதிகார பர வலாக்கம், வடக்கு அபிவிருத்தித் திட்டத்தின் பலதரப்பட்ட விடயங் களை தொடர்ந்தும் முன்னேடுத்துச் செல்வதற்காக நான் முன்வைத்த பரந்துபட்ட யோசனை குறித்தும் தனது கருத்துக்களையும் இந்தியப் பிரதமர் மோடியுடன் பகிர்ந்துகொண்டேன் என ஜனாதிபதி ரணில் தெரிவித்துள்ளார்.

## தென்னாபிரிக்கா ... தொடர்ச்சி...

உக்ரைன் போரில் பூட்டீனு க்கு ஆதரவுகளை வழங்கிவரும் தென்னாபிரிக்கா தற்போதைய தனது நெருக்கடியான நிலை தொடர்பில் ரஸ்ய அதிபருடன் கலந்தாலோசனை செய்து இரு தரப்பும் ஒரு இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளதாக தென்னாபிரிக்கா அரச தலைவரின் பேச்சாளர் கடந்த புதன்கிழமை (19) தெரிவித்துள்ளார்.

பூட்டீன் முக்கிய தலைவர்களின் கூட்டத் தொடரில் காணொளி மூலம் கலந்துகொள்வார் எனவும், நேரிடையாக ரஸ்யாவின் வெளிவிவகார அமைச்சர் கலந்துகொள்வார் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்காவுக்கு பயணம் மேற்கொண்ட சூடானின் முன்னாள் அதிபர் அல் பசீரை 2015 ஆம் ஆண்டு தென்னாபிரிக்கா அரசு கைது செய்வதற்கு மறுத்திருந்தது. அவர் மீதும் அனைத்துலக குற்றவியல் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்திருந்தது.

## மணிப்பூர் ... தொடர்ச்சி ...

ஊற்றி அல்லவா இருக்கிருகிறார்கள். உலகமே இந்தியா ஒரு ஜனநாயக நாடா என்று கேள்வியை எழுப்புகிறது. பெண்கள் கற்பழிப்பு நிகழ்வு சமூக ஊடகங்களில் வெளிவந்த பிறகு, காலதாமதம் ஏற்பட்ட போதிலும் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி மணிப்பூரில் அமைதியை நிலை நாட்ட உடனடியாக ஒன்றிய அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுள்ளார். ஆனால் பிரதமர் நரேந்திரர் ஊர் எறிகிற போது உலகம் சுற்றி வருகிறார். மணிப்பூர் எரிகிறது. குருதி கொதிக்கிறது.

**வள்ளலார் கூற்றுப்படி, கருணையிலா இல்லா ஆட்சி கட்டி ஒழிந்தால்தான் தீர்வு கிடைக்குமோ!**

## 800 மில்லியன் ... தொடர்ச்சி ...

தான் கடந்த 10 வருடங்க ளில் நூறு மில்லியனுக்கு மேற் பட்ட தொகையை முதலீடு செய்துள் ளதாக டுரோவ் தெரிவித்துள்ளார்.

பல நூறு மில்லியன் மக்கள் தற்போது எமது வலைத்தளத்தை பயன்படுத்துகின்றனர் அதற்கு காரணம் அவர்கள் இந்த தளத்தில் சுதந்திரமாக செயற்பட அனுமதிக்கப்படுகின்றனர். பார்வையாளர்கள் தான் எமக்கு முதன்மையானவர்கள் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

டுரோவின் 2022 ஆம் ஆண்டுக்கான சொத்து மதிப்பு 11.5 பில்லியன் டொலர்களாகும். ரஸ்யாவின் சென் பீற்றேஸ்பேர்க்கில் பிறந்த அவர் முகநூல் சமூகவலைத்தளத்தின் ரஸ்யாவிற்கான மாதிரியை வடிவமைத்து நடைமுறைப் படுத்தியிருந்தார்.

2013 ஆம் ஆண்டு ரஸ்யாவில் இருந்து குடிபெயர்ந்த அவர் பிரான்ஸ் மற்றும் ஐக்கிய அரபு எமிரேற்ஸ் ஆகிய நாடுகளின் குடியுரிமையை கொண்டுள்ளபோதும், ரெலிகிறாம் சமூகவலைத்தளம் ஐக்கிய அரபு எமிரேற் இல் தான் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

ரஸ்யாவை சேர்ந்தவரின் சமூகவலைத் தளம் என்பதால் இந்த வருடத்தின் ஆரம்பத்தில் அதனை தடை செய்ய நோர்வே முயன்றிருந்தது.

## சுவீடனுடனான ... தொடர்ச்சி ...

யிட்டு போராட்டங்களை மேற் கொண்டதுடன், தூதரகத்தை உடைத்து உள்நுளைவதற்கும் முற்பட்டிருந்தனர். சில பகுதிகளை தீ வைத்து எரித்திருந்தனர்.

இதேபோன்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் துருக்கியின் தூதரகத்தின் முன்பும் இடம் பெற்றிருந்தது. சுவீடன் நேட்டோவில் இணை வதற்கு துருக்கி ஆதரவளிப்பதை எதிர்க்கும் முக மாக அது மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## நெல்சன் மண்டேலா... தொடர்ச்சி ...

போற்ற முயற்சிக்கின்றார் என்பதை அவருடைய ராசபக்ச குடும்பத்தை அனைத்துலகக் குற்றவியல் நீதிமன்றத்துக்கு போகாதவாறு காத்து அவர்களின் ஒருநாடு ஒரு சட்டம் ஆட்சி முறைமையை நடைமுறைப்படுத்த முயலும் அவரின் கடந்த ஓராண்டுகால ஆட்சி பெரும் சந்தேகத்துடன் நோக்க வைக்கிறது.

மனிதநேயம் என்பது ஒவ்வொரு மனிதனதும் சுதந்திரவாழ்வைச் சமத்துவமான வாழ்வை சகோதரத்துவ வாழ்வை உறுதிப்படுத்தல் என்னும் செயற்பாட்டு வடிவம். தான் விடுதலைப்புளிகளுடன் 2006 இல் ஈழத் தமிழர்களின் உள்ளக தன்னாட்சி உரிமையை ஏற்றுக் கொண்டதை 18.07. 2023 இல் சிறிலங்காவின் தமிழ்ப்பாராளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்து அதிகாரப் பரவலாக்கம் குறித்து கலந்துரையாடிய பொழுது ரணில் விக்கிரமசிங்கா தன் தவறு என்று வெளிப்படையாகக் கூறியுள்ளமை சிறிலங்கா அரசாங்கத்திற்கு ஈழத்தமிழர்களின் உள்ளகத் தன்னாட்சி உரிமையின் அடிப்படையில் அவர்களுக்கான பாதுகாப்பான அமைதியையும் வளர்ச்சியையும் உறுதிப்படுத்தும் நோக்கோ போக்கோ இல்லவேயில்லை என்பதை உலகுக்குத் தெளிவுபடுத்தியுள்ளது. இதன் வழி ஒரு மனித இனத்தின் அடிப்படைத் தேவையான உயிரைப் பாதுகாத்தல், சொத்துக்களைப் பேணல் நாளாந்த வாழ்வைக் கொண்டு நடத்தல் என்னும் அடிப்படை மனித உரிமைகளையே ஈழத்தமிழர்களுக்கு மறுத்துள்ள ரணில் விக்கிரமசிங்காவின் மனிதநேயமற்ற அரசாங்கம் எந்த வகையில் தென்னாபிரிக்க நல்லிணக்க மாதிரியை எண்ணிப்பார்க்கின்றது என்பதே வேடிக்கையானவொன்றாக உளள்து.

நெல்சன் மண்டேலாவின், ஒவ்வொருவரினதும் கண்ணியமான வாழ்வை உறுதிப்படுத்தல் என்பதை முன்னெடுக்க அமைக்கப்பட்டது தென்னாபிரிக்காவின் நல்லிணக்கக் குழுவை மாதிரியாகக் கொண்டு நல்லிணக்கத்தை இலங்கையில் இனங்களுக்கு இடையில் ஏற்படுத்தப் போவதாகக் கூறம் ரணிலின் ஒரு ஆண்டுகால ஆட்சியில் ஈழத்தமிழர்களின் கண்ணியமான வாழ்வுக்கு ஆதாரமாக உள்ள அவர்களின் நிலத்தின் மீது எத்தகைய படைபல ஆக்கிரமிப்பு சிங்களப் பெரும்பான்மை ஒற்றையாட்சிப் பாராளுமன்றக் கொடுங்கோன்மை மூலம் ஈழத்தமிழர்களை இனஅழிப்புச் செய்த சிறிலங்காப் படைத் தலமைகளையும் படையினரும் சிவில் நிர்வாகத்தின் தலைமையாளராகக் கட்டமைத்த நிர்வாகத்தில் சட்டத்தின் முன் குடிமக்கள் அனைவரும் சமம் என்ற சட்டத்தின் ஆட்சியை அவரின் பொறுப்பு வாய்ந்த அமைச்சரான சரத் வீரசேகராவே வெளிப்படையாக மறுக்கின்ற நிலையில் மக்களுடைய நாளாந்த வாழ்வான வழிபாட்டு நிகழ்வைச் செய்தியாக்க 14.07.2023 இல் சென்ற விஜயரத்தினம் சரவணன் என்னும் செய்தியாளரை பொலிசார் அச்சுறுத்தி அவரின் தொழில்சார் சுதந்திரத்தை வன்முறைப்படுத்தி, கருத்துச் சுதந்திரத்தை மறுத்தும். அங்கு பாதுகாப்பான முறையில் ஏற்றப்பட்ட வழிபாட்டுக்குரிய ஒளிச் சுடரை பொலிசதிகாரி சப்பாத்துக் காலால் உழக்கி வழிபாட்டாளர்களின் மனதைப் புண்படுத்தி அவர்களின் வழிபாட்டுச் சுதந்திரம், அமைதியாக ஒன்று கூடும் சுதந்திரம், போன்ற அடிப்படை மனித உரிமைகளையே வெளிப்படையாக மறுக்கின்ற பொழுது அந்த குருந்தூர் மலையில் நீதிமன்ற தடையுத்தரவை மீறி குருந்தீர் விகாரையென்னும் விகாரையை அமைத்து வாகனங்களில் கொண்டு வந்திறக்கப்பட்ட சிங்களப் பிக்குகள் சிங்கள வழிபாட்டாளர்கள் துணையுடன் பிரித் ஓதி வழிபாடுகளை நடத்தி நீதிமன்றத்தையே தான் அவமதித்தது மட்டுமல்லாமல், ஈழத்தமிழர்களுக்குப் பொங்கலிட்டு வழிபட முல்லைத் தீவு நீதிமன்றம் வழங்கிய அனுமதியையே ஏற்க மறுத்து தமிழ்ப்பெண்களையும் ஆண்களையும் உடலில் தொட்டு இழுத்து அடித்த பொலிசாரின் அரச பயங்கரவாதத்தின் மூலம் சட்டத்தின் முன் சமம் என்ற சட்ட ஆட்சிக்குள் தமிழர்கள் இல்லை என்பதை உலகுக்கு அந்த விகாராதிபதி தெளிவாக நிரூபித்துள்ளார். இவ்வாறு ஈழதமிழர்களின் கண்ணியமான வாழ்வை நாள்தோறும் இழிவுபடுத்தும் 71 விகாரைகள் 4374.8 ஏக்கர் ஆக்கிரமிக்கப்பட்ட நிலத்தில் 2018 முதல் இன்றுவரை கட்டியெழுப்பப்பட்டுள்ளன என்றால் “கண்ணியம்” என்ற சொல்லையே உச்சரிக்கத் தகுதியல்லாத சிறிலங்கா அரசாங்கம் “கண்ணியம்” பேண அமைக்கப்பட்ட தென்னாபிரிக்காவின் நல்லிணக்கக் குழுவினை எந்த விதத்தில் முன்னுதாரணமாகக் கொள்ள முயற்சிக்கிறது என்பதே கேள்விக்குரியதாக உள்ளது.

“மனிதநேயத்துக்கு எதிரானது அனைத்தும் போதும் போதும் இனி வேண்டவே வேண்டாம்” என்பது நெல்சன்மண்டேலாவின் வாழ்வின் அனுபவ மொழி. ஆனால் இன்றைய சிறிலங்காவின் அரசஅதிபர் மகிந்த ராசபக்ச கோட்டபயராசபக்ச விளக்கமான எங்களுக்கு வாக்களித்த பெரும்பான்மையினரின் விருப்புக்கு எதிராக எதனையும் செய்ய மாட்டோம் என்ற சிங்கள இனவெறியை பௌத்த மதவெறியை நியாயப்படுத்தும் அரசியல் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் தனது ஆட்சியின் தலைமைக் கொள்கைகளாகவும் கோட்பாடுகளாகவும் தொடர்ந்தும் முன்னெடுத்து வருவது கடந்த ஓராண்டு வரலாறாக உள்ளது.

நெல்சன் மண்டேலா தென்னாபிரிக்கத் தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்த காலகட்டத்தில் 26.06. 1961இல் “ என் வாழ்வே போராட்டம்” என விடுத்த செய்தியின் முடிவில் “கடினமான வாழ்வின் வழி அர்ப்பணிப்புடன் கூடிய இராணுவச் செயற்பாடுகள் வழிதான் விடுதலையை வெல்ல முடியும். என்னுடைய வாழ்வே போராட்டம். நான் என்னுடைய வாழ்வின் முடிவு வரை விடுதலைக்காகப் போராடிக் கொண்டே இருப்பேன். என்று கூறினார். நெல்சன் மண்டேலாவின் இக்கூற்று ஒரு விடுதலைப் போராளிக்கு இருக்க வேண்டிய மாற்ற முடியாத உள்ள உறுதியை உலகுக்கு எடுத்துரைத்தது. இந்த உறுதித்தன்மைக்காக அவர் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டு 1962 அக்டோபர் 15 முதல் நவம்பர் 7ம் திகதி வரையில் நீதிமன்ற விசாரணை நடைபெற்ற பொழுது “ ‘சட்டத்தின் முன் சமத்துவம்’ என்பது அதன் உண்மையான பொருளில் ‘ஆளப்படுபவர்கள்’, சட்ட உருவாக்கத்தில் பங்கு பற்றி, அரசியலமைப்பால் சனநாயக உரிமைகளை நாட்டின எல்லா மக்கள் தொகையினர்க்கும் உறுதி செய்த அரசியலமைப்பை உருவாக்கி,, அந்த அரசியலமைப்பால் உறுதி செய்யப்பட்ட உரிமைகள் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டால் அதனை எதிர்க்கவும் அதிலிருந்து விடுதலை பெறவும் நீதிமன்றத்தை நாடும் முறைமைகளுடன் நீதிபதிகள் உயர்நீதிமன்ற நீதிபதிகள் சட்டத் தரணிகள்போன்றசட்டத்தைப்பேணும்பதவிகளில் ஆளப்படுபவர்களும் உள்ளடக்கப்பட்ட முறைமையைக் குறிக்கும். இந்த நிபந்தனைகள் நிறைவாக இல்லாத நிலையில் ‘சட்டத்தின் முன் சமம்’ என்பது பொருளற்றதாகவும் தவறான வழிக்கு வழிநடத்துவதாகவும் அமையும்” என மிகத் தெளிவாக எடுத்து விளக்கினார். இதனை இன்றைய சிறிலங்காவின் அரசதலைவர் ரணில் விக்கிரமசிங்கா மட்டுமல்ல தமிழ அரசியல்வாதிகளும் 13ம் திருத்தம் எனத் தாங்கள் நடத்திக் கொண்டிருக்கும் அரசியல் பித்தலாட்டத்தின் உண்மைத்தன்மையை உணர மீளவும் மீளவும் வாசித்து மனதிருத்துவது நல்லது. ஒருநாடு அது சிங்கள பௌத்த நாடு. ஒரு சட்டம் அது பௌத்த ஆகமச் சட்டம் என்பதைச் சீனாவில் இருப்பது போன்ற ஒருகட்சி ஆட்சி முறை மூலம் நடைமுறைப்படுத்தி ஈழத்தமிழினத்தைத் தேச இனம் என்ற அதன் இயல்பான அடையாளத்தில் இருந்து திரிபுபடுத்தி “சிறுபான்மையினர்” என அவர்களின் மேல் சிங்களப் பெரும்பான்மை ஆட்சியைத் திணித்து, “இனப்பிரசச்னை” என தேசியப்பாதுகாப்பை உறுதிப்படுத்துகின்றோமென அவர்களை இன அழிப்புச் செய்து இன்று “ நீதி கோரும் சமுகம்” என இந்தியாவையும் அமைரிக்காவையும் கூட வெறும் சமுகமாகப் பார்க்க வைக்கும் சிங்கள பௌத்த பேரினவாதத் தலைவைர்களிடம் மண்டியிடடு நீதித்துறை விற்பன்னர்களாகவும் சட்டத்துறை நிபுணர்களாகவும் ஈழத்தமிழர்களின் தேசிய விடுதலைக்காக ஆயுதம் ஏந்திப் போராடும் அளவுக்குத் தங்களை முன்னிலைப்படுத்தயிவர்களும் ஈழத்தமிழர் களுக்கான அரசியல் தீர்வை பெற முயற்சிப்பது என்பது வரலாற்றின் பரிணாமத்தை மறந்துவிட்ட மனிதர்களாக, 2023 அனைத்துலக நெல்சன் மண்டேலா நாளில் ஈழத்தமிழ் அரசியல்வாதிகளை உலகின் கண் முன் நிறுத்தியுள்ளது. இவர்கள் மாறுவார்களா அல்லது ஈழத்தமிழர்கள் இவர்களை மாற்றுவார்களா என்பதிலேயே ஈழத்தமிழர்களின் பாதுகாப்பான • • •அமைதியான வாழ்வு

## டில்லியில்... தொடர்ச்சி ...

செய்யப்போகின்றது என்பதை விளக்கினார் ரணில். முதலில் நாடாளுமன்றத்தில் பிரேரணைகள் முன்வைக்கப்படும். அவை நாடாளுமன்றத்தில் ஏற்கப்பட்டு சட்டமாக்கப்படும். பின்னர் அரசமைப்பில் திருத்தம் செய்யப்படும் என்றார். 13 ஆவது திருத்தத்தில் உள்ள பொலிஸ் அதிகாரம் தவிர்ந்த ஏனையவைகளை வழங்குவதற்கு தான் தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

ரணில் இதனைத் தெரிவித்தபோது குறுக்கிட்ட சம்பந்தன், இதனை நாங்கள் முற்றாக நிராகரிக்கின்றோம் என்று தெரிவித்தாகக்கூறப்படுகின்றது. “நீங்கள் இப்போது டில்லிக்குச் செல்லவிருப்பதால் நிலைமைகளைச் சமாளிக்கப் பார்க்கின்றீர்கள். நீங்கள் இப்போது செல்லப்போகும் இடத்துக்கு நீங்கள் போய்ச் சேர்வதற்கு முன்னதாக எங்களுடைய கருத்துக்கள் அங்கு போய்ச் சேரும்” என சம்பந்தன் கடுமையான தொனியில் பதிலளித்தார்.

இதனையடுத்து ரணிலுடன் சம்பந்தனும், சுமந்திரனும் கடுமையாக வாக்குவாதப்பட்டதாக சந்திப்பில் கலந்துகொண்டவர்கள் மூலமாக அறியவருகின்றது. இதனால், நிகழ்ச்சி நிரலின்படி சந்திப்பை தொடர முடியாமல், இடைநடுவில் பேச்சுவார்த்தை முடிவுக்கு வந்தது.

ரணிலைப் பொறுத்தவரை13 ஐ நடைமுறைப்படுத்த தான் தயாராக இருப்பதாகவும், தமிழ்க் கட்சிகளுடன் இது தொடர்பில் தான் பேசியிருப்பதாகவும் மோடிக்குச் சொல்வதற்கு இந்தப் பேச்சுக்களைப் பயன்படுத்தியிருக்கின்றார். அத்துடன் மோடி சொல்லித்தான் இதனை தான் செய்யவில்லை எனவும், இதுதான் தன்னுடைய திட்டம் என்பதையும் காட்டிக்கொள்ளவும் இவ்வாறான ஒரு சந்திப்பு ரணிலுக்குத் தேவையாக இருந்தது.

சம்பந்தன் எழுப்பிய கேள்விகள் ரணிலின் திட்டத்தை எந்தவகையிலும் பாதிக்கவில்லை. டில்லிச் சந்திப்பு இதனை தெளிவாக வெளிப்படுத்தியிருக்கின்றது. அதே வேளையில் கடிதங்களை எழுதிக்குவிக்கும் தமிழ்க் கட்சிகள் தமது உபாயங்களை மீள்பரிசீலனை செய்ய வேண்டிய அவசியம் என்பதும் உணர்த்தப்படுகின்றது. ஆனால், ஆவேசமான பேச்சுக்களின் மூலமாக மட்டுமே வாக்காளர்களைக் கவர்வதற்குப் பழக்கப்பட்டுவிட்ட தமிழத் தலைமைகளிடம் எந்தளவுக்கு இராஜதந்திரம் உள்ளது என்பதும் இப்போது அம்பலமாகியுள்ளது.

• • •

கறுப்பு யூலை.. தொடர்ச்சி ...

போராட்டம் தடையாக இருக்கிறது என்பதும் ஆகவே இன் றைக்கு யுத்தத்திலே வந்து தமிழ் தரப்பு வெற்றிகொள்ளப்பட்டதனை தங்களுடைய மிகப் பெரிய வெற்றியாகவும் தமிழினம் அழித் தொழிப்பதற்கான வேகமாக அழித் தொழிக்கவேண்டும் இல்லாவிட்டால் தங்களுடைய இந்த இலங்கைத் தீவு மொத்தத்தையும் ஒரு சிங்கள பௌத்த நாடாக்குவதற்குரிய தங்களுடைய திருத்தங்களை செயற்படுத்தமுடியாமல் போய் விடும் என்கின்ற ஒரு வேகம் இந்த கட்சி பேரம் இல்லாமல் அனைத்து தரப்பினரிடமும் இருக்கின்றது.

காரணம் மாறி மாறி ஆட்சி புரிதல். யுத்தம் முடிந்த பின்னரும் வந்து மாறி மாறி எல்லா கட்சிகளும் ஆட்சிக்கு வந்திருக்கின்றது. எல்லோருமே ஏறத்தாழ ஒரே விடயங்களை அவர்கள் செய்கின்ற பாணி வேறாக இருந்தாலும் தமிழ் மக்களை அழித்தொழிப்பதிலும் வடக்கு கிழக்கை சிங்கள பௌத்த மயமாக்கக்கின்ற செயற்பாட்டிலும் மிக வேகமாகவே செயற்பட்டு வருகின்றனர். ஆகவே இந்த 40 ஆண்டு கால போராட்டம் எதைக் கொண்டு வந்திருக்கின்றது என்று சொன்னால் ஒரு புறம் தமிழ் மக்களின் பிரச்சினை சர்வதேச மயப்படுத்தபட்டபோதிலும் அந்த சர்வதேச மயப்படுத்தப்பட்ட விடயம் என்பது தமிழ் மக்களுக்கு போதிய ஒரு தீர்வை வழங்கக்கூடிய நிலைக்கு அது வளரவில்லை. இலங்கை மீது சில சில அழுத்தகளை உருவாக்க மட்டுமே அது பயன்பட்டிருக்கின்றது. மாறாக சிங்கள ஆட்சியாளர்கள் தங்களுடைய முப் படைகளையும் தங்களுடைய அனைத்து அரசாங்க நிறுவனங்களையும் கட்டமைப்புக் களையும் தமிழர்களுக்கெதிராக வடக்கு கிழக்கிலே வேக மாக ஒரு சிங்கள பௌத்த மயமாக்கி தமிழ் மக்களை சிங்களத்துக்குள் களைத்து விடுகின்ற செயற்பாட்டினை கொண்டு வருவதற்கான ஒரு வாய்ப்பை ஏற்படுத்தியிருக்கின்றது. ஆகவே இது என்னைப் பொறுத்தவரைக்கும். இந்த சர்வ தேச மயப்படுத்தப்பட்ட ஒரு சாதகமான அம் சத்தையும் தமிழ்தலைவர்கள் எந்தளவிற்கு வினைத்திறனுடமும் இராஜதந்திரத்துடனும் கையாள்கிறார்கள் என்பதே பொறுத்தே இந்த 40 ஆண்டு கால கறுப்பு யூலை அதனுடைய விளைவுகள் என்பது தமிழ் மக்களுக்கு பயனுள் ளதாக அமைகிறது.

**இந்தியாவை இந்த பிரச்சினைக்குள் இழுத்து வருவதற்கு இந்த கறுப்பு யூலை படுகொலைகள் காரணமாக அமைந் திருந்ததா?**

கண்டிப்பாக அதாவது 1983 ஆம் ஆண்டில் இந்த சர்வதேச மயப்படுத்தல் என்பதிலேயே மிக முக்கியமான விடயம் இந்தியா நேரடியாக இலங்கை இனப் பிரச்சினையில் தலையிட்டது என்பது. அது நேரடியாக தலையிட்டது மூலம் இன மோதல் ஆயுதப் போராட்டம் வலிமை பெற்றது என்பது. அதேவேளை அவர்களுக்கு ஒரளவான ஒரு தீர்வை நோக்கி அது நகர்த்தப்பட்டது என்பதும். இன்று வரை இந்தியா அந்த விடயத்தை ஏதோவொரு வகையில் கையாண்டுகொண்டு இருந்தது. தமிழ் மக்களுக்கு அது திருப்தியாக 3 இல்லாவிட்டாலும் தமிழ் மக்களுக்கு போதிய தீர்வாக இல்லாவிட்டாலும் இந்தியா தொடர்ச்சியாக இன்று 40 ஆண்டு காலமாக தொடர்ச்சியாக அந்த விடயத்தை கையாண்டு கொண்டிருக்கின்றது என்பது கண்டிப்பாக தமிழ் மக்களுக்கு ஒரு பொசிற்றிவான விடயம். அதை வெற்றிகரமாக கையாள்வதற்கான உத்திகளை வழங்கவேண்டியது எங்களுடைய பொறுப்பாக இருக்கின்றது. அதனைத் தொடர்ந்து அன்றைய கால கட்டத்திலே உங்களுக்கு தெரியும் பனிப்போர் கால கட்டம். இந்த பனிப்போர் கால கட்டத்திலே அமெரிக்கா உட்பட ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் இவை அனைத்தும் வந்து இலங்கை அரசிற்கு மிகவும் வலுப்படுத்தி போராட்டத்தை நசுக்குவதற்கான எல்லா வகையான உத்திகளையும் கையாண்டன. அந்த வகையிலே இந்தியா வந்து ஒரு சுனிப் உடைய நண்பனாக இருந்தது. ஆகவே இந்தியாவையும் இந்த விடுதலைப் போராட்டத்திலே பங்கு பற்றியவர்களையும் இந்தியாவையும் பிரித்து விடுகின்ற ஒரு இராஜ தந்திரத்தை அமெரிக்க உட்பட்டு அதனுடைய நட்பு நாடுகள் அல்லது இலங்கையினுடைய இராஜ தந்திரம் என்றுகூட சொன்னலாம். இலங்கையி னுடைய இராஜ தந்திரத்திற்கு வலுச்சேர்ப்பதாக அவர்களுடைய செயற்பாடுகள் அமைந்தன. அவை இந்தியா விற்கும் விடுதலைப் போராளிகளுக்கும் இடையே ஒரு இடைவெளியை ஏற்படுத்தி அல்லது ஒரு பிரிவினையை ஏற்படுத்துகின்ற நோக்கம் அங்கே செயற்பட்டதாகவே நான் கருதுகின்றேன்.

ஆனால் இன்றைக்கு உலகம் மாறி இருக்கின்றது. காரணம் இண்டைக்கு பனிப் போர் கால கட்டம் முடிவுற்று இண்டைக்கு என்ன சொல்வது அணிகள் மாறியிருக்கின்றன. பல்வேறு சர்வதேச அரசியல் மாற்றங்கள் காரணமாக அணிகள் மாறி இருக்கின்றன. இருந்தபோதும் வந்து இண்டைக்கு அமெரிக்கா ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் உட்பட பல்வேறு நாடுகள் இலங்கையிலேயே மனித உரிமைகள் தமிழ் மக்களுக்கு எதிரான ஒடுக்குமுறைகள் மனிதஉரிமைமீறல்கள்மற்றதுஇமரேரியன்லோ வயயேசன் அதாவது மனித குலத்திற்கெதிரான செயற்பாடுகள் போன்றவை தொடர்பாக இலங்கை தன்னை மாற்றி கொள்ளவேண்டும் என்று அழுத்தங்களை கொடுக்கவேண்டும் எனினும் தொடர்ச்சியாக இலங்கை தன்னுடைய இலங்கை ஒரு சிங்கள பௌத்த நாடாக தன்னுடைய வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்ற போது அதற்கு ஈடுகொடுக்கின்ற வகையில் சர்வதேச செயற்பாடுகள் இல்லை என்பதை கண்டிப்பாக நாங்கள் கவனத்தில் கொள்ளவேண்டியது.

அதனை கவனத்தில் கொள்ளவேண்டிய தன் நோக்கம் என்னென்று சொன்னால் இதிலிருந்து மாற்றங்களை சர்வதேச சமூகம் எந்தளவிற்கு கொண்டுவர முடியும் சர்வதேச சமூகம் என்று சொல்லுகின்றபோது பல்வேறு இந்த பிரச்சினையை கையாளக்கூடிய அல்லது இந்தப் பிரச்சினையை கையில் எடுத்துக்கக்கூடிய பல்வேறு நாடுகளும் தங்களுடைய வெளியுறவு கொள்கையின் அடிப்படையிலிருந்துதான் இவற்றைக் கையாளுகின்றன. அதனுடைய வெளியுறவுக் கொள்கைகளுக்கு முன்னால் எந்தவொரு நாடும் வெளியுறவுக் கொள்கையை வந்து தன்னுடைய நாட்டினுடைய நலனோடு தன்னுடைய நாட்டினுடைய பாதுகாப்பு உட்பட பொருளாதாரம் உட்பட்ட பல்வேறு நலன்களோடும் தொடர்புபடுத்தியதே பார்க்கும். அந்த வகையிலேயே சில வேளை வந்து அந்த நாடுகள் வந்து தங்களுடைய நலன்களுக்கு முன்னுரிமை வழங்குவது அதாவது இந்த விடயங்களை கையாண்டு தங்களுடைய நலன்களைப் பெற்றுக்கொள்வதாக இருக்கலாம். அல்லது தங்களுடைய நலன்களோடு ஓரளவிற்கு இந்த விடயங்களை இணைந்துகொள்வதாக இருக்கலாம். ஆகவே தமிழ் தலைமையினுடைய உத்திகள் எப்பிடி இருக்கவேண்டும் என்று சொன்னால் கண்டிப்பாக இது சர்வ தேச மயப்படுத்தபட்டுள்ளது என்கின்ற சாதகமான சூழ்நிலையை அனைத்து நாடுகளும் காத்திரமாக தமிழ் மக்களினுடைய தீர்வோடு இணைத்துகொள்ளக்கூடிய ஒரு கொள்கையை உருவாக்குவதற்கான லோபி அல்லது வேலைத் திட்டங்களை நாங்கள் காத்திரமான முறையில் இராஜ தந்திரரீதியாக செயற்படுத்தவேண்டியதாக இருக்கிறது. இந்தியா உட்பட ஏனென்று சொன்னால் இந்தியா மட்டும் இண்டைக்கு இருக்கக்கூடிய சர்வ தேச அரசியல் சூழ்நிலையில் ஐரோப்பிய நாடுகள் அமெரிக்கா உட்பட்ட நாடுகள் எங்களுக்கு எந்தளவுதான் எங்கள் மீது கரிசனை காட்டுவதாக இருந்தால்கூட அவர்கள் இந்தியாவை மேவி இந்த பிராந்தியத்திலே தங்களுடைய செயற்பாடுகளை இனப்பிரச்சனைக்கு தீர்வு தொடர்பான தங்களுடைய செயற்பாடுகளை முன்னெடுக்க மாட்டார்கள்.

காரணம் இண்டைக்கு இருக்கக்கூடிய சர்வதேச அரசிலயம் அணி மாற்றங்களை பொறுத்தவரைக்கும் இந்தப் பிராந்தியத்திலே பெரும்பாலான நாடுகள் அல்லது பெரும்பாலான வல்லரசுகள் இந்தப் பிராந்தியத்திலே இந்தியா தான் இந்த பிராந்தியத்தினுடைய ஜனநாயகத்துக்கான பாதுகாவலன் போன்ற ஒரு விசயத்தை அங்கீ கரிக்கின்றார். ஆகவே இந்தியாவை மேவி அவர்கள் செய்யமாட்டார்கள் என்ற வகையிலே நாங்கள் எங்களுக்கு முன்னுரிமைகொடுத்து நாங்கள் செயற்படுகின்ற விடயமாக இந்தியாவை நாங்களும் எவ்வாறு எங்களுடைய இனப்பிரச்சினை தீர்வுக்கு கையாள்வது அல்லது அதற்கேற்றவகையில் இந்தியாவினுடைய கொள்கை மாற்றத்திற்கான கருத்துருவாக்கங்களை எவ்வாறு ஏற்படுத்துவ தும் என்கின்ற உத்திகளை வகுத்து நாங்கள் காத்திரமாக செயற்படவேண்டும்.

வெறுமனே எங்களுடைய அவர்கள் வருகின்ற போது சந்திப்பதோ அல்லது சில கடிதங்கள் போல அல்லாமல் இந்தியாவிலே வந்து இந்தியாவினுடைய வெளியுறவுக் கொள்கையி லேயே எங்களுடைய இனப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காத்திரமான இடத்தை வகிக்கின்ற வகையியேலே செயற்படுத்துவதற்கு மட்டுமே என நான் நினைக்கின்றேன். எங்கள் கறுப்பு யூலை பொறுத்த இந்த 4 இந்தியாவினுடைய தலையீடு அல்லது இந்தியாவினுடைய பணியாக என்பதே வந்து ஒரு அர்த்தமுள்ளதாக ஆக்கும் என்று நான் நிலைக்கின்றேன

• • •